பக்கங்கள்: பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 வைகாசி 16 சனிக்கிழமை (29-05-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:186

## சமாதானப் பேச்சுக்கான

# இணக்கநிலை ஏற்பட எட்டாத இடைவெளி!

## கதிர்காமர் இந்தியா பயணம்

இலங்கை வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் இன்று இந்தியா புறப்பட்டுச் செல்கிறார்.

இந்தியப் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங், வெளிவிவகார அமைச்சர் நட்வர்சிங் உட்படப் புதிய அரசின் பிரதிநிதிகளை லக்ஷ்மன் கதிர்காமர் சந்தித்துப் பேச்சு நடத்த உள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தியாவில் புதிய அரசு பதவி ஏற்ற பின்னர் அங்கு செல்லும் லக்ஷ்மன் கதிர்காமர் இலங்கையின் தற்போதைய அரசியல் நிலை குறித்தும் சமாதான முயற்சிகளின் நிலை குறித்தும் இந்தியத் தலைவர்களுக்கு விளக்குவார் என்று கூறப்படுகிறது.

## பயன் ஏதும் கிட்டாத நிலையில் நோர்வே திரும்பினார் சொல்ஹெய்ம்

கொழும்பு,மே29

**அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்கச் செய்வதற்கான முயற்சியில் ஈடுபட்ட நோர்வே அனுசரணைக்குழுவின் விசேட பிரதிநிதி எரிக் சொல்ஹெய்ம் இலங்கை வந்திருந்தார். எனினும், இந்தத் தடவை அவரது பயணத்தால் சமாதான முயற்சிகளில் முன்னேற்றகரமான பயன் ஏதும் கிட்டவில்லை.**

**அரசு, புலிகள் ஆகிய இருதரப்பினரின் நிலைப்பாடுகளிலும் நெருங்க முடியாத இடைவெளி தொடர்ந்து நிலவுவதாகத் தெரிகின்றது.**

இந்த நிலைமை காரணமாக அரசு - புலிகள் ஆகிய இருதரப்பினருக்கும் இடையே உடனடியாக நேரடிப் பேச்சுக்கள் நடப்பதற்கான சாத்தியம் இல்லை என்றும் கூறப்படுகின்றது.

மாகாணசபைத் தேர்தலின் பின்னர் - பெரும்பாலும் ஓகஸ்ட்டில் மீண்டும் பேச்சுக்கான முயற்சிகள் ஆரம்பிக்கப்படும் வாய்ப்பு இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

பேச்சை மீண்டும் ஆரம்பிப்பதற்கு நான்கு அடிப்படை விடயங்களைப் புலிகள் வலியுறுத்தி வருகின்றனர். அதில் அவர்கள் விடாப்பிடி நிலையில் உள்ளனர்.

ஆனால், அந்த நான்கு அடிப்படை அம்சங்களில் மூன்றுக்கு இணங்கிய இலங்கை அரசுத் தரப்பு, நாலாவது அம்சத்தையே ஏற்க மறுத்து வருகின்றது.

அதுவே முக்கிய விவகாரம் என்று புலிகளும் கருதுகின்றனர்.

இந்த இருதரப்பு விடாப்பிடி நிலை காரணமாக பேச்சுக்குத் திகதி நிர்ணயிப்பது சாத்தியமற்றுப்போயுள்ளது.

"முதலில் இடைக்கால நிர்வாக சபை குறித்தே பேசவேண்டும். அதல் தீர்வுகண்டு அதை நடைமுறைப்படுத்திய பின்னரே இனப்பிரச்சினைக்கான இறுதித் தீர்வு குறித்து ஆராயவேண்டும்." - என்பது புலிகளின் தலைமையின் திட்டவட்டமான நிலைப்பாடாக

(16ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை சமாதானப் பேச்சில் இந்தியா ஆக்கபூர்வமான பங்களிப்பு

### புதிய அரசின் செயல் திட்டத்தில் அறிவிப்பு

புதுடில்லி,மே29

• இலங்கைத் தமிழர்களின் உரிமைகளைப் பாதுகாக்க அந்த நாட்டின் ஒற்றுமை மற்றும் இறையாண்மை பாதிக்கப்படாத வகையில் இலங்கையின் சமாதானப் பேச்சில் இந்தியா ஆக்கபூர்வமான பங்களிப்பை வழங்கும்.

- இவ்வாறு இந்தியாவில் புதிதாக பதவியேற்றுள்ள ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசின் குறைந்தபட்ச செயற்றிட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறைந்த பட்ச செயல்திட்டத்தை புதிய அரசு நேற்றுமுன்தினம் வெளியிட்டது. இதில் தி.மு.க. மற்றும் ம.தி.மு.க. ஆகிய தமிழகக் கட்சிகளின் கோரிக்கைகள் பல சேர்க்கப்பட்டுள்ளன.

தமிழகத்தின் காவிரி நதி நீர்ப் பிரச்சினைக்குத் தீர்வு காணவும் தமிழ்மொழியை செம்மொழியாகப் பிரகடனப்படுத்தவும், சேது சமுத்திரத் திட்டத்தை துரிதப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த இரண்டு ஆண்டுகளாக 'பொடா' சட்டம் முறைகேடாகப் பயன்படுத்தப்பட்டது குறித்து ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு தனது கவலையை வெளிப்படுத்தியுள்ளதுடன், அதனைத் தடுக்கும் வகையில் 'பொடா' சட்டம் ரத்துச்செய்யப்படும் என்றும் அறிவித்துள்ளது.

தென்னக நதிகளை இணைப்பது தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்ளவும் குறைந்தபட்ச செயல்திட்டம் இணக்கம் தெரிவித்துள்ளது அதில் கூறப்பட்டுள்ள விவரங்கள் வருமாறு:-

(16ஆம் பக்கம் பார்க்க)

# புலிகள் குறித்த இந்திய நிலைப்பாட்டில் நாளடைவில் பாரிய மாற்றம் ஏற்படும்!

## ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ நம்பிக்கை



நாள்கள், மாதங்கள் கடந்து செல்கையில் விடுதலைப் புலிகள் தொடர்பான இந்தியாவின் நிலைப்பாட்டில் பாரிய மாற்றம் ஏற்படும்.

- இவ்வாறு நம்பிக்கை வெளியிட்டார் ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ.

பி.பி.சி. தமிழோசைக்கு அவர் நேற்றிரவு வழங்கிய செவ்வியிலேயே இதனைக் குறிப்பிட்டார்.

அப்போது வைகோ தெரிவித்ததாவது:-

1986/87 காலப்பகுதியில் கே. என்.டிக்ஸிற் அவர்கள் கொண்டிருநத கருத்து கால ஓட்டத்தில் நிச்சயமாக மாறியிருக்கும் என்று நான் கருதுகிறேன. ஏனெனில், இலங்கைத் தமிழர்களின் பிரச்சினை இன்று சர்வதேச சமூகத்தின் பார்வைக்கு முன்வைக்கப்பட்டிருக்கிறது. உலகத்தின் பல்வேறு நாடுகளும் இந்தப் பிரச்சினையை அங்கீகரித்திருக்கின்றன.

அதன் விளைவாகவே இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைக்குச் சுமுகமான தீர்வினை ஏற்படுத்தி அவர்கள் உரிமையோடும் மானத்தோடும் வாழ பேச்சு மூலமாகத் தீர்வு காண்பதற்கு நோர்வே அரசு தொடக்கிவைத்த அமைதிப் பேச்சுக்கு ஐ.நா.சபை, தாய்லாந்து, ஜப்பான் உள்ளிட்ட பல்வேறு நாடுகள் ஆதரவு தெரிவித்துள்ளன. இந்தநிலையில், இலங்கைத் தமிழர்களின் பிரச்சினை ஒரு புதிய வடிவம் பெற்றிருக்கிறது.

இந்தப் பின்னணியில் இந்தியப் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்களிடமும் பாதுகாப்பு அமைச்சர் பிரணாப் முகர்ஜி அவர்களிடமும் நாங்கள் வற்புறுத்தியதன் காரணமாக ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசினுடைய செயற்றிட்டத்தில் இலங்கைத் தமிழர்களின் அபிலாசைகளை நிறைவேற்றுகின்ற வகையில் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு இந்தியா ஆக்கபூர்வமாக உதவும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இது எனக்கு மிகுந்த நம்பிக்கையினை அளிக்கிறது. வெளிவிவகார அமைச்சர் நட்வர் சிங்குடன் நான் பேசியபோதும் இது தொடர்பாக சில கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறேன்.

இந்தியாவின் பாதுகாப்பு ஆலோசகராக கே.என்.டிக்ஸிற்றை நியமித்திருப்பது தொடர்பாக நாம் எந்தவிதமான ஆட்சேபத்தையும் தெரிவிக்கவில்லை. ஏனெனில், கடந்த காலத்தில் நடந்த எல்லாவற்றையும் மறந்து ஒரு புதிய அத்தியாயத்தைத் தொடங்கவேண்டும் என்பதே எனது கருத்து என்றார் வைகோ.

இந்தியாவில் விடுதலைப் புலிகள் மீதான தடை நீடிக்கப்பட்டிருப்பது குறித்துக் கேட்கப்பட்டபோது வைகோ கூறியதாவது:- ஒரு கருத்தை மிகவும் அழுத்தமாக இந்திய அரசுக்கு தெரிவிப்பதற்குப் பல சக்திகள் முயன்றுருக்கின்றன. எனவே, திடீரென்று ஒரு மாற்றத்தை எதிர்பார்க்க முடியாது. இம்மாதிரியான எங்களுடைய கோரிக்கையை முழுமையாக ஏற்காவிடினும் செயற்றிட்டத்தில் இதனை இணைத்திருப்பது எங்களுக்கு மனநிறைவைத் தருகின்றது.

(16ஆம் பக்கம் பார்க்க)

### மோதல்களைத் தவிர்க்கும் வகையில்

## இலங்கை - இந்திய மீனவர்கள் தங்களுக்குள் இணக்க உடன்பாடு

கொழும்பு,மே29

வங்காள விரிகுடாக் கடலில் இலங்கைக் கரையில் இருந்து மூன்று கடல்மைல்களுக்கு அப்பாலும் -

பாக்குநீரிணைக் கடலில் இலங்கைக் கரையில் இருந்து ஐந்து கடல் மைல்களுக்கு அப்பாலும் -

இந்திய மீனவர்கள் இழுவைப் படகுகள் மூலம் மீன்பிடிக்க இணக்கம் காணப்பட்டுள்ளது.

இலங்கை - இந்திய மீனவர்கள் சங்கங்களின் பிரதிநிதிகளுக்கு இடையில் நேற்றுக் கொழும்பில் நடந்த சந்திப்பில் இந்த இணக்கம் ஏற்பட்டது.

இந்தச் சந்திப்பில் இராமேஸ்வரம் மீன்பிடிச் சங்கத்தின் தலைவர் எஸ். அருளானந்தன் தலைமையில் 20 மீனவர்கள் கலந்துகொண்டனர்.

யாழ்ப்பாணம், மன்னார், நீர்கொழும்பு ஆகிய இடங்களில் செயற்படும் மீன்பிடிச் சங்கங்களின் பிரதிநிதிகளும் இச்சந்திப்பில் கலந்துகொண்டனர். (16ஆம் பக்கம் பார்க்க)

### யாழ்.மாவட்ட அரசியல்துறையினருடன் தமிழ் எம்.பிக்கள் சந்திப்பு

யாழ்ப்பாணம்,மே29

விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் துறையினருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று வெள்ளிக்கிழமை, யாழ். மாவட்ட அரசியல்துறை அலுவலகத்தில் இடம்பெற்றுள்ளது.

இச்சந்திப்பில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சோ.சேனாதிராசா, மா.க.ஈழவேந்தன், பத்மினி சிதம்பரநாதன்,

(16ஆம் பக்கம் பார்க்க)

### வற்றாப்பளை உற்சவத்தை ஒட்டி

## ஏ-9 பாதை திறந்திருக்கும் நேரம் இரு தினங்களுக்கு நீடிக்கப்படும்

யாழ்ப்பாணம்,மே29

வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய உற்சவத்தையொட்டி நாளையும் நாளைமறுதினமும் முகமாலை மற்றும் புளியங்குளம் சோதனை நிலையங்களூடான போக்குவரத்து ஒருமணிநேரம் நீடிக்கப்பட்டுள்ளது.

அரசும் விடுதலைப் புலிகளும் விடுத்த கோரிக்கையை அடுத்து பக்தர்களின் வசதி கருதி இரு சோதனை நிலையங்ளிலும் மாலை 6.30 மணி வரை தமது பிரதிநிதிகள் பிரசன்னமாகி இருப்பர் என்று செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் யாழ்.வதிவிடப் பிரதிநிதி தெரிவித்தார்.

வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய உற்சவம் நாளைமறுதினம் திங்கட்கிழமை நடைபெற உள்ளது.

இம்முறை இந்த ஆலயத் திருவிழாவில் பெருந்திரளான பக்தர்கள் கலந்துகொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதனாலேயே பாதை திறக்கும் நேரத்தை நீடிக்கும்படி கோரிக்கை விடப்பட்டிருந்தது.

# உலர் உணவு நிவாரண விநியோகத்தில் நிர்வாக ரீதியான தாமதம் ஏதுமில்லை!

## தரமான அரிசி கொள்வனவில் சிறிது தாமதம் என்கிறார் அரச அதிபர்

யாழ்ப்பாணம்,மே29

குடாநாட்டில் உலர் உணவு விநியோகத்தில் அசமந்தப்போக்கோ நிர்வாகத் தாமதமோ இல்லை. உலர் உணவு நிவாரணம் பெறும் மக்களுக்கு கூடிய நன்மை கிடைக்கவேண்டும் என்ற அடிப்படையில் சகல நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன.

யாழ். அரச அதிபர் செ.பத்மநாதன் இவ்வாறு தெளிவுபடுத்தியுள்ளார்.

உலர் உணவு நிவாரணத்தை உடனடியாக வழங்க நடவடிக்கை எடுக்காவிட்டால் பெரும் மறியற்போராட்டம் நடத்தப்படும் என்று வெகுஜன அமைப்புக்கள் விடுத்திருக்கும் எச்சரிக்கையை அடுத்து அரச அதிபர் இதனைத் தெரிவித்திருக்கிறார்.

இது தொடர்பாக தமது நிலைப்பாட்டை விளக்கி அவர் நேற்று அறிக்கை ஒன்றை வெளியிட்டார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இன்று (28.05.2004) தங்களது பத்திரிகையில் 'உலர் உணவு வழங்காவிடின் மறியற் போராட்டம்' என்ற தலைப்பின் கீழ் வெளியிடப்பட்டுள்ள செய்தி தொடர்பாகப் பின்வரும் உண்மை நிலையை மக்களுக்குத் தெரியப்படுத்தும்படி கேட்டுக்கொள்கிறேன்.

★ யாழ். மாவட்டத்தில் உலர் உணவு நிவாரண விநியோகம் தொடர்பாகக் கடைப்பிடிக்கவேண்டிய அரசாங்க நடைமுறை, இலங்கை முழுவதும் அமுல்படுத்தப்படும் நடைமுறையே ஆகும். இதன் அடிப்படையில் இடம்பெயர்ந்து, மீளக்குடியமர முடியாது தற்பொழுது முகாம்களிலும் முகாம்களுக்கு வெளியேயுள்ள குடும்பங்களுக்கும் 22.02.2002 இற்குப் பின்பு மீளக்குடியமர்ந்து, மீளக்குடியமர்த்தல் படியாகிய 25,000 ரூபா பெற்ற குடும்பங்களுக்கும் எந்தவித தடையும் இன்றி உலர் உணவு நிவாரணம் வழங்குவதற்கு 2004 பெப்ரவரி மாதம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் பெப்ரவரி மாதத்திற்கான விநியோகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மார்ச் மாதத்திற்கான உலா உணவு நிவாரண விநியோகம் அடுத்த மாதம் 10ஆம் திகதியளவில் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

★ 22.02.2002 இற்கு பின்பு மீளக்குடியமர்ந்து, மீளக்குடியமர்த்தல் படியாகிய 25,000 ரூபா பெற்ற குடும்பங்களுக்கு 25,000 ரூபா பெற்ற தினத்திலிருந்து ஒரு வருடத்திற்கு நிவாரணம் வழங்கப்படும்.

★ உலர் உணவு நிவாரணத்திற்கான அரிசி கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களிலிருந்து எங்களால் கொள்வனவு செய்யப்பட்டு சிறந்த ரக அரிசி மக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இப்பிரதேசங்களில் நெல் அறுவடையில் ஏற்பட்ட காலதாமதம் காரணமாகவும் அரிசி விலையில் அதிகரிப்புக் காணப்பட்ட காரணத்தினாலும் அதனைக் குறைத்து மக்களுக்கு நன்மை தரும் அடிப்படையில் சந்தை விலை 32,35 ரூபா அளவில் இருக்கும்போது நான் இவற்றை 28.50 இற்கு கொள்வனவு செய்து விநியோகிக்க நடவடிக்கை எடுத்த காரணத்தினால் சிறிது காலதாமதமாகிவிட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

- இவ்வாறு அரச அதிபரின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(ஐ-3)

# கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் யாழ். மாவட்ட அணி வெற்றி!

யாழ்ப்பாணம்,மே.29

19 வயதுக்குட்பட்டோருக்கான யாழ். மாவட்ட கிரிக்கெட் அணிக்கும் திருகோணமலை மாவட்ட அணிக்கும் இடையே நேற்று தம்புள்ளவில் நடைபெற்ற ஆட்டத்தில் யாழ். மாவட்ட அணி 9 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றுள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய திருகோணமலை மாவட்ட அணி அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 32 ஓட்டங்களைப் பெற்றது.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய யாழ். மாவட்ட அணி 7 ஓவர்களில் ஒரு விக்கெட் இழப்புக்கு 34 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது.

யாழ். மாவட்ட அணியின் சார்பில் சென் ஜோன்ஸ் கல்லூரியின் எம். மயூரன் 5 விக்கெட்டுக்களையும் அணியின் உப தலைவரான சென்பற்றிக்ஸ் கல்லூரியைச் சேர்ந்த ஞா.செல்வன் லொயிட் மூன்று விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

யாழ். மாவட்ட அணி, இன்று வவுனியா மாவட்ட அணியுடன் மோதுகின்றது. (ஒ-9)

**வன்னியிலும், தீவகத்திலும் பற்றாக்குறையைத் தவிர்க்க**

# ஓய்வுபெற்ற ஆசிரியர்களை மீண்டும் பணிக்குச் சேர்க்க முடிவு

யாழ்ப்பாணம்,மே29

வன்னி, தீவகம் போன்ற இடங்களில் ஆசிரியர்கள் பற்றாக்குறை நிலவும் இடங்களில் இளைப்பாறிய ஆசிரியர்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் நியமனம் வழங்க வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் அசோக ஜெயவர்த்தனா இணக்கம் தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் ஆளுநரைச் சந்தித்த இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கக் குழுவினிடமே இந்த இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு மீள் நியமனம் பெறும ஆசிரியர்கள் அவர்களது ஓய்வூதியத்துடன் மேலதிகமாக அவர்கள் இளைப்பாறும்போது பெற்ற மாதாந்தச் சம்பளம் கொடுப்பனவாக வழங்கப்படும் எனவும் ஆளுநர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு ஓய்வுபெற்ற ஆசிரியர்கள் கற்பித்தல் செயற்பாட்டில் ஈடுபட விரும்பினால் தாம் வசிக்கும் பகுதிக் கல்வி வலயங்களில் தம்மைப் பதிவு செய்யுமாறு இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் த.மகாசிவம் கேட்டுள்ளார்.

தீவகம், வன்னியில் கிளிநொச்சி, முல்லைத்தீவு, துணுக்காய், மடு, மன்னார், வவுனியா ஆகிய கல்வி வலயங்களில் கடும் ஆசிரியர்கள் பற்றாக்குறை நிலவிவருவது குறிப்பிடத்தக்கது.

(ஐ-12)

# தென்மராட்சியில் நேற்று மறியல்

தென்மராட்சி,மே29

விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயத்திற்கு விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய பாடங்களுக்கான ஆசிரியர்களை நியமிக்கக் கோரி நேற்றுத் தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகம் முன்பாக மறியல் போராட்டம் நடத்தப்பட்டது.

மேற்படி பாடசாலை மாணவர்கள், பழைய மாணவர்கள் பெற்றோர் உட்பட 250 இற்கும் மேற்பட்டவர்கள் நேற்றுக் காலை வலய அலுவலகம் முன்பாக மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். உத்தியோகத்தர்கள் எவரையும் அலுவலகம் உள்ளே செல்ல அனுமதிக்காததால் கல்வி வலய அலுவலகப் பணிகள் இரண்டு மணி நேரம் ஸ்தம்பித்தன.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் காலை 10 மணிக்கு வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் க.உதயகுமாரிடம் மகஜரைக் கையளித்த பின்னர் அங்கிருந்து சென்றனர்.

(ஒ-117)

# யுத்தநிறுத்தம் வடக்கு - கிழக்கின் அபிவிருத்திக்குக் கைகொடுக்கவில்லை

## ஆசிய அபிவிருத்தி வங்கி அதிகாரிக்கு எடுத்துரைப்பு

யாழ்ப்பாணம்,மே29

போர்நிறுத்தம் ஊடாகப் பிறந்த சமாதானச் சூழல் தென்னிலங்கையின் இயல்பு வாழ்வுக்கும் அபிவிருத்திக்கும் வழிவகுத்ததே தவிர வடக்கு-கிழக்கு மக்களின் இயல்பு வாழ்வுக்கும் அபிவிருத்தி முயற்சிகளுக்கும் கைகொடுக்கவில்லை.

- இவ்வாறு தெரிவித்தார் யாழ். மாவட்ட மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் எஸ்.பரமநாதன்.

யாழ். அரச செயலகத்தில் நேற்று முன்தினம் ஆசிய அபிவிருத்தி வங்கியின் பிரதித் தலைவர் லீக்கியுன் ஜின்னைச் சந்தித்து அவரோடு கலந்துரையாடியபோதே பரமநாதன் இதனை அவரிடம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஏ-9 பாதை புனரமைக்கப்பட்டதன் மூலம் தென்னிலங்கை மக்களுக்கும் வடக்கு மக்களுக்கும் இடையில் உறவுப்பாலம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளமையானது நல்ல விடயம். இப்புனரமைப்புப் பணிகளில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் பணி பாராட்டுக்குரியது.

இதேவேளை, நூறு ஆண்டுகளுக்கு மேலாகப் புனரமைப்புக்கள் செய்யப்படமால் உள்ள யாழ்.குடாநாட்டின் ஏனைய வீதிகளையும் புனரமைக்க ஆசிய அபிவிருத்தி வங்கி பெருமனதுடன் உதவவேண்டும்.

இதேவேளை -

• டோக்கியோ மாநாட்டில் ஒதுக்கப்பட்ட நிதி வடக்கு - கிழக்கு அபிவிருத்திப் பணிகளுக்கு குறைவாக உள்ளது.

கடந்த காலங்களில் வெளிநாடுகள் புரிந்த நிதியுதவிகளை தென்னிலங்கை அபிவிருத்திக்கு சிங்கள அரசுகள் பயன்படுத்தியுள்ளன. வடக்கு - கிழக்கில் எவ்வித அபிவிருத்திப் பணிகளும் முன்னெடுக்கப்படவில்லை. இவ்வாறு பரமநாதன் தெரிவித்தார்.

(ஐ-12)

# 3ஆம் தரப்பை வலியுறுத்தி நேற்று கொழும்பில் முஸ்லிம்கள் ஆர்ப்பாட்டம்

சமாதானப் பேச்சுக்களில் முஸ்லிம்களையும் ஒரு தனித்தரப்பாக ஏற்றுக் கொள்ளுமாறு வலியுறுத்தி நேற்று ஜும்ஆ தொழுகையின் பின்னர் கொழும்பு தெவட்டகஹ ஜும் ஆ பள்ளிவாசலுக்கு முன்னால் ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றது.

'முஸ்லிம்களின் உரிமைகள் மற்றும் அபிவிருத்திக்கான இயக்கம்' இந்த ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்திருந்தது.

ஆர்ப்பாட்டக்காரர்கள் பல்வேறு கோஷங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறு அமைதியான முறையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

★ 'அரசே சமாதானப் பேச்சில் முஸ்லிம்களையும் கவனத்திற் கொள்'.

★ விடுதலைப் புலிகளே எம்மையும் அரவணைத்துச் செல்லுங்கள்'

★ முஸ்லிம் தலைவர்களே! சுயநலத்தைக் கைவிட்டு சமூக உரிமைகளுக்காகக் குரல் கொடுக்க முன்வாருங்கள்'

- இவ்வாறான கோஷங்கள் அப்பதாகைகளில் எழுதப்பட்டிருந்தன.

(க)

**விபத்துகளுக்குக் காரணமான**

# வீதித்தடைகள், காவலரண்களை அகற்ற படையினரிடம் புலிகள் கோரிக்கை

யாழ்ப்பாணம்,மே29

குடாநாட்டின் வீதி விபத்துக்கள் அதிகரிப்பதற்கு வீதிகளில் உள்ள வீதித் தடைகள் மற்றும் காவலரண்கள் ஆகியவையும் காரணமாக உள்ளன என்றும் -

ஆகவே அவற்றை அகற்றவேண்டும் என்றும் -

விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறையினர் படை அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ். அலுவலகத்தில் நேற்று முற்பகல் 10 மணிக்கு நடந்த படையினர் - விடுதலைப் புலிகள் சந்திப்பில் இக்கோரிக்கை விடுக்கப்பட்டது.

பொலீஸ் தரப்பினருடன் இதுதொடர்பாக ஆராய்ந்து, பொதுமக்களுக்கு அசௌகரியமாக இருக்கும் வீதித் தடைகள் மற்றும் காவலரண்களை அகற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்று படைத் தரப்பினர் அப்போது உறுதியளித்தனர்.

கண்காணிப்புக்குழுவின் யாழ். மாவட்டத் தலைவரான அனித்தா பேச்சோன் அம்மையார் தலைமையில் நடந்த இச்சந்திப்பில் விடுதலைப் புலிகளின் சார்பில் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் கி.பாப்பா, ஊடகப் பொறுப்பாளர் இமையவன் மற்றும் சுதாஸ் ஆகியோரும் -

படைத்தரப்பில் யாழ். மாவட்டப் படைகளின் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபால, கடற்படை அதிகாரி அவிவடிலந், கேணல் கடுவல்ல மற்றும் யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் வான குரு ஆகியோரும் -

கண்காணிப்புக் குழுவின் சார்பில் யாழ். மாவட்ட பிரதித் தலைவர் மரியலிஸ் பேக் சொன் மற்றும் றொனி பியசன், றொபேட் கால்சன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

குடாநாட்டில் மக்களின் வாழ்வியலுக்கு படையினரால் ஏற்படும் தொல்லைகள் குறித்து விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் விளக்கிக் கூறினர்.

'கடற்றொழிலாளர்கள் சுதந்திரமாகத் தொழிலை மேற்கொள்வதில் உள்ள தடைகளை அகற்றி சுமுக நிலையைத் தோற்றுவிக்கவேண்டும் என்றும் விடுதலைப் புலிகள் கோரிக்கை விடுத்தனர்.

பலாலி உயர் பாதுகாப்பு வலயத்தில் இருந்து 600 மீற்றருக்குள் அப்பால் விவசாயம் செய்ய அனுமதிக்கபட்டுள்ளது. ஆனால், சில பகுதிகளில் விவசாயம் செய்ய தடைகள் உள்ளன. அத்தடைகள் அகற்றப்படவேண்டும் என்றும் புலிகள் தரப்புக் கோரிக்கை விடுத்தது.

பருத்தித்துறைக் கடலில் அண்மையில் கடற்படைப் படகு மீனவர் படகை மோதிய சம்பவம் போன்று எதிர்காலத்தில் இடம்பெறுவதைத் தவிர்க்கவேண்டும் என்றும் கோரிக்கை ஒன்றை விடுதலைப் புலிகள் முன்வைத்தனர்.

தென்னை, பனை வளங்களை இராணுவத்தினர் வகைதொகையின்றி அழிப்பதை முற்றாக நிறுத்தவேண்டும் என்றும் -

முன்னர் இராணுவ முகாம்கள மண் அணைகள் அமைந்திருந்த பிரதேசங்களில் மக்கள் மீளக்குடியமர வசதியாக அந்தப் பகுதிகளில் உள்ள மிதிவெடிகளைத் துரிதமாக அகற்ற வேண்டும் என்றும் - விடுதலைப் புலிகள் வலியுறுத்தினர்.

விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் முன்வைத்த கோரிக்கைகளை ஆராய்ந்து நடவடிக்கை எடுப்பதாகப் படைத்தரப்பினர் உறுதியளித்தனர்.

(ஒ-3-ரி)

# ஸ்ரீபாத கல்வியியல் கல்லூரி மாணவரின் ஊர்வலம் மீது பொலீஸார் வெறியாட்டம்!

## ஹற்றனில் நேற்று முற்பகல் நடந்த பயங்கரம்

ஹற்றனில் ஸ்ரீபாத கல்வியியற் கல்லூரியை மீண்டும் திறக்கக் கோரி ஊர்வலமாகச் சென்ற அக்கல்லூரி மாணவர்கள் மீது பொலீஸார் கண்ணீர்புகைக் குண்டுப் பிரயோகம் செய்து தடியடி நடத்தினர். இறப்பர் வேட்டுக்களும் தீர்க்கப்பட்டன. இதனால், பல மாணவர்கள் காயமடைந்தனர்.

அவர்களில் கடுங்காயங்களுக்கு உள்ளான ஆறு பேர் நுவரெலியா பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

நேற்றுக்காலை ஹற்றன் டன்பார் மைதானத்திலிருந்து மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் என ஆயிரக்கணக்கானோர் பத்தனை ஸ்ரீபாத கல்வியியல் கல்லூரியை திறக்குமாறு கோரி ஊர்வலமொன்றை நடத்தினர்.

இந்த ஊர்வலம் ஹற்றன் மல்லிகைப்பூ பிரின்சஸ் சந்தியை வந்தடைந்ததும் அதற்கு அப்பால் அவர்களைச் செல்லவிடாமல் வழிமறித்த பொலீஸார், ஊர்வலக்காரர்கள் மீது குண்டாந்தடிப் பிரயோகம் செய்து கண்ணீர்ப்புகைக்குண்டுகளை வீசி, துப்பாக்கியால் இறப்பர் குண்டுகளைச் சுட்டு விரட்டியடித்தனர்.

இதனால், சுமார் பத்துக்கும் மேற்பட்ட மாணவர்களும் பொதுமக்களும் காயமடைந்துள்ளனர். ஐந்துக்கும் மேற்பட்ட ஆசிரிய மாணவர்கள் பிரின்சஸ் தியேட்டருக்கு அண்மையில் இருந்த ஆற்றுக்குள் விழுந்து கிடந்தனர் என சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

அச்சம் காரணமாக மல்லிகைப்பூ சந்தியில் உள்ள தமிழர்களின் வீடுகளுக்குள் புகுந்த மாணவர்களும் மற்றும் வீட்டில் இருந்தவர்களும் வெளியில் இழுத்துவரப்பட்டு தாக்கப்பட்டனர் என தாக்குதலுக்குள்ளான மாணவிகள் சிலர் தெரிவித்தனர்.

பத்தனையில் உள்ள ஸ்ரீபாத கல்வியியற் கல்லூரி கடந்த இரண்டு மாதங்களாக மூடப்பட்டுள்ளது. அக்கல்லூரியில் உணவுப் பொருள்கள் கொள்வனவு செய்ததில் லட்சக்கணக்கான ரூபா மோசடி செய்யப்பட்டுள்ளது எனக் கூறப்படுகின்றது. அது குறித்து விசாரணை நடத்தும்படி கோரி மாணவர்கள் உணவு பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர். பின் சத்தியாக்கிரகமும் இருந்தனர். இது விடயத்தில் மாணவர்களுக்கும், கல்லூரி நிர்வாகத்தினருக்குமிடையில் ஏற்பட்ட இழுபறி காரணமாக ஸ்ரீபாதகல்லூரி இழுத்து மூடப்பட்டது.

எனினும், கல்வி அமைச்சு ஜூன் மாதம் 16ஆம் திகதி மீண்டும் கல்லூரியைத் திறக்க இணக்கம் தெரிவித்திருந்தது.

ஆனால், மாணவர்கள் கல்லூரியை உடனடியாகத் திறக்கக் கோரி, நேற்று ஊர்வலமாகக் கல்லூரியை நோக்கிச் சென்றனர்.

மாணவர்களின் நியாயமான கோரிக்கைக்கு ஆதரவு தெரிவித்து கொட்டகலை ஆசிரிய பயிற்சிக் கலாசாலை மாணவர்கள், நுவரெலியா, இரத்தினபுரி, கேகாலை, கண்டி போன்ற இடங்களில் பயிலும் ஆசிரியர், மாணவர்கள் மற்றும் ஹற்றன் பகுதியில் உள்ள சில தோட்டங்களின் தொழிலாளர்கள் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

ஹற்றன் மல்லிகைப்பூ சந்தியில் மாணவர்கள் மீது நடத்தப்பட்ட பொலீஸாரின் கண்மூடித்தனமான தாக்குதலை மலையக மக்கள் முன்னணி மற்றும் புதிய ஜனநாயகக் கட்சி போன்றவை வன்மையாகக் கண்டித்துள்ளன.

# அமெரிக்காவை மீண்டும் தாக்க அல்-கெய்டா அமைப்புத் திட்டம்

## பாக்.பெண் உட்பட 7 பேர் தேடப்படுகின்றனர்

அல்-கெய்டா தீவிரவாதிகள் அமெரிக்காவை மீண்டும் தாக்கத் திட்டமிட்டுள்ளனர். இது தொடர்பாக ஒரு பாகிஸ்தானியப் பெண் உட்பட 7பேர் தேடப்படுகின்றனர்.

இது குறித்து அமெரிக்கப் புலனாய்வு நிறுவனமான எப்.பி.ஐ. தலைவர் ரொபர்ட் முல்லர் மற்றும் சட்டமா அதிபர் ஜோன் ஆஷ்கிராப்ட் ஆகியோர் கூட்டாக நிருபர்களிடம் கூறியதாவது:

அமெரிக்கப் புலனாய்வு நிறுவனங்கள் நடத்திய விசாரணையில் அல்கெயடா தீவிரவாதிகள் மீண்டும் அமெரிக்காவைத் தாக்கத் திட்டமிட்டுள்ளனர் என்பது தெரிகிறது. இந்தமுறை கடுமையான தாக்குதலை நடத்த அவர்கள் தீவிரமுயற்சி மேற்கொண்டுள்ளனர். எதிர்வரும் கோடைகாலத்தில் தாக்குதல் நடத்த அவர்கள் திட்டமிட்டுள்ளனா.

கடந்த மார்ச் 11ஆம் திகதி அல் கெய்டா தீவிரவாதிகள் ஸ்பெயின் தலைநகர் மட்ரிட்டில் ரயிலை குண்டு வைத்துத் தகர்த்தனர். இது அந்நாட்டுத் தேர்தலில் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது. அமெரிக்காவில் எதிர்வரும் நவம்பர் மாதம் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளது. அதற்கு முன் தாக்குதல் நடத்தி அமெரிக்காவில் குழப்பம் விளைவிக்கத் தீவிரவாதிகள் திட்டமிட்டுள்ளனர். அடுத்த மூன்று மாதங்களில் அமெரிக்காவில் முக்கிய விழாக்கள், மாநாடுகள், கட்சிவிழாக்கள் நடைபெறவுள்ளன. இதில் ஏதாவது ஒரு நிகழ்ச்சியில் தீவிரவாதிகள் குழப்பம் ஏற்படுத்தவும் வாய்ப்புள்ளது.

ஆகவே, அமெரிக்கர்கள் மிகுந்த எச்சரிக்கையுடன் நடந்து கொள்ளவேண்டும். அமெரிக்கப் பாதுகாப்புத் தொடர்பாக பாகிஸ்தானிய பெண் ஆபியா சித்திக் உட்பட 7 முக்கிய தீவிரவாதிகள் தேடப்படுகின்றனர்.

அவர்களின் விவரமும் வெளியிடப்பட்டுள்ளது.

32 வயதான ஆபியா, ஹூஸ்டன் பல்கலைக்கழகத்தில் படித்தவர், நரம்பியல் துறையில் டாக்டர் பட்டம் பெற்றவர். ஜனவரி 2003இற்குப் பிறகு அவரது இருப்பிடம் பற்றி குடும்பத்தினருக்குத் தெரியவில்லை. அவர் மீண்டும் பாகிஸ்தான் திரும்பியிருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

✦ அட்னன் ஷுக்ரிஜுமா, சவூதியில் 1975இல் பிறந்தவர். அமெரிக்காவில் 15ஆண்டுகள் வசித்தார். தெளிவாக ஆங்கிலம் பேசுவார். பல்வேறு பாஸ்போட் மோசடி வழக்குகளில் தேடப்படுகிறார்.

✦ பஷில் அப்துல்லா மொகமது கிழக்கு ஆபிரிக்காவில் அல்-கெய்டா அமைப்புக்குத் தலைவராக செயல்படுகிறார்.

✦ அகமது காலிபான் கிலானி, தான்சானியா நாட்டைச சேர்ந்தவர். அங்கு தூதரகத்தில் நடந்த குண்டு வெடிப்பு வழக்கில் தேடப்படுகிறார்.

✦ அமீர் இல் மாட்டி, குவைத்தில் பிறந்தவர். விமானியாக அனுமதிப்பத்திரம் பெற்றவர். கனடா குடியுரிமை பெற்றவர். அங்கிருந்து விமானத்தைக் கடத்தி அமெரிக்கா மீது தாக்குதல் நடத்தப் பலருடன் விவாதித்துள்ளார்.

✦ அப்தெர் ரவுப் ஜுடே, டுனீசியாவில் பிறந்து கனடா குடியுரிமை பெற்றவர். விமானியாகப் பயிற்சி பெற்றவர். ஆப்கானிஸ்தானில் ஜிகாத் தீவிரவாதிகளுடன் நெருக்கமான தொடர்பு கொண்டவர்

✦ ஆதம்காடன், 25 வயது அமெரிக்கர், முஸ்லிம் மதத்திற்கு மாறியவர். அல்-கெய்டா இயக்கத்தினருக்கு மொழிபெயர்ப்பு உட்பட பல பணிகளைச் செய்தவர். ஆப்கானிஸ்தானில் பயிற்சி பெற்றவர். பாகிஸ்தானில் அல்-கெய்டா தீவிரவாதிகளுடன் நெருங்கிய தொடர்புடையவர்.

- இப்படித் தெரிவிக்கப்பட்டது.

தாக்குதல் குறித்து இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தபோதும் அமெரிக்காவில் பாதுகாப்பு ஏற்பாடுகள் எவையும் அதிகரிக்கப்படவில்லை என்று சுட்டிக்காட்டப்படுகின்றது. (ப-8)




*தேடப்படுபவர்களின் புகைப்படங்களுடன் அச்சிட்டு ஒட்டப்படுள்ள சுவரொட்டி ஒன்று.*

# ஜப்பான் பத்திரிகையாளர் ஈராக்கில் சுட்டுக்கொலை!

## மற்றொருவர் காயம்

பக்தாத்,மே29

ஈராக்கில் பணியாற்றிவந்த இரு ஜப்பானியர்கள் தாக்கப்பட்டுள்ளனர். அவர்களின் ஒருவர் இறந்துள்ளார். மற்றொருவர் காயமடைந்தார்.

தெற்கு பக்தாத்தில் இந்த இரு பத்திரிகையாளர்களும், இரு ஈராக்கியர்களும் வாகனத்தில் பயணித்துக் கொண்டிருக்கையில் அவர்கள் மீது சரமாரியான துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. இதில் ஜப்பானியர் ஒருவர் கொல்லப்பட்டார். வியாழக்கிழமை இந்தச்சம்பவம் இடம்பெற்றது. என்று ஜப்பானிய வெளிவிவகார அமைச்சகம் தெரிவித்தது.

சமாவா என்ற இடத்தில் இருந்து தலைநகர் பக்தாத்துக்கு அவர்கள் திரும்பிக்கொண்டிருந்த சமயம் ஆயுததாரிகள் அவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தினர். சமாவாவில் சுமார் 500 ஜப்பானியத் துருப்புக்கள் நிலைகொண்டுள்ளன.

வாகனத்தை நோக்கித் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதும் சுதாரித்துக கொண்ட சாரதி வாகனத்தை வேறு பாதையில் திருப்பிச்செலுத்தினார். உள்ளூர் வைத்தியசாலை ஒன்றில் பத்திரிகையாளர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. எனினும், அவர்களில் ஒருவர் உயிரிழந்தார். என்று உள்ளூர்ச் செய்திகள் தெரிவித்தன.

செய்தியாளர்களான சின்சூக் ஹஷிடா (வயது 61), கொடாரோ ஒகாவா (வயது31) ஆகிய இருவருமே தாக்குதலுக்கு உள்ளானார்கள் என்று டோக்கியோ அதிகாரிகள் தெரிவித்தனர். (8)

# கைதிகளை அமெரிக்கர்கள் மட்டுமல்லர் வேறு நாட்டுப் படைகளும் துன்புறுத்தின

வாஷிங்ரன்,மே29

ஈராக்கில் உள்ள அபுகிரைப் சிறையில் கைதிகள் துன்புறுத்தப்பட்ட சம்பவங்களில் அமெரிக்கப்படையினர் மட்டுமல்லாது அங்கு நிலைகொண்டுள்ள ஏனைய கூட்டு நாடுகளின் படையினரும் ஈடுபட்டுள்ளனர் என்று தற்போது தெரியவந்துள்ளது.

சிறைக் கைதிகளின் துன்புறுத்தல்கள் தொடர்பாக இராணுவ அதிகாரிகள் நடத்திய விசாரணைகளின் போது சில கைதிகள் இது பற்றிய விவரங்களை வெளியிட்டுள்ளனர் என்று அசோஸியேட் பிரஸ் செய்தி நிறுவனம் தகவல் வெளியிட்டுள்ளது. போலந்து நாட்டுப்படையினரும் வேறுசில நாட்டுப்படையினரும் இந்தத் துன்புறுத்தல்கள், சித்திரவதைகளில் ஈடுபட்டனர் என்று அடையாளப்படுத்தப்பட்டுள்ளனர்.

இந்த விசாரணைகளின் மூலம் கைதிகள் துன்புறுத்தல் தொடர்பான மேலதிக தகவல்களும் புதிய தகவல்களும் கிடைத்துள்ளன என்று அசோஸியேட்பிரஸ் கூறுகின்றது.

போலந்து இராணுவத்தினர் தாக்கியதில் இரு கைதிகள் காயமடைந்தனர் என்று விசாரணை அதிகாரிகளிடம் ஒரு கைதி தெரிவித்துள்ளார். இது பற்றியும் விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன. ஆனாலும் மேலதிக விவரங்கள் வெளியிடப்படவில்லை.

போலந்துப் படையினர் ஈராக்கின் தென்பகுதியின் மத்தியில் பணியாற்றி வருகின்றனர். அங்கும் அவர்கள் சந்தேகத்தின் பேரில் ஈராக்கியர்கள் பலரைக் கைதுசெய்து வைத்துள்ளனர்.

இது தவிர கூட்டுப்படையினரால் கைதிகள் துன்புறுத்தப்பட்டமை தொடர்பான பல சம்பவங்கள் குறித்தும் முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டுள்ளன. (8)

# பிரதமர் பதவியை மறுத்தார் ஈராக் அணு விஞ்ஞானி

ஈராக்கில் அடுத்தமாதம் அமையவுள்ள இடைக்கால அரசின் பிரதமராக பொறுப்பேற்க அணு விஞ்ஞானி உசேன் அல்-ஷரிஸ்தானி மறுத்துவிட்டார்.

ஈராக்கில் அடுத்தமாதம் 30ஆம் திகதி முதல் இடைக்கால அரசு அமைக்கப்படவுள்ளது. இந்த இடைககால அரசின் பிரதமராக அணு விஞ்ஞானியும், ஷியா இனத்தைச் சேர்ந்தவருமான உசேன் அல்-ஹரிஸ்தானி நியமிக்கப்படலாம் எனக் கூறப்பட்டது. சதாம் உசேன் அணு குண்டு தயாரிக்க திட்டமிட்ட நேரத்தில் அதற்கு உதவி செய்ய மறுத்தவர் ஹரிஸ்தானி. சதாம் உசேன் ஆட்சியில் சிறைவாசம் உட்பட பல தொல்லைகளை அனுபவித்தார். இதனால், அவரே ஈராக் இடைக்கால அரசின் பிரதமராக நியமிக்கப்படலாம என ஐநா வட்டாரங்கள் தெரிவித்தன.

ஆனால் பிரதமர் பொறுப்பை ஏற்க ஸரிஸ்தானி மறுத்துவிட்டார். போரால் பாதிக்கப்பட்ட ஈராக்கிற்கு தான் வேறு விதமான சேவைகளை அளிக்கப்போவதாக அவர் கூறியுள்ளார். ஐநா.வின் தூதர் லக்தர் பிராஹமி அவரைப் பலமுறை சந்தித்துப் பேசியும் , பிரதமர் பொறுப்பை ஏற்க ஷரிஸ்தானி மறுத்துவிட்டார் என ஐ.நா. தகவல் தொடர்பாளர் கூறியுள்ளார். (8)

# இராணுவ விமானப்படை மூத்த அதிகாரிகள் தன்னைக் கொல்லச் சதி என்கிறார் முஷாரப்!

இஸ்லாமபாத்,மே29

இராணுவ மற்றும் விமானப் படையின் மூத்த அதிகாரிகள் கடந்த டிசெம்பரில் தன்னைக் கொலைசெய்ய முயன்றனர் என பாகிஸ்தான் அதிபர் பர்வேஸ் முஷாரப் குற்றஞ்சாட்டியுள்ளார்.

ஜியொ ரீ.விக்கு அவர் அளித்த பேட்டி நேற்று முன்தினம் வியாழக்கிழமை ஒளிபரப்பானது. அதில் அவா கூறியுள்ளதாவது:

"என்னைக் கொல்ல முயன்ற சமபவத்தில் தொடர்புடையவர்கள் எனச சந்தேகிக்கப்படும் நபர்கள் கைது செயயப்பட்டுவிட்டனர்.

கைதானவர்கள் இராணுவ நீதிமனறில் விரைவில் விசாரிக்கப்படுவார்கள். என்னைக் கொல்ல யோசனை கொடுத்து அதற்குத் திட்டம் வகுத்துக் கொடுத்தவர் தலைமறைவாக உள்ளார். அவர் விரைவில் பிடிபடுவார். அவர் யார் என்பதும் தெரியும். ஆனால், அடையாளம் காட்டமாட்டேன் அப்படித் தெரிந்தால் விசாரணையில் பாதிப்பு ஏற்படும்.

கொலைச் சதித்திட்டம் தீட்டியவர் மகாபுத்திசாலி. அதனால் அவர் பிடிபடாமல் உள்ளார். எனினும், அவா பிடிபடுவது உறுதி.

என்னைக் கொல்லும் சதித்திட்டத்தில் ஈடுபடுபவர்கள் இராணுவ, விமானப்படையின் மூத்த அதிகாரிகள்தான். உயர் அதிகாரிகளுக்கு இதில் தொடர்பு இல்லை.

என்னைக் கொல்வதற்கான முதல் முயற்சி கடந்த டிசெம்பர் 14இல் நடந்தது. எனக்குக் காவலாக வாகனங்கள அணிவகுத்து வந்தபோது பாலத்தை தகர்த்தனர். இதைச்செய்தவர்கள் குற்றச்சாட்டுக்கு ஆளான இராணுவத்தினர்.

இதற்குச் சில தினங்களுக்குப் பிறகு நடந்த கொலை முயற்சி தாக்குதலில் இவர்களுக்குத் தொடர்பு இல்லை. வெடி குண்டு நிரப்பப்பட்ட வாகனங்களில் வந்த 2 தற்கொலைப படையினர் எனது வாகனங்களைத் தகர்க்க முயற்சித்தனர். எனினும் நான் தப்பினேன். ஆனால் பொலிஸார் உட்பட 16 பேர் கொல்லப்பட்டனர்.

இதற்குக் காரணமானவர்கள் பயங்கரவாதிகள் என்பது தெரிய வந்தது. அவர்களில் ஒருவர் பாகிஸ்தான் பகுதிக் காஷ்மீரைச் சேர்ந்தவர். ஜெய்ஷ இ-முகம்மது அமைப்பின் உறுப்பினர்" - என்றார் முஷாரப்



முஷாரப் கொலைமுயற்சி வழக்குத் தொடர்பாக பாகிஸ்தானில் 6 இராணுவ வீரர்களிடம் ஐ.எஸ்.ஐ விசாரணை நடத்துவதாக உறுதி செய்யப்படாத தகவ்ல்கள் வெளியாகி உள்ளன. இந்நிலையில், இராணுவ அதிகாரிகள் மீது முஷாரப்பின் குற்றச்சாட்டு வெளியாகியுள்ளது. (8)

# பிரிட்டனில் இந்துத்துவ சபை அமைப்பு

லண்டன்,மே29

பிரிட்டனில் பல்வேறு இந்துத்துவ அமைப்புக்கள் இணைந்து இந்துத்துவ சபையை அமைத்துள்ளன. இதற்கு சபாநாயகரும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

"பிரிட்டனில் இந்துத்துவ அமைப்பின் கீழ் பல்வேறு சிறிய சிறிய இந்து அமைப்புக்கள் செயல்படுகின்றன. இந்த அமைப்பின் சார்பில் இந்துத்துவ சபை உருவாக்கப்பட்டுள்ளது. இதற்கு சபாநாயகரும் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். "பிரிட்டனில் உள்ள ஏழு லட்சம் இந்துக்களின் வளர்ச்சிக்காக இந்தச் சபை உருவாக்கப்பட்டுள்ளது வரலாற்றில் ஒரு மைல் கல்" என்று சபாநாயகர் கூறியுள்ளார்.

இந்துத்துவ அமைப்பின் பொதுச் செயலாளர் ரமேஸ் கல்லிடை கூறுகையில்:-

"இந்துத்துவப் பண்பாட்டின் மதிப்பு மற்றும் வேற்றுமையில் ஒற்றுமை ஆகியவற்றில் இந்துத்துவ அமைப்பு வலுவான நம்பிக்கை கொண்டுள்ளது. காலம் காலமாக கடைப்பிடிக்கப்பட்டு வரும் இந்துத்துவ பண்பாட்டுக் கலாசாரம்தான் இந்துத்துவத்தை நிலைபெறச் செய்துள்ளது. இந்துத்துவ அமைப்பில்130 பல்வேறு இந்து அமைப்புகள் இணைந்துள்ளன."- என்றார்.

இதற்கான விழாவில் மூன்று முக்கிய அரசியல் கட்சிகளின் எம்பிக்கள் கலந்து கொண்டனர். விழாவில் பேசிய அமைப்பின் தலைவர் ஈஸ்வர் டெய்லர், "இந்துத்துவ சபை உருவாக்கப்பட்டுள்ளமை 21ஆம் நூற்றாண்டில் ஒரு மைல்கல். நாங்கள் கல்வி, வேலை வாய்ப்பு, வர்த்தகம் மற்றும் அதிகார வர்க்கத்தில் சிறப்பாக செயற்பட்டு வருகிறோம். மற்ற சமூகத்தினருடன் தொடர்ந்து எங்கள் உறவை நன்கு வைத்துக்கொள்வோம்"- என்றார். (8)



*ஹெயிட்டியில் வெள்ளத்துக்கு பலியானவர்களின் சடலங்கள் வெள்ளம் வற்றிய பின்னர் ஒதுங்கியுள்ளன. அவற்றை மீட்புப் பணியாளர்கள் வாகனங்களில் ஏற்றுவதைப் படத்தில் காணலாம்.*

## மணவாளக் கோலத் திருவிழா

*அச்சுவேலி பத்தமேனி தீர்த்தாங்குள விநாயகா திருக்கோயில்*

### நவோத்ர சகஸ்ர சங்காபிஷேக விஞ்ஞாபனம் இன்று

காலம் : இன்று (29.05.2004) சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு 1008 சங்காபிஷேகம நடைபெற்றுத் தொடர்ந்து விசேட பூசையும மதியம் மகேஸ்வர பூசையும் (அன்னதானம்) நடைபெறும்.

மாலை 5 மணிக்கு திருவூஞ்சல் நடைபெற்று, விநாயகப் பெருமான 'பூந்தண்டியில்' திருவீதியுலா வருதலும் நிகழும்.

**கிரியை நிகழ்வை நிகழ்த்தும் பிரதம குரு:**
**பா.சோமசுந்தரக் குருக்கள் (ஆலய பிரதமகுரு)**

உபயம்: 10 ஆம் திருவிழா உப்யகாரர்கள் சார்பில் திரு. செ. சந்திர மூர்த்தி, திரு. செ. சிவலிங்கராசா, திரு. இ. புவனேந்திரராசா

மங்கள வாத்தியம்: இராமையாவின் புதல்வர்களும் (ஆவரங்கால்) L.S. பாலேந்திரன் (உடுப்பிட்டி).

-10 ஆம் திருவிழா உபயகாரர் சார்பில்.

*விளம்பரம் :*
**சந்திரா தொலைத் தொடர்பகம்**
(சி35286)(37-12-17) (யாழ். வீதி, உடுப்பிட்டி)

---

## மூன்று மாதகால மனையியல் பயிற்சிநெறி

- ★தையல்
- ★ சாறி வேலை
- ★பூவேலை- புக்கே
- ★ தலையலங்காரம்
- ★(F)பவ்றிக் பெயின்ரிங்
- ★ கேக் ஐஸிங்
- ★வூள் நூல் வேலை

**ஆரம்பம்: 05.06.2004**

Career.Com, 79, பிரதான வீதி, யாழ்.
(சனி, ஞாயிறு நேரடியாக் அல்லது தபால் மூலம் பதிவுசெய்யலாம்)

மேலதிக விவரங்களுக்கு: J.சுதா 18/3, மடம் வீதி, யாழ்.
(32434)(40-12-17)

---



சிவமயம்
இந்தியப் பரம்பரை ஜோதிடர் P.T.R. அவர்கள் யாழப்பாணம் புண்ணியபூமிக்கு நான்காவது தடவையாக வருகைதந்துள்ளார்.

**திரு. P.T.R. அவர்கள்**

கைரேகை, ஜாதகம், எண்கணிதம் பார்க்கப்படும்.
திருமணத் தடங்கலா, காதலில் தோல்வியா, தீராத வியாதியா, உயர்கல்வியில் தடங்கலா, கடன் தொல்லையா?, தொழில்முன்னேற்றமில்லையா?, புதிய தொழில் தொடங்கவேண்டுமா?, குழந்தைப்பாக்கியம் இல்லையா?, வெளிநாடு செல்லத் தடையா?
எதுவாயிருந்தாலும் ஒருமுறை விஜயஞ்செய்து பாருங்கள.

இடம்: பாலாஜி இன் விடுதி
292, கஸ்தூரியார் வீதி (கன்னாதிட்டி சந்தி அருகில்), யாழ்ப்பாணம்.
(32442) (12-17)

---

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,மே29

கொக்குவில் கிருபாகர சிவசுப்பிர மணியசுவாமி கோவில் (புதுக் கோயில்) வருடாந்த மஹோற்சவம் கடந்த 24 ஆம் திகதி திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

தேர்த் திருவிழா எதிர்வரும் முதலாம் திகதி செவ்வாய்க்கிழமையும், தீர்த்தத் திருவிழா மறுநாள் காலை 10.00 மணிக்கும் நடைபெறும்.

ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ பி.கிருபாகரக் குருக்கள் மஹோற்சவக் கிரியைகளை நடத்துகின்றார் (ஐ)

★ ★ ★

தென் மட்டுவில் வேரக்கேணி கந்தசாமி ஆலய மஹோற்சவம் கடந்த 24 ஆம் திகதி கொடியேற்றததுடன் ஆரம்பமாகி நடைபெற்றுவருகிறது.

எதிர்வரும் முதலாம் திகதி இரதோற்சவமும் மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம்பெறும் (10-117)

★ ★ ★

நாரந்தனை, சரவணை கர்ணத் தோட்டம் ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த 24 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

எதிர்வரும் முதலாம் திகதி இரதோற்சவமும் மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம்பெறும். (10-117)

★ ★ ★

பருத்தித்துறை தும்பளை லூர்த்து மாதா அன்னை திருத்தலத்தில் இன்று சனிக்கிழமை இரவு 7 மணியிலிருந்து அதிகாலை 5 மணிவரை திருவிழிப்பு ஆராதனை இடம்பெறவுள்ளது.(ஒ-78)

### வர்த்தகர்கள் தீர்மானம்

சாவகச்சேரி நகர் வர்த்தக நிலையங்கள் சனிக்கிழமைகளில் அரை நாளும், ஞாயிற்றுக்கிழமைகளில் முழு நாளும முடப்பட்டிருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டது.

சனி, ஞாயிறு தினங்களில் வர்த்தக நிலையங்களில் பணிபுரியும் ஊழியர்களின் நலனை முன்னிட்டு வர்த்தகர்களும் அங்கு பணிபுரியும் ஊழியர்களும் இணைந்து மேற்படி தீர்மானத்தை எடுத்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-31)

### அரிமா சங்க ஒன்று கூடல்

தென்மராட்சி,மே29

சர்வதேச லயன்ஸ் கழக 306 பி மாவட்ட லயன்ஸ் கழகங்களின் பிரதிநிதிகளின் வருடாந்த ஒன்றுகூடல் இன்றும் நாளையும் கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் நடைபெறும். (ஒ-117)

---

Jayoda **ஜயோதா** ජයෝද

### உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 7192596 முதல் 7203407 வரை
சீட்டிழுப்பு இல. 36 திகதி 27-05-2004

வெற்றி எண்கள் **6 4 7 5 2 5** சுப்பர் எண் **16**

**சுப்பர் ஜக்பொட் பரிசு 2,02,17,600/- வெல்லப்படவில்லை**

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 6 எண்களுடன் சுப்பர் எண் | - | 2,02,17,600/- | - |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 6 எண்கள் | 01 | 10,00,000/- | 10,00,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 10 | 50,000/- | 5,00,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 94 | 5,000/- | 4,70,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 952 | 500/- | 4,76,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 9,539 | 50/- | 4,76,950/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 1 எண் | 94,489 | 10/- | 9,44,890/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 09 | 5,000/- | 45,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 96 | 1,000/- | 96,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 959 | 100/- | 95,900/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 9,445 | 20/- | 1,88,900/- |
| மொத்தம் | 1,15,594 | | 42,93,640/- |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூபா. 42,93,640/-

இந்த திங்கடகிழமைக்கான சுப்பர் ஜக்பொட்
ரூ. **2,04,82,725/-**

தொடர் இல. 6225992 க்கு மேற்பட்ட மஞ்சள் நிற டிக்கட்டுக்கள் 2004 மே 31 ஆம் திகதி திங்கட்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்
அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

ஜயோதா சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் வீட்டுப் பாவனைப் பொருட்களை வெற்றி பெறும் 5 டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

**7193200-5-64**
**7201401-8-34**
**7193905-8-81**
**7193840-8-61**
**7201253-1-16**

---

உ
சிவமயம்
**சந்நிதியான் ஆச்சிரம**
**சைவ கலை பண்பாட்டுப் பேரவையின்**

## வைகாசிப் பெருவிழா-2004

இடம்: சந்நிதியான் ஆச்சிரமம்
காலம்: நாளை (30.05.2004) ஞாயிற்றுக்கிழமை
நேரம்: காலை 09.00 மணி
தலைவர்: திரு.க.அருள்லிங்கம் (பேரவைத் தலைவர்)

**விருது பெறுபவர்:**
திரு.வ.வேலும்மயிலும்
(முன்னாள் உதவி அரசாங்க அதிபர், பருத்தித்துறை)

**விருது வழங்குபவர்:**
நல்லை ஆதீன முதல்வர்

ஞாயிறு காலை வழமைபோல் ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் இடம்பெறும் விசேட அபிஷேக ஆராதனையுடன் மேற்படி நிகழ்வுகள் ஆரம்பமாகும்.

குறிப்பு: பாராட்டுக்குரிய பெருமகனை கௌரவிக்க விரும்புவோர் விழாவின்போது கௌரவிக்கலாம்.

(C/35280)(40-12-17) - பேரவையினர்.

---

## கண்ணீர் அஞ்சலி

விவசாயபீட பொறியியற்றுறை 4 ஆம் வருட சிறப்புப் பிரிவு மாணவராகிய செல்வன் சிவகுமார் அவர்களது பாசமிகு தந்தையார்

### செல்லையா பொன்னுத்துரை

அவர்களது மறைவு குறித்து துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

விவசாய பீட மாணவர் ஒன்றியம்,
யாழ்.பல்கலைக்கழகம்.
(சி35291)(37-12-17)

---

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை அதிபர் திரு.செ.சேதுராஜா அவர்களது பாசமிகு மாமனார்

### தாமுப்பிள்ளை தேவராஜா

(ஓய்வு பெற்ற பொலீஸ் உத்தியோகத்தர்)

அவர்களது திடீர் மறைவை அறிந்து ஆழ்ந்த கவலை கொள்கிறோம். அவரது பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
நெல்லியடி ம.ம.வித்தியாலயம்.
(சி35282)(37-12-17)

---

## கண்ணீர் அஞ்சலி

எமது பணிமனையில் கடமைபுரியும் குடும்பநல உத்தியோகத்தர் செல்வி வே.சிவஞானமனி அவர்களின் அன்புத் தந்தையார்

### அமரர் கணபதிப்பிள்ளை வேலாயுதம்

அவர்கள் 26.05.2004 இல் இறைபதம் எய்தியதையிட்டு குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சு. வை. அ. பணிமனை, பருத்தித்துறை
சுகாதார வைத்திய அதிகாரி, உத்தியோகத்தர்கள்.
(C/35279)(40-12-17)

---

## கண்ணீர் அஞ்சலி

நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அதிபர் திரு.செ.சேதுராஜா அவர்களது அன்பான மாமனார்

### தாமுப்பிள்ளை தேவராஜா

(இளைப்பாறிய பொலீஸ் உத்தியோகத்தர்)

அவர்களது திடீர் மறைவையறிந்து நாமும் அவர்தம் குடும்பத்தினருடன் துயரைப் பகிர்ந்துகொள்வதோடு, எமது கண்ணீர அஞ்சலியையும் காணிக்கையாகச் செலுத்துகின்றோம்.

- நெல்லியடி வர்த்தக நண்பர்கள்.
(C/35281)(21-12-17)

---

## மரண அறிவித்தல்

### சின்னப்பு சண்முகம்



ஆனைக்கோட்டை, பொன்னையா லேனைச் சேர்ந்த சின்னப்பு சண்முகம் அவர்கள் 27.05.2004 வியாழக் கிழமை இறையடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சரஸ்வதியின் அன்புக் கணவரும் யோகேஸ்வரி, ஸ்ரீரஞ்சிதமலர், அற்புதமலர், காலஞ் சென்ற ஸ்ரீ ராசகுமார் மற்றும் ஸ்ரீரஞ்சிதகுமார் ஸ்ரீஜெயக குமார், ஸ்ரீசிவகுமார், ஸ்ரீஸ்குமார் காலஞ்சென்ற சுபாசினி ஆகியோரின் அன்புத் தந்தையாரும் காலஞ சென்ற செல்வநாயகம், உதயகிரி மற்றும் மகேந் திரம் ஆகியோரின் அன்பு மாமனாரும் ரமணன் (ஜேர்மனி), சூரியகுமார் (லண்டன்), சுதர்சன் (லண்டன்), சுரேஸ்தரன் (ஜேர்மனி), ராஜிட் (சுவிஸ்), ஒஜிஸ்ரன், சுரேஷ்குமார், குமணன், விநோத், சஞ்சா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.05.2004) சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் காக்கைதீவு மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பொன்னையா லேன்,*
*ஆனைக்கோட்டை.*
(32443)(40-12-17)
தகவல்:
பிள்ளைகள்.

உதயன்

# சமாதான முயற்சிகள் மீண்டும் கிடப்பில்!

இந்தா, அந்தா என்று அவசரமாக ஆரம்பிக்கும் என எதிர்பார்க்கப்பட்ட அமைதிப் பேச்சுக்கான ஆரவாரம் அடங்கிப் போய்விட்டது. ஆற அமர, ஆடி தாண்டி ஆவணயில் தான் இனிப் பேச்சுக்கான வாய்ப்பு என்பதும் உறுதியாகிவிட்டது.

முழு மூச்சோடு பேச்சுக்குத்தயாரான இலங்கை அரசுத தரப்புத் தலைமையின் 'உஷார்' சோடாப்புட்டி 'காஸ்' போல சீறியெழுந்த வேகத்தில் அடங்கிப்போய்விட்டது. கூட்டில் உள்ள பங்காளிக் கட்சிகளினதும், தென்பகுதிப் பேரினவாத சக்திகளினதும் எதிர்ப்பைக் கண்டு மலைத்த ஜனாதிபதி, முன்வைத்த காலை பின்வாங்கத் தொடங்கிவிட்டார்.

தற்றுணிவோடும், தீர்க்கதரிசனத்தோடும், உறுதியோடும் தான் எடுக்கமுயன்ற தீர்மானம் வரும் மாகாண சபைத் தேர்தலில் தமது தரப்பை மண் கவ்வ வைத்துவிடும் என்ற அச்சத்தில் 'ஜகா' வாங்கிவிட்டார் ஜனாதிபதி.

ஆக, பேரினவாதத்திற்கு அஞ்சி, தேர்தல்களுக்குப் பயந்து, நாட்டின் தேசியப் பிணக்குக்கு இணக்கத்தீர்வு காணும் எத்தனத்தைத் தள்ளிப்போட்டுவிட்டார் அவர்.

சமாதானப் பேச்சை மீள ஆரம்பிப்பதற்கு அவசியமானவை எனப் புலிகள் சுட்டிக்காட்டியுள்ள நான்கு அடிப்படை அம்சங்களையும் ஏற்பதற்கு கொள்கையளவில் இணங்கிய ஜனாதிபதி, தென்பகுதி எதிர்ப்புகளுக்கு அஞ்சி, அவற்றைச் செயற்படுத்த இணங்காமல் காலத்தைப் பின்தள்ளிப் போட்டிருக்கின்றார் என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.

அமைதி முயற்சிகள் கிடப்பில் போடப்பட்டு, மாகாண சபைத் தேர்தல்களுக்கு முன்னுரிமை கொடுப்பது என்ற முடிவு தென்பகுதித் தலைமையால் எடுக்கப்பட்டு விட்டதால் இனி தெற்கில் அரசியல் அரங்கத்தில் காட்சிகள் மாறும் என்பது உறுதி. சமாதானம் பற்றி பிரஸ்தாபித்த வாய்கள் இனி வாக்குக்காக இனவாதம் கக்கத் தொடங்கும். ஏற்கனவே இனவாதம் கக்கிக்கொண்டிருந்த சக்திகளோ பேரினவாதத்தை மேடை மேடையாக முழங்கும். வாக்களிப்பு முடியும்வரை இந்த ஆரவாரம் தான் இனி.

சமாதானப் பேச்சுக்கு அடிப்படை விடயங்களாகப் புலிகள் தெரிவித்த நான்கு அம்சங்களை ஏற்காமல் மறுத்தோம் என்று ஒரு மகுடத்தைத் தங்களுக்குப் பெருமையாகச் சூடிக்கொண்டு அரசுதரப்பினர், தென்பகுதிச் சிங்களவர் முன்வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

ஆக, வழமைபோல, தேர்தலையும் வாக்குகளையும் இலக்காகக் கொண்ட நயவஞ்சக அரசியலும், சிறுபான்மையினருக்கு எதிரான அடக்குமுறையையே தனது ஒரே இலக்காகக் கொண்ட தென்பகுதிப் பேரினவாதமும் மீண்டும் ஒரு தடவை அமைதிக்கான வாய்ப்புகளைக் காலில் போட்டு மிதித்துவிட்டன.

இலங்கையில் சிறுபான்மை இனங்கள் அமைதி முறையில் - சாத்வீக வழியில் அகிம்சை நெறியில் - நியாயமான தமது உரிமைகளையும், அபிலாஷைகளையும் பெற்றுக் கொள்ள முடியாது என்ற யதார்த்தத்துக்கு வலுவூட்டு வதாகவே தென்பகுதியின் இந்தப்போக்கு அமைந் திருக்கின்றது.

ஆயுத வழியில் - "முள்ளை முள்ளால் எடுப்பது போல"- தமக்கு உரியதைப் 'பிடுங்கி' எடுக்கத் தமிழர்களின் தீவிரவாத சக்திகள் மேற்கொண்ட முடிவை மீண்டும் ஒரு தடவை நியாயப்படுத்துவதாகவும் தென்பகுதியின் இந்தப்போக்கு அமைந்திருக்கின்றது.

நாளை மறுதினம் பெல்ஜியம் தலைநகர் பிரஸல்ஸில் கூடும் இலங்கைக்கு உதவும் நாடுகளின் இணைத் தலைமையின் கூட்டத்தில், இனப்பிரச்சினைக்கு அமைதித்தீர்வு காண்பது தொடர்பான விடயத்தில் இலங்கை அரசுத் தரப்பின் இந்த நிலைப்பாடு தீவிர ஆய்வுக்கு உட்படும் என எதிர்பார்க்கலாம்.


சமாதான முயற்சிகளில் அரசுத் தரப்பின் 'வெற்றிகரமான பின்னடிப்பை' இவ் விவகாரங்களை நேரடியாகக் கையாண்ட அனுசரணையாளர்களான நோர்வேத் தரப்பினர் பிரஸல்ஸ் கூட்டத்தில் விளக்கமாக எடுத்துரைப்பர் என்றும் எதிர்பார்க்கலாம்.

மிக மோசமான பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்ளப்போகும் நாட்டுக்கு - அதன் தலைமைத்துவத்தின் குறுகிய அரசியல் லாபங்களை இலக்கு வைத்த நடவடிக்கைகள் காரணமாக - வெளிநாட்டு உதவிகள் கிடைக்காமல் போகப் போகின்றன என்பதும் உறுதியாகி வருகின்றது.

2003 டோக்கியோ பிரகடனத்தை ஒட்டி சர்வதேச சமூகம் இலங்கைக்கு உதவி வழங்க உறுதியளித்த 45 ஆயிரம் கோடி ரூபா உதவி, சமாதான முயற்சிகளில் காட்டப்படும் மெத்தனம் காரணமாக, நமது நாட்டுக்கு 'கைக்கெட்டியும் வாய்க்கு எட்டாத' கதையாகத் தான் போகப்போகின்றது.

இந்த இழப்புகள், பின்னடைவுகள் எல்லாம் எதற்காக?

தேர்தலில் வாக்குச் சுருட்ட விரும்பும் அரசியல் தலைவர்களின் சுயலாப நலனுக்காகத் தான், அது தான் உண்மை!



ஜேர்மனியின் பேர்லின் நகரில் 'பேர்கோவ்' நிறுவனத்தின் ஆதரவுடன் 'இலங்கையின் சமாதான முயற்சிகளில் சர்வதேச சமூகத்தின் பங்களிப்பு' என்னும் தலைப்பில் நடைபெறும் மாநாட்டில் - இலங்கை அரசு, விடுதலைப்புலிகள், உதவும் நாடுகள் ஆகியனவற்றின் பிரதிநிதிகள் கலந்துகொண்டுள்ளனர்.

இந்த மாநாட்டில் புலிகள் சார்பில் பங்குபற்றுகின்ற சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவன், 'பேர்கோவ' நிறுவனப் பணிப்பாளர் டாக்டர் நோபேட் றொபர்ஸ் மற்றும் இலங்கை அரசுப் பிரதிநிதி டாக்டர் ஜெயம்பதி விக்கிரமரட்ண ஆகியோரைப் படத்தில் காணலாம். *(படம்: 'தமிழ்நெற்')*

# காசநோயாளர் விடுதியை ஊர்காவற்றுறைக்கு இடம் மாற்றுவதை மறுபரிசீலனை செய்க

## பொது அமைப்புகள் ஒன்றிணைந்து மகஜர் அனுப்பிவைப்பு

ஊர்காவற்றுறை,மே29

கோப்பாயில் இயங்கும் காசநோயாளர் பெண்கள் விடுதியை, ஊர்காவற்றுறை மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றும் முடிவை மறுபரிசீலனை செய்யுமாறு ஊர்காவற்றுறைப்பகுதி பொதுஅமைப்புக்கள் யாழ்.பிராந்திய பதில் சுகாதார சேவைகள் பணிப்பாளரிடம் கோரியுள்ளன.

இது விடயமாக, மேற்படி பொது அமைப்புகள் சுகாதாரப் பணிப்பாளருக்கு மகஜர் ஒன்றினையும் அனுப்பி வைத்துள்ளன.

அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஊர்காவற்றுறை மாவட்ட வைத்தியசாலையில் உள்ள பிரசவவிடுதிக்கு அருகில் இந்த காசநோயாளர் சிகிச்சைப் பிரிவினை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக அறிகிறோம். இது பிரசவ விடுதியைப் பாதிப்பதாக அமையலாம்.

அத்துடன், வைத்தியசாலையின் சுற்றாடலில் மக்கள் குடியிருப்புக்கள் நெருக்கமாக அமைந்துள்ளதுடன் புனித திரேசா முன்பள்ளி, உதவி அரசஅதிபர் பணிமனை, சமுர்த்தி வங்கி, உல்லாசப் பயணிகள் விடுதி, தெங்கு பனம் பொருள் கூட்டு றவுச் சங்கம் ஆகியனவும் அமைந்துள்ளன.

எனவே, மேற்படி காசநோய் சிகிச்சைப் பிரிவினை இங்கு மாற்றுவதன் மூலம் காசநோய் ஏனையவர்களுக்கும் தெரிந்தோ தெரியாமலோ பரவக்கூடிய சாத்தியக்கூறுகள் உள்ளன.

மந்திகை, கோப்பாய், சங்கானை போன்ற பிரதேசங்கள் சகலவிதமான வசதிகளையும் உள்ளடக்கிய பிரதேசங்களாகும். ஆனால், தீவகம் அவ்வாறான வசதிகள் ஏதுமற்ற பிரதேசமாகும்.

எனவே, அடிப்படை வசதிகளற்ற இப்பிரதேசத்தில் உள்ள ஊர்காவற்றுறை மாவட்ட வைத்தியசாலைக்கு காசநோயாளர் பிரிவை மாற்றுவதற்கு எடுத்த முடிவினை மறுபரிசீலனை செய்ய வேண்டும். இல்லையேல் மக்கள் போராட்டத்தை தொடர்ந்து முன்னெடுக்கவுள்ளோம் என்று அதில் உள்ளது. (எ-16)

# வவுனியா புதூர் நாகதம்பிரான் பொங்கல் விழாவுக்கு ஏற்பாடுகள்

வவுனியா,மே29

வன்னியில் சிறப்புப் பெற்ற வவுனியா புதூர் நாகதம்பிரான் ஆலய வருடாந்தப் பொங்கல்விழா எதிர்வரும் ஜூன் மாதம் 14ஆம் திகதி நடைபெறவுள்ளது.

1997ஆம் ஆண்டு வவுனியாவில் இருந்து ஸ்ரீலங்கா படையினர் ஆரம்பித்த 'ஜயசிக்குறு' படைநடவடிக்கையின் போது இந்த ஆலயம் பெரும் அழிவுகளைச் சந்தித்திருந்தது.

பின்னர் விடுதலைப் புலிகளினால் 'ஓயாத அலைகள்-3' நடவடிக்கையின் மூலம் இப்பகுதிகள் இராணுவத்தின் பிடியில் இருந்து மீட்டெடுக்கப்பட்டன. அதன் பின்னர் வருடந்தோறும் இந்த ஆலயப் பொங்கல் விழா மிகுந்த சிறப்புடன் இடம்பெற்று வருகின்றது.

சைவ மக்களின் வழிபாட்டில் நாகவழிபாடு முதன்மை பெறுகிறது.

சிந்துவெளியில் திராவிட மக்கள் நாகவழிபாட்டுக்கு முதன்மை அளித்துள்ளனர் என்பது சிந்துவெளியில் மீட்கப்பட்ட தொல்பொருள் சான்றுகளிலிருந்து தெரியவருகிறது.

வன்னியில் புளியம்பொக்கனை, புதூர் நாகதம்பிரான் ஆலயங்கள் சிறப்புப்பெற்றவை.

அரச வர்த்தமானியில் பிரகடனப்படுத்தப்படும் வவுனியா புதூர் நாகதம்பிரான் ஆலய பொங்கல் விழாவில் சகல இடங்களிலிருந்தும் பக்தர்கள் கலந்துகொள்ளவுள்ளனர்.

பொங்கல் நாளன்று புளியங்குளம், ஓமந்தை சோதனைச் சாவடிகளைத் திறந்து வைப்பதற்கான நடவடிக்கைகளை மேற் கொள்ளுமாறு ஆலய பரிபாலன சபையினர் வவுனியா அரச அதிபர் கே.கணேசிடம் கோரியுள்ளனர்.

அத்துடன், புளியங்குளம் பிரதான வீதியில் இருந்து ஆலயம் வரையான 4 கீ.மீற்றர் தூர வீதியினைப் புனரமைத்துத் தருமாறும் கேட்டுள்ளனர். (ஜ-12)

## நாளை

வைகாசி 17
ஞாயிற்றுக்கிழமை
(30.05.2004)
திதி : ஏகாதசி
மாலை 06.31 வரை.
நட்சத்திரம்: அத்தம்
பகல் 11.18 வரை.
ஏகாதசி விரதம்
சுபநேரம்: 08.52 - 10.22
ராகுகாலம்: 04.22 - 05.52
(பழைய நேரப்படி)

## உதயவாக்கு

பிள்ளைகளின் முதல் ஆசிரியர்கள் பெற்றோர்கள் தான்

# குளங்கள் புனரமைக்கப்படாததால் அணைகள் தூர்ந்து போகின்றன

ஒட்டுசுட்டான்,மே29

முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் காணப்படும் சிறிய நீர்ப்பாசனக் குளங்கள் பல வருடங்களாகப் புனரமைப்புச் செய்யப்படாததால் குளங்களின் அணைக்கட்டுகள் தூர்ந்த நிலையில் காணப்படுகின்றன.

1998ஆம் ஆண்டின் இறுதிப்பகுதியில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட 'ரிவிபல' படைநடவடிக்கை காரணமாக இடம் பெயர்ந்த மக்கள் மீண்டும் மீளக்குடியமர்ந்து வரும் நிலையில் இக்குளங்கள் புனரமைப்புச் செய்யப்படாததால் தமதுவிவசாய முயற்சிகளை மேற்கொள்வதில் இடர்களை எதிர்கொண்டுள்ளனர்.

பெரியகுளம், துவரமோட்டைக்குளம், காஞ்சூர மோட்டைக்குளம், பெருங்கருவேப்ப முறிப்புக்குளம், சட்டைக்காட்டுகுளம், ஆகிய சிறிய குளங்களே புனரமைப்புச் செய்யப்படாத நிலையில் உள்ளன.

பல்வேறு அபிவிருத்திப்பணிகள் மேற்கொள்ளப்படுகின்ற போதிலும் இக்குளங்கள் புனரமைப்புச் செய்யப்படாதிருப்பதால் இப்பிரதேச மக்கள் கவலை கொண்டுள்ளனர். (ஜ-99-12)

# குருநகரில் கலாசார சீரழிவுகளை முற்றாக ஒழிக்க நடவடிக்கை

குருநகர்,மே29

குருநகர்ப் பகுதியில் உருவெடுத்துள்ள சமூக, கலாசார, சுற்றுப்புறச் சீரழிவு களை இல்லாதொழிக்கும் நடவடிக்கைகள் மேற கொள்ளப்படவுள் ளன.

இதற்காக குருநகர் முன்னேற்ற ஐக்கியமுன்னணி அமைப்பு கடந்த 22ஆம் திகதி குருநகர் புனித யாகப்பர் ஆலய மண்டபத்தில் கூட்டம் ஒன்றை நடத்தியது.

குருநகர் முன்னேற்ற ஐக்கிய முன்னணி அமைப்பின் தலைவர் அ.அகஸ்ரின் தலைமையில் நடைபெற்ற இந்த ஆலோசனைக் கூட்டத்தில், குருநகர் பங்குத்தந்தை வணபிதா ஆர்.எச். சகாயநாயகம் அடிகள், வணபிதா எஸ்.ஜெயசீலன் அடிகள், குருநகர் புனிதயாகப்பர் ஆலய முன்னாள் பங்குத் தந்தை வணபிதா அ.பி.ஜெயசேகரம் அடிகள் மற்றும் குருநகர் பகுதி கிராம சேவையாளர்கள் அ.யு,லன், எஸ்.ஞானசேகரம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்தக்கூட்டத்தில் உரை நிகழ்த்திய குருநகர் ஐக்கிய முன்னணி செயலாளர் ப.குயின்ரன் தமது உரையில்:-

குருநகர்ப் பகுதியில் மேற்கொள்ளப்படவுள்ள சமூக சீர்திருத்த நடவடிக்கைகளுக்கு குருநகரிலுள்ள இளைஞர்கள், யுவதிகள் பூரண ஒத்துழைப்பு வழங்குவர், இதற்கென குருநகரில் சமூக சீர்திருத்தக்குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. சீர்திருத் தப்பணி கள் எதிர்வரும் முதலாம் திகதி தொடக்கம் அமுல் படுத்தப் படவுள்ளன - என்றார் (எ-51)

# இலவசக் கணனிப் பயிற்சி

தமிழ்த் தகவல் தொழில்நுட்ப ஒருங்கமைப்பு நிலையம்,
இணுவில் (TITA)

**புதிய பிரிவுகள் ஆரம்பம்-**

மேற்படி நிலையத்தில் கணனிப்பயிற்சி நெறிகள் நாளை (30-05-2004) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 (பழையநேரம்) மணிக்கு கணனி அறிமுகம் ஆரம்பமாகவுள்ளது. எனவே, இந்தப் பயிற்சி நெறியில் கலந்து பயனடையுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

நிர்வாகம்,
இணுவில் கிழக்கு இளைஞர் கழகம்.

(32411)(42-21-13-19)


# ஓராண்டு நினைவு தினம்



*சென்ற 10-06-2003 அன்று*
*சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தெய்வம்*

அமரர்
**கணபதிப்பிள்ளை குருநாதன்**

அவர்களின் ஓராண்டு நினைவுதினக் கிரியைகள் எமது இல்லத்தில் இன்று (29-05.2004) சனிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் நடைபெறுகின்றன. அத் தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனைகளிலும் மதிய போசனத்திலும் பங்குகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக் கின்றோம்.


*சட்டநாதர் வீதி, (தேர்மடம்)*
*திருநெல்வேலி கிழக்கு,*
*நல்லூர்.*

**- குடும்பத்தினர்.**

(32422)(42-21-13-19)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு
23 - 12 - 1948



இறப்பு
09 - 06 - 2003

அமரர் **கந்தன் தியாகராசா**

திதி: 29-05-2004

**ஆண்டு ஒன்று ஆனாலும்**
**ஆறிடுமோ எம் துயரம்?**
**மீள நாம் உமைக் காண**
**மீண்டும் ஒரு ஜென்மம் எடுப்போம்!**

*எமது குடும்பத் தலைவர் அமரர் கந்தன் தியாகராசா அவர்களின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி நிகழ்வும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் இன்று (29-05-2004) சனிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் இடம்பெறுகின்றன. அந்நிகழ்வுகளில் கலந்து கொண்டு அமரரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்தித்துக் கொள்வதுடன் மதிய போசனத்திலும் பங்குகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

இந்த அழைப்பையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

*வீரபத்திரர் கோயிலடி,*
*நாவற்குழி, கைதடி.*

(32417)(42-21-13-19)

**அன்பு மனைவி, பிள்ளைகள்.**

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு
24 - 12 - 1954



மறைவு
09 - 06 - 2003

அமரர்
**சின்னத்துரை சுந்தரலிங்கம்** (சுந்தரம்)

(யாழ்ப்பாண நீர்வளச் சபை ஊழியர்)

*அப்பா! நீங்கள் இல்லாத உலகில்*
*அநாதைகள் நாங்கள் இங்கே*
*ஆண்டு ஒன்று ஆனாலும் ஆறவில்லை எம்மனம்!*
*எங்கள் உயர்வுக்காக உழைத்து நாங்கள்*
*நல்வாழ்வு வாழ வழிகாட்டிய – எங்கள் அன்புத் தெய்வமே! – உங்கள்*
*ஆத்மா சாந்தி அடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கிறோம்.*

கண்ணன் லேன். இராஜவீதி. கோப்பாய்.

**- குடும்பத்தினர்.**

(32419)(34-21-13-19)

## நிவாரணம், புனர்வாழ்வு மற்றும் மீளிணக்கத்திற்கான அமைச்சு
## வடக்கு மற்றும் கிழக்கிலுள்ள பாலங்களைப் புனரமைத்தல்

# கேள்வி அறிவித்தல்

ஐக்கிய இராச்சியத்திலிருந்து கொண்டுவரப்பட்ட கொம்பக்ட் உருக்குப் பாலமமைத்தல் உதிரிப் பாகங்களை (Compact steel Bridgeing Componants) கொண்டு வடக்கு மற்றும் கிழக்கிலுள்ள பாலங்களை புனரமைப்பதற்கான கடனொன்றை இலங்கை ஜனநாயக சோசலிஷக் குடியரசானது பெற்றுள்ளது.

பின்வரும் பாலங்களுக்காக உப கட்டமைப்புகளை நிர்மாணிப்பதற்கான பொறியிடப்பட்ட கேள்வி(களை) 2004.06.21 ஆம் திகதி பி.ப.3.00 மணிவரை வடக்கு - கிழக்கு பாலங்கள் புனரமைத்தல் திட்டத்திற்கான கேள்விச்சபைத் தலைவர் பெற்றுக்கொள்வார்.

**யாழ்ப்பாண மாவட்டம்**

| தொடர் இல. | பாலம் மற்றும் வீதியின் பெயர் | அடையாள இல. | வீதி இல. | மீளளிக்கப்படாத தொகை (Rs.) | கேள்விப் பிணைக்கான தொகை (Rs.) | ICTAD தரம் |
|---|---|---|---|---|---|---|
| P/01 | நாவற்குளி கண்டி யாழ்ப்பாணம் வீதி (314/1) | 1.01.01 | A9 | 1000/= | 500,000/= | M4 |
| | கைதடி - கண்டி - யாழ்ப்பாணம் வீதி (309/1) | 1.01.02 | A9 | | | |
| P/02 | வண்ணாத்தி (Butterfly) புத்தூர் மீசாலை வீதி (6/1) | 1.01.06 | AB32 | 1500/= | 260,000/= | M4 |
| | வல்லை - யாழ்ப்பாணம் பருத்தித்துறை வீதி (21/2) | 1.01.07 | AB20 | | | |
| | புலோலி - சாவகச்சேரி புலோலி வீதி (14/1) | 1.01.22 | B75 | | | |

**கிளிநொச்சி மாவட்டம்**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| P/03 | யாழ்ப்பாணம் - கண்டி வீதி (263/1) | 1.02.40 | A9 | 1000/= | 120,000/= | M5 |
| | யாழ்ப்பாணம் - கண்டி வீதி (263/2) | 1.02.41 | A9 | | | |
| P/04 | பரந்தன் முல்லைத்தீவு வீதி (8/4) | 1.02.30 | A35 | 2000/= | 380,000/= | M4 |
| | பரந்தன் - முல்லைத்தீவு வீதி (9/1) | 1.02.31 | A35 | | | |
| | பரந்தன் - முல்லைத்தீவு வீதி (10/2) | 1.02.32 | A35 | | | |
| | பரந்தன் - முல்லைத்தீவு வீதி (11/1) | 1.02.33 | A35 | | | |

**மன்னார் மாவட்டம்**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| P/05 | வெள்ளன்குளம் - தள்ளடி வீதி | 1.04.11 | A32 | 1000/= | 160,000/= | M5 |
| | வெள்ளன்குளம் - தள்ளடி வீதி | 1.04.13 | A32 | | | |
| P/06 | வெள்ளன்குளம் - தள்ளடி வீதி | 1.04.19 | A32 | 1000/= | 120,000/= | M5 |
| | வெள்ளன்குளம் - தள்ளடி வீதி | 1.04.20 | A32 | | | |

கேள்வி ஆவணங்கள் 2004 ஜூன் 14 ஆம் திகதிவரை சாதாரண வேலைநாள்களில் மு.ப.9.30 - பி.ப.4 வரையில் கொழும்பு-03, காலி வீதி, 177, 3 ஆம் மாடியிலுள்ள திட்ட அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

விரும்பின் கேள்வி ஆவணங்களைப் பெறுவதற்கு முன்பு இலவசமாக இதே அலுவலகத்தில் கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம். வெவ்வேறு மாவட்டங்களிலுள்ள பாலங்களுக்கு விஜயம்செய்யும் திகதிகளை கேள்விதாரருக்கு பின்னர் அறிவிக்கப்படும்.

கேள்விகள் திறக்கப்பட்டபின் அக்கேள்விகள் 90 நாள்களுக்கே செல்லுபடியாகும். அத்துடன், அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தொகை கேள்விப் பிணையுடன் சேர்க்கப்பட்டு

'செயலாளர்,
நிவாரணம், புனர்வாழ்வு மற்றும் மீளிணக்கத்திற்கான அமைச்சு'

இன் பேரில் வரையப்படல் வேண்டும். மேலும் அவை கேள்விகள் திறக்கப்படும் திகதியிலிருந்து 120 நாள்களுக்குச் செல்லுபடியாகும். கேள்விப் பிணைகளானது அங்கீகரிக்கப்பட்ட வங்கி அல்லது நிர்மாண உத்தரவாத நிதியிலிருந்து மாத்திரமே ஏற்றுக்கொள்ளப்படும்.

அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரங்கள் மற்றும் செல்லுபடியாகும் NCASL அங்கத்துவத்தையுடைய கேள்விதாரர்கள் வியாபாரக்கடிதத் தலைப்பில் ஆவணங்களைக் கோரும் கடிதத்தினை சமர்ப்பிப்பதன்மூலம் மாத்திரமே கேள்வி ஆவணங்கள் விநியோகிக்கப்படும்.

கேள்விதாரர்கள் பாலங்கள் நிர்மாணிப்பது தொடர்பாகத் தேவைப்படும் நிதி மற்றும் தொழில நுட்பத் தகைமை, ஆவணச் சான்றிதழ் கொண்டிருப்பதை கேள்வியில் குறிப்பிடப்பட்ட அறிவுறுத்தல்களிலுள்ள நிபந்தனைகளுக்கமைய உறுதிசெய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

நகல்களுடன் மற்றும் தபாலுறையின் இடதுபக்க மேல்மூலையில் திட்டத் தலைப்பினை குறிப்பிடப்பட்ட பொறியிடப்பட்ட கேள்வி(கள்)

**தலைவர்**
**கேள்விச் சபை, வடக்கு - கிழக்கு பாலங்கள் புனர்நிர்மாணத்திற்கான திட்டம்,**
**3ஆம் மாடி, 177, காலி வீதி, கொழும்பு - 03.**

என்னும் முகவரிக்கு நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமோ கிடைக்கச்செய்யலாம்.

கேள்விகள் திறக்கப்படும்போது கேள்விதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம்பெற்ற பிரதிநிதிகள் சமுகமளிப்பதற்கு அனுமதிக்கப்படுவர். கேள்விகள், திட்டப் பணிப்பாளர் அலுவலகத்தில் கேள்விகள் மூடப்பட்டு உடனடியாகத் திறக்கப்படும்.

**தலைவர்,**
**திட்டக் கேள்விச் சபை, வடக்கு - கிழக்கு பாலங்கள் புனர்நிர்மாண திட்டம்,**
**புனர்வாழ்வு, நிவாரணம் மற்றும் மீளிணக்கத்திற்கான அமைச்சு,**
**3 ஆம் மாடி, 177, காலி வீதி,**
**கொழும்பு - 03.**

(சி-3529)(34-19-13-21)

# மேல்மாகாண முதன்மை வேட்பாளராக ஊடக அமைச்சர் ரெஜினோல்ட் குரே?

கொழும்பு,மே29

மேல்மாகாணசபைத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் முதன்மை வேட்பாளராக அமைச்சர் ரெஜினோல்ட் குரே போட்டியிடவுள்ளார். இதனை அவரே செய்தியாளர்களிடம் சூசகமாக ஒப்புக்கொண்டார்.

முதன்மை வேட்பாளராவதற்காக வெகுவிரைவில் அவர் தனது அமைச்சுப்பொறுப்புக்களை இராஜினாமாச் செய்யலாம் என்றும் எதிர்பார்க்கப் படுகின்றது.

மேல்மாகாண சபையின் முன்னாள் முதலமைச்சரான ரெஜினோல்ட் குரே கடந்த பொதுத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றதோடு அமைச்சரவையில் இடம்பெற்று விட்டார்.

எனினும், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் மேல்மாகாண சபை முதன்மை வேட்பாளராகத் தெரிவுசெய்வதில் கட்சிக்குள் சர்ச்சை ஏற்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்தே கட்சியின் முதன்மை வேட்பாளராக அமைச்சர் குரேயை மீண்டும் போட்டியிடுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அதனை அமைச்சரும் ஒப்புக்கொண்டுள்ளார்.

அவர் அப்பொறுப்பை ஏற்றால் காலியாகும் தகவல் ஊடகத்துறை அமைச்சுப்பதவிக்கு முன்னைய சந்திரிகா அரசில் ஊடகத்துறை அமைச்சராகப் பணியாற்றிய அனுரா பிரியதர்ஷன யாப்பா நியமிக்கப்படலாம் எனக் கூறப்படுகின்றது.

அதேவேளை, தற்போதைய ஊடகத்துறைப் பிரதியமைச்சர் சேகு இஸ்ஸதீனை அமைச்சராக்க வேண்டும் எனப் பலர் அழுத்தம் கொடுத்து வருகின்றனர் என்றும் - தெரிகின்றது.

(க)

## ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் ஸ்தாபகரின் உருவச்சிலை

வலி. தெற்கு,மே29

கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் 110ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கல்லூரியின் ஸ்தாபகர்களில் ஒருவரான டாக்டர் பி.சுப்பிரமணியம் (பி.எஸ்) அவர்களுக்குக் கல்லூரியின் வளாகத்தில் ஓர் உருவச்சிலை நிறுவுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஸ்தாபகர் குடும்பத்தைச் சேர்ந்த திருமதி சித்திரலேகா, டாக்டர் இராமகிருஸ்ணன் தம்பதிகள் இவ்வுருவச்சிலை நிர்மாணிப்பதற்கான நிதி உதவியை வழங்கியுள்ளனர்.

பிரபல சிற்பக் கலைஞர் ரமணியின் கைவண்ணத்தில் உருவச்சிலை ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் முன் பகுதியில் வடிவமைக்கப்பட்டு வருகின்றது.

ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் முகாமையாளரும் இலங்கை மருத்துவக்கல்வித்துறையில் பெரும் தொண்டு புரிந்தவருமாகிய டாக்டர் சுப்பிரமணியத்தை (பி.எஸ்.) நினைவு கூறுமுகமாக உருவச்சிலை வடிவமைக்கப்படுகின்றது.

(ஐ-152)

## ஜனாதிபதிக்கு லஞ்சம் கொடுக்க முயன்ற நிறுவனம் பிறிமா!

### குண்டைத் தூக்கிப் போடுகிறார் அமைச்சர்

பிறிமா நிறுவனம் மா விநியோகத்தில் தனது உரிமையைத் தொடர்ந்து தக்கவைத்து நிலைநாட்டிக்கொள்வதற்காக ஜனாதிபதிக்கு, லஞ்சம் கொடுக்க முன்வந்தது என்று ஒரு குண்டைத் தூக்கிப் போட்டிருக்கிறார் வர்த்தக மற்றும் நுகர்வோர் விவகார அமைச்சர் ஜெயராஜ் பெர்ணாண்டோ புள்ளே.

கோதுமை மா உற்பத்தியிலும் கோதுமை இறக்குமதியிலும் ஏகபோக உரிமையைத் தக்கவைத்திருக்கும் பிறிமா நிறுவனம், 1994 ஆம் ஆண்டு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு லஞ்சம் கொடுக்க முன்வந்தது. அதை அப்போது ஜனாதிபதி கடுமையாக ஆட்சேபித்தார்.

இன்று தனியார் நிறுவனங்கள் மா இறக்குமதி செய்யும்போது, அதைத் தடுப்பதற்கு அந்த நிறுவனம் முயற்சிக்கும். ஆனால், தனியாருக்குப் பக்கபலமாக அரசு இருக்கும். அதன்படி தனியார் தாம் இறக்குமதி செய்யும் கோதுமை மாவை களஞ்சியப்படுத்துவதற்கு வசதியாக அரச களஞ்சியங்களை அரசு இலவசமாக வழங்கும்.

கடந்த காலத்தில் 'காஸ்' இறக்குமதியில் 'ஷெல் காஸ்' தனது ஏகபோக உரிமையைப் பயன்படுத்தி ஏனைய காஸ் நிறுவனங்களை விலை கொடுத்து வாங்கிய அனுபவம் எமக்கு உண்டு. எனவே, பிறிமா நிறுவனம் எப்படியான எதிர் நடவடிக்கைகளில் ஈடுபடும் என்பது எமக்குத் தெரியும் - என்றார் அவர்.

(க)

## இடிமுழக்கத்தின் அதிர்ச்சியால் மரணம்

வடமராட்சி,மே29

பலத்த இடி, மின்னல், முழக்கத்தினால் அதிர்ச்சியடைந்த இளைஞர் ஒருவர் மரணமானார் என்று கூறப்பட்டது.

கடந்த 26ஆம் திகதி இரவு மந்திகை கருகம்பனை என்ற இடத்தில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த செல்லையா பரமேஸ்வரன் (வயது 28) என்ற இளைஞனே மரணமானார் என்று கூறப்பட்டது.

இவர், கொப்புளிப்பான் நோய்க்குள்ளாகி குணமடைந்துவரும் நிலையிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றது என்றும் தெரிவிக்கப்பட்டது.

(எ-173-15)

## வாசகர் திருமுகம்

### ஏன் இந்தப் பாரபட்சம்?

கடந்த வருடம் (2003) நடைபெற்ற க.பொ.த.உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களில் யாழ். பல்கலைக்கழகத்திற்கு கலைப்பீடத்தில் மிகக் குறைந்த மாணவர்களே உள்வாங்கப்பட்டார்கள். எனினும், பலருடைய முயற்சியால் சில பாடங்களுக்கு மேலும் பல மாணவர்கள் விசேட அனுமதியின் பெயரில் உள்வாங்கப்பட்டார்கள்.

இவ்வாறான தெரிவில் கிறிஸ்தவப் பாடத்தைக் கற்பதற்கு விசேட அனுமதியின் பெயரில் மாணவர்கள் தெரிவுசெய்யப்படவில்லை. ஆனால், வழமையாக அவ்வாறு மேலதிக மாணவர்களைத் தெரிவுசெய்கின்ற போதிலும் இத்துறையினைக் கற்பதற்கான போதிய வசதிகள் இருந்தும் இம்முறை மட்டும் கிறிஸ்தவ பாடநெறிக்கு மாணவர்களைத் தெரிவுசெய்யாமல் பல மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

எனவே, மாணவர்களின் நலனைக் கருத்திற்கொண்டு யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தரும், இதற்குப் பொறுப்பானவர்களும் உரிய நடவடிக்கைகளை மிகவிரைவாக மேற்கொள்ளுமாறு பாதிக்கப்பட்ட மாணவர்கள் சார்பில் கேட்டுக்கொள்கின்றேன்.

*யாழ்ப்பாணம்.* - **பாதிக்கப்பட்ட மாணவி.**

### பஸ் சேவைப் பாதைகளை மாற்றி அமைத்தால் நல்லது

'யாழ். ஆலங்குழாய் பஸ்சேவையை நவாலி - கட்டுடை ஊடாக நடத்துக' என்ற தலைப்பில் 28.04.2004 உதயன் பத்திரிகையில் வந்த செய்தி வரவேற்கத்தக்கது. ஆனால், அது செயல் வடிவம் பெறவில்லையென்பது தான் கவலை. இதில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனத்தில் கொள்ள வேண்டிய விடயம் யாதெனில் 749, 787, 788, 782ஆம் இலக்க பஸ்கள் யாவும் யாழ். - மானிப்பாய் ஊடாகப் பல்வேறு இடங்களுக்கும் செல்கின்றன. ஆனால், 749ஆம் இலக்க பஸ் யாழ். - குளப்பிட்டி - ஆனைக்கோட்டை - மானிப்பாய் ஊடாக ஆலங்குழாய் சென்று தெல்லிப்பழை செல்கிறது. ஆனால், இதனை யாழ். - உயரப்புலம், ஆனைக்கோட்டை நவாலி, கட்டுடை, கொலனி வீட்டுத்திட்டம், சண்டிலிப்பாய் ஆலங்குழாய் ஊடாக தெல்லிப்பழை வரை நடத்தினால் பொருளாதார ரீதியாக வட.பி.போ.சாலையும் நன்மையடையும். அதேவேளை, நீண்டதூரம் பிரயாணஞ் செய்து பஸ் சேவையைப் பெறும் மக்களும் மிகப்பெரிய பயனடைவார்கள்.

எனவே, மேற்படி 749ஆம் இலக்க பஸ் சேவையை யாழ். - மானிப்பாய் - ஆலங்குழாய் ஊடாக நவாலி - கட்டுடை வழியே நடத்தினால் அனைதது் தரப்பினரும் நன்மையடைவார்கள். அத்துடன், பின்தங்கிய கிராமங்களும் வளர்ந்து அபிவிருத்தியடைவதுடன் கிராமங்கள் பல்வேறுபட்ட வசதிவாய்ப்பையும் பெறும்நிலை உருவாகும்.

எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதற்கு நடவடிக்கை எடுத்து உதவுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

*நவாலி தெற்கு,*
*மானிப்பாய்.*
**எம்.சிறிதர்.**

## புற்றுநோயாளருக்கு நிதி உதவி

வலி. தெற்கு,மே29

கிளிநொச்சியில் உள்ள அரச போதனா வைத்தியசாலையின் புற்றுநோயாளர்களுக்கு உதவும் நோக்குடன் 'சிவபூமி' அறக்கொடை நிலையத்தினால் ஒரு தொகைப்பணம் வைத்தியசாலை நிர்வாகத்திடம் கடந்த வாரம் கையளிக்கப்பட்டுள்ளது.

'சிவபூமி' அறக்கொடை நிலையம் கடந்த இரண்டு வருடங்களாக யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலையின் ஊடாகப் புற்றுநோயாளர்களுக்குப் பண உதவி வழங்கி வருகின்றது. இதுவரை சுமார் ஐந்து லட்சம் ரூபாவுக்கும் கூடுதலான பணம் இதற்கு வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-152)

## சமுர்த்தி மகாசங்க அலுவலகத் திறப்பு விழா

தென்மராட்சி,மே29

தென்மராட்சி சமுர்த்தி வங்கிகளின் மகாசங்க அலுவலகத் திறப்பு விழா எதிர்வரும் 31ஆம் திகதி திங்கட்கிழமை பி.ப. 2.30 மணிக்கு மகாசங்க முகாமைத்துவப் பணிப்பாளர் து.ரகுநாதன் தலைமையில் நடைபெறும்.

சாவகச்சேரி, நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயத்திற்கு அருகில் உள்ள தனியார் கட்டடத்தில் ஆரம்பிக்கப்படவுள்ள மகாசங்க அலுவலகத் திறப்பு விழாவில் முதன்மை விருந்தினராகத் தென்மராட்சிப் பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசனும், சிறப்பு விருந்தினராக மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர் தி.மகேஸ்வரகுமாரும் கலந்துகொள்வர்.

யாழ். மாவட்டத்தில் ஆறு சமுர்த்தி மகா சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் தென்மராட்சி மகாசங்கத்தின் அலுவலகமே முதலில் திறக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

(ஐ-117)

## மக்கள் முகம்



மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றிய சைவப்புலவர் கந்த.சத்தியதாசன் சைவ சமயப் பாட சேவைக்கால ஆசிரிய ஆலோசகராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

மாவிட்டபுரத்தைப் பிறப்பிமாகக் கொண்ட இவர், யாழ். பல்கலைக்கழகத்தில் இந்துநாகரிகத்துறையில் சிறப்புக் கலைமாணிப் பட்டமும் பெற்றுள்ளார்.

ஆலயங்களில் சைவச் சொற்பொழிவுகளை நிகழ்த்தி அருட்சொல்வாரி, சொல்லமுதவாரி, அருள்நெறித் தமிழருவி, அருள்நெறிச் செல்வர் ஆகிய கௌரவப் பட்டங்களையும் பெற்றவர்.

யாழ். சைவ சமய பரிபாலனசபையின் சைவசித்தாந்த பண்டிதர் பட்டதையும் பெற்ற இவர், மாவை சிவநாதம் பட்டிமன்றக்குழுவின் அமைப்பாளரும் ஆவார்.

(10-ரி)

* * *



காரைநகர் மத்தியைச் சேர்ந்தவரும் யாழ்ப்பாணம், இல.4, ஒடை ஒழுங்கையில் வசிப்பவருமான சைவப்புலவர் கிருட்டினர் சிவமணி யாழ். மேலதிக நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் சமாதான நீதிவானாக அண்மயில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

இவர், சிறந்த சமூக சேவையாளரும் சிவநெறித் தொண்டருமாவார். பல சமய, சமூக நிறுவனங்களில் அங்கத்துவம் வகித்து வருகின்ற இவர், ஓய்வுபெற்ற அதிபரும் ஆவார்.

(10-15)

* * *



வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரி வணிகவியல் சிரேஷ்ட விரிவுரையாளர் வண. ஜி.நடராஜா கிறிஸ்தவ சமய, சமூக ஆராய்ச்சிமன்ற இயக்குநராகப் பேராயர் கலாநிதி வண. எஸ்.ஜெபநேசனால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணக் கல்லூரியின் ஆரம்பக் கல்வி மேற்பார்வையாளரான இவர், சென்னைப் பல்கலைக்கழகத்தில் பொருளியல் சிறப்புப் பட்டத்தினையும் புதுடில்லிப் பல்கலைக்கழகத்தில் வணிகமாணி பட்டத்தினையும், யாழ். பல்கலைக்கழகத்தில் கல்விப் பட்டப்பின் டிப்ளோமா பட்டத்தினையும் பெற்றவர்.

செரம்பூர் இறையியல் கல்லூரியில் இறையியல் பட்டம், மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தில் பொது நிர்வாகத்தில் முதுமாணிப் பட்டம் ஆகியனவற்றையும் பெற்றுள்ளார்.

(10-185)

* * *



இணுவில் கிழக்கைச் சேர்ந்த சமூக சேவையாளர் குலேந்திரராஜா செல்வலக்சுமி அகில இலங்கை சமாதான நீதிவானாக அண்மையில் மல்லாகம் நீதிமன்றில் நீதிபதி திருமதி சறோஜினி இளங்கோவன் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டுள்ளார்.

இவர், கைதடி வயோதிபர் இல்ல ஆலோசகராகவும் இணுவில் கிழக்கு மாதர் சங்கத் தலைவியாகவும், இணுவில் வடக்கு ஐக்கிய நாணயச் சங்கச் செயலாளராகவும் பல சமூகப் பொறுப்புகளையும் வகித்து வருகிறார்.

(10-150)

## குருநகர் வீதிகளில் வடிகால்கள் சேதம்

குருநகர்,மே29

யாழ். மாநகரசபையால் குருநகர்ப் பகுதியில் அமைக்கப்பட்ட கழிவு நீர் செல்லும் வடிகால்கள் பல சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றன. இச்சேதம் காரணமாக வாய்க்கால்கள் ஊடாகக் கழிவு நீர் செல்ல முடியாமல் தேங்கியுள்ளது.

குருநகரில் உள்ள சில வீதிகளை ஊடறுத்து இவ்வடிகால்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஒரு அடி ஆழமுடையதாகவுள்ள இந்த வடிகால்கள் சேதமடைந்துள்ளதனால் வீதிகளின் மேலாக அமைக்கப்பட்ட மூடிகள் சீரற்றுக் காணப்படுகின்றன. இதனால் வடிகால்களை முற்றுமுழுவதுமாக திருத்தவேண்டும் எனவும் அவ்வாறு திருத்தியமைக்கப்படாவிட்டால் கழிவுநீர் செல்லமுடியாது எனவும் வடிகால்களை சுத்திகரிப்புச் செய்வோர் தெரிவித்தனர். சேதமடைந்துள்ள வடிகால்களினால் கழிவு நீர் தேங்கி, அதனால் நுளம்புகள் பெருகி நோய்கள் உருவாக வாய்ப்பு ஏற்படலாம் என்று சுட்டிக்காட்டப்படுகிறது.

(ஐ-51)

## கந்தப்பொல கலவரத்தில் பாதிப்புற்ற 65 பேருக்கு 76 லட்சம் ரூபா நஷ்டஈடு

கொழும்பு.மே29

கந்தப்பொலவில் தமிழருக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்ட கலவரத்தினால் பாதிக்கப்பட்ட 65 பேருக்கு 76 லட்சம் ரூபா நட்டஈடு வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் நேற்றுக் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த ஊடகத்துறை அமைச்சரும், அரசின் ஊடகப் பேச்சாளருமான ரெஜினோல்ட் குரே இவ்விடயத்தைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர் சி.பி.ரத்நாயக்க கந்தப்பொல கலவரத்தின்போது சொத்துக்களை இழந்தவர்களின் விவரத்தை அமைச்சரவையில் சமர்ப்பித்தார். அந்த விவரங்களின் அடிப்படையில் பாதிக்கப்பட்ட 65 பேருக்கு மொத்தம் 76 லட்சம் ரூபா வழங்க அமைச்சரவை தீர்மானம் மேற்கொண்டது - என அவர் தெரிவித்தார்.

ஏற்கனவே கந்தப்பொலவில் துப்பாக்கிச் சூட்டில் பலியான இருவரின் குடும்பங்களுக்கு தலா ஒரு லட்சம் ரூபா வீதம் நஷ்டஈடு ஜனாதிபதியால வழங்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

(க)

## சுயதொழில் புரியும் ஊனமுற்றோருக்கு தொழில் உபகரணங்கள் அன்பளிப்பு

தென்மராட்சி,மே29

தென்மராட்சி சமுர்த்தி சமூக அபிவிருத்தி மன்ற நிதியத்தினர் பிரதேசத்தில் சுயதொழில் முயற்சியில் ஈடுபட்டுள்ள 26 ஊனமுற்றோருக்கு தொழிலுக்குப் பயன்படுத்தும் உபகரணங்களை அன்பளிப்பாக வழங்கவுள்ளனர்.

இப்பொருள்கள் நாளைமறுதினம் நடைபெறும் தென்மராட்சி பிரதேச சமுர்த்தி வங்கி மகா சங்க அலுவலகத் திறப்பு விழாவின்போது தெரிவு செய்யப்பட்ட 26 ஊனமுற்றோருக்கு வழங்கப்படவுள்ளன.

கடந்த வருடம் பிரதேச சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்களால் நடத்தப்பட்ட கொடி வார வசூலிப்பு நிதியிலிருந்து நாற்பதாயிரம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டு பொருள்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன என்று பிரதேச சமுர்த்தி முகாமைத்துவப் பணிப்பாளர் ஆ.ரகுநாதன் தெரிவித்தார்.

விசேட உதவிகள் தேவைப்படும சமூகப் பிரிவினருக்கு ஆறுதல் ஏற்படுத்தக்கூடிய மக்கள் பங்களிப்புக் கருத்திட்டத்தின் கீழ் இப்பொருள்கள் அன்பளிப்பாக வழங்கப்படவுள்ளன என்றும் - அவர் தெரிவித்தார்.

(ஐ-117)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



வடமராட்சி. தொண்டைமானாற்றைப் பிறப்பிடமாகக்
கொண்டவரும் காங்கேசன்துறையை வசிப்பிடமாகக்கொண்டவரும்
யா/பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் பழைய மாணவரும்
செல்வசந்நிதி ஆலய சமூக சேவையாளரும்
பிரதிக் கல்விப் பணிப்பாளருமாகிய

**உயர்திரு.கிருஷ்ணர் சிவப்பிரகாசம்**

அவர்கள் யாழ்மாவட்ட நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் 19.05.2004 அன்று சமாதான நீதிவானாகச் சத்தியப்பிரமாணம் எடுத்ததையிட்டு அவரைப் பாராட்டி வாழ்த்துகிறோம்.

வாழ்த்துவோர்:
தாய: கி.பரிமளம்
சகோதரர்கள்: கி.நடராசா, திருமதி தே.தங்கரத்தினம்,
திருமதி பா.அன்னராணி (ஆசிரியை), திருமதி ர.வேதி, செல்வி கி.பூமலர்
மைத்துனர்கள: திரு.ந.பாஸ்கரன்(ப.நோ.கூட்டுறவுச் சங்கம்,தெல்லிப்பழை),
திரு.சி.ரவீந்திரன்,
நண்பர்கள: ஆசீர்வாதம் நோவிட் (போதகர்),
ந.மதனசேகரம் (கிராமசேவையாளரும், சமாதான நீதிவானும்).
யாழ்ப்பாணம். (32400)(38-13-19-34)

---

யாழ்.சமூக செயற்பாட்டு மையம்,
கொழும்பு கைத்தொழில் அபிவிருத்தி சபையுடன் இணைந்து
திருமதி லலித்த கே.எல்லவத்தயினால் நடத்திய பெண்களுக்கான

## அழகியல் கலைப் பயிற்சியின் நிறைவு நாள் நிகழ்வும் பரிசளிப்பும் கண்காட்சியும் விற்பனையும்

இடம்: யாழ்.மத்திய கல்லூரி
காலம்: 30.05.2004 - 01.06.2004 வரை
நேரம்: 10.00மணி தொடக்கம் 5 மணிவரை

அழகுக்கலையில் ஆர்வமுள்ள அனைத்துத் தரப்பினருக்கும்
இது ஓர் அரிய சந்தர்ப்பம்.

*இந்தக் கண்காட்சி மூலம்*

- அழகியல் கைவினை வேலைப்பாடுகளுடன் கூடிய சாறிவகைகள், பஞ்சாபிகள், சட்டைகள்.
- துணிகளினாலான பொம்மைகள்
- முத்து ஆபரணங்கள்
- பூச்செண்டுகள், மணவறை அலங்காரம் settee back, மேசை அலங்காரம் (Table arrengement) என்பவற்றைப் பார்வையிடவும் கொள்வனவு செய்யவும் முடியும்.

இவற்றுடன் ஞாயிற்றுக்கிழமை காலை 11.30 மணியளவில் பல்வேறு மணப்பெண் அலங்காரக் காட்சிகளும் இடம்பெறும்.

- இந்து, கிறிஸ்தவ, முஸ்லிம், கண்டிய மணப்பெண் அலங்காரக்காட்சிகள்.

*யாவரும் வந்து பயன் பெறுவீர்கள்.*

(C/35263)(42-13-19-34) - நிர்வாகத்தினர்.

விளம்பர அனுசரணை

சிறி வாலாம்பிகை &சன்ஸ்
28,பெரியகடை, யாழ்ப்பாணம்.

பான்சி ஹவுஸ்
68,பெரியகடை, யாழ்ப்பாணம்.

---

ஒட்டகப்புலம் அமலோற்பவமாதா ஆலயம்

## முக்கிய அறிவித்தல்

இம்மாதம் வணக்கமாதத் திருநாளை சிறப்பாகக் கொண்டாடும் முகமாக 31.05.2004 திங்கட்கிழமை அன்று ஒட்டகப்புலம் அமலோற்பவமாதா ஆலயத்திற்குச் செல்வதற்கு தீர்மானித்துள்ளோம். அந்தவகையில் செல்லவிரும்பும் மாதாவின் பக்தர்கள் அனைவரும் அன்றையதினம் (31.05.2004) காலை 8 மணிக்கு முன்னதாக யாழ்.புனித யுவானியார் ஆலய முன்றலில் ஒன்று கூடுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*குறிப்பு:-*

01. வாகன வசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (இலவசம்)
02. வழமையாக ஒவ்வொரு மாதத்தில் வரும் முதல சனிக் கிழமையில் ஆலயம்சென்று திருப்பலி நடத்தப்படுகின்றது.
03. மேற்படி ஆலயம் இராணுவ உயர்பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ளதால் தேசியஅடையாள அட்டை கொண்டு வரவும்.

நிர்வாகம்

தொடர்புகளுக்கு:
தொலைபேசி: 021-2223302
077-6012995.
(32407) (43-13-19-34)

---

# மனதார வாழ்த்துகிறோம்



*யாழ்.போதனாவைத்தியசாலை*
*முகாமைத்துவ உதவியாளரும்,*
*பண்டத்தரிப்பைச் சேர்ந்தவருமான*

**திரு.**
**அ.எ.பீரிஸ்**

அவர்கள் 24-05-04 அன்று யாழ். மாவட்ட நீதிபதி இ.த.விக்னராசா முன்னிலையில் சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார். அவரை மனதார வாழ்த்துகின்றோம்.

நீர் விநியோகப்பகுதி,
கட்டடப்பகுதி.
போதனா வைத்தியசாலை
யாழ்ப்பாணம்.
(சி-35257)(21-13-19-34)

---

### பயிற்சிநெறிக்கு விண்ணப்பம்

யாழ்ப்பாண மாவட்ட கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியின் கூட்டுறவுப் பணியாளர் தராதரப்பத்திர சாதாரண பிரிவுப் பயிற்சி நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

பயிற்சிநெறியில் இணைந்து கொள்ள விரும்புவோர் குருநகரில் உள்ள கூட்டுறவுப் பயிற்சிக்கல்லூரியுடன் தொடர்புகொள்ளுமாறு கல்லூரியின் அதிபர் கேட்டுள்ளார். (10-ரி)

### சைக்கிள், கைப்பை மீட்பு

யாழ்ப்பாணம்,மே29

யாழ். கோட்டை முனியப்பர் ஆலயப் பகுதியில் அநாதரவான நிலையில் நிறுத்தப்பட்டிருந்த பெண்ணின் சைக்கிள் ஒன்றும் அதிலிருந்த கைப்பையும் யாழ்.பொலீஸ் நிலையத்தில ஒப்படைக்கப்பட்டுள்ளன.

யாழ். பொலீஸ் நிலைய சிறுகுற்றத் தடுப்புப் பிரிவினர் இது தொடா்பாக விசாரித்து வருகிறார்கள். இந்தச் சைக்கிளுக்கும் கைப்பைக்கும் உரியவர் யாழ். பொலீஸ் நிலையத்துடன் தொடர்புகொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளார். (ஒ)

### ஓமந்தையில் விபத்து; இளைஞன் பலி!

வவுனியா,மே29

வவுனியா, ஓமந்தைப் பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற வீதி விபத்தில் ஒருவர் உடல்சிதறிப் பலியானார். நேற்றுமுன்தினம் மாலை 5 மணியளவில் வவுனியாவில் இருந்து ஓமந்தைப் பகுதியை நோக்கி சென்றுகொண்டிருந்த கனரா் வாகனம் ஒன்றும் எதிர்த்திசையில் வந்து கொண்டிருந்த துவிச்சக்கர வண்டியும் நேருக்குநேர் மோதிக்கொண்டன. இதில் சைக்கிளில் வந்தவரான டேவிட் ஜேசுதாசன் (வயது34) என்பவரே பலியானார்.

இறந்தவரின் சடலத்தை வீதியின் ஒதுக்குப்புறமாகப் போட்டுவிட்டு வாகனத்தில் வந்தவர்கள் [illegible]ளனர். அதனைக்[illegible] பொலீஸாருக்கு மு[illegible] பொலீஸார் சந்தேகத்தி[illegible]பேரில் மூன்றுபேரினை கைது செய்துள்ளனர். இவர்களை வவுனியா பொலஸார் தடுத்துவைத்து விசாரணை நடத்துகின்றனர். (8-164)

---

## வாடகைக்கு விடப்படும்

யாழ்ப்பாணம், மிட்டாஸ்கடைச் சந்திக்கும் , மின்சார நிலைய வீதிக்கும் இடையிலுள்ள இல.260. கே.கே.எஸ். வீதியில் அமைந்துள்ள 2400 சதுர அடியுடைய சகல வசதிகளுடனும் கூடிய கடைக்கட்டடம் தனித்தனியாகவோ, முழுமையாகவோ வாடகைக்கு விடப்படும்.

தொடர்பு:
**பொ.பிரபாகரன்**
26A, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.இல.:222-2785
(சி-35264)(34-13-19)

---

# கிறிஸ்தவ ஊழியப் பயிலகம்

இடம்: சீயோன் தேவாலயம்,
24, இராமையா செட்டியார் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
காலம்: 14-06-2004 முதல் 18-06-2004 வரை.

நேரம்: காலை 8.30 மணிமுதல்
பிற்பகல் 2.00 மணிவரை
விரிவுரையாளர்: போதகர் பரி சில்வர் பக் குழுவினர்
(சர்வதேச கிறிஸ்டியன் நிவைவல் குருசேட்)

குறிப்பு:
★ 5நாள்களும் பங்குபற்றுபவர்களுக்கு சர்வதேசச் சான்றிதழ் வழங்கப்படும்.
★ கிறிஸ்தவசபைகளில் ஊழியத்தில் ஈடுபடுவோர் பங்குகொள்ளலாம்.
★ 200 பேர்கள் மாத்திரமே அனுமதிக்கப்படுவர்.
★ தனிப்பட்ட அழைப்பு கொடுக்கப்படமாட்டாது.

**பதிவுக்கட்டணம்: ரூபா 75/=**
(பதிவுசெய்தோர் இக்கட்டணத்தை 14ஆம் திகதி காலை சீயோன் தேவாலயத்தில் செலுத்தலாம்)

பதிவுசெய்யும் கடைசித் திகதி: 07-06-2004
(உங்கள் பெயர்களை நேரடியாகவோ கடித மூலமாகவோ கீழ்க்காணும் முகவரியில் பதிவுசெய்யலாம்.)

போதகர், சீயோன் தேவாலயம்,
347, நாவலர் றோட்,
யாழ்ப்பாணம்.

தகவல்:
**போதகர் J.K.பிலிப்**
(சீயோன் தேவாலயம்).
(32343) (26-19-13-34)

---

## அழகுக் கலைகளைப் பயின்று அழகு பார்ப்பதற்கு யாழ்.குடாநாட்டு மகளிருக்கு மீண்டும் ஒரு சந்தர்ப்பம்!



பிரபல அழகுக்கலை நிபுணர்

# திருமதி பிறேமா ஜெகன்

(Dip.in Beauty Culture, India)

அவர்கள் 3 நாள்களுக்கு வகுப்புகளை நடத்த வருகைதரவுள்ளார்.

இடம்: யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி கேட்போர் கூடம்

**30-05-2004 (ஞாயிறு)** காலை 9.30 முதல் மாலை 4.00 வரை
1) EYE BROW THREADING
2) BLEACH - TWO TYPES
3) BASIC FACIAL - TWO TYPES
4) WAXING
5) BRIDAL DRESSING (மணப்பெண் அலங்காரம்)

முழுக்கட்டணம் ரூபா 1000/- மட்டும்

*31-05-2004 (திங்கள்) வகுப்புகள் நடைபெறமாட்டாது.*

**01-06-2004 (செவ்வாய்)** காலை 9.30 முதல் மாலை 4.00வரை

*கூந்தல் அலங்காரம்*
1) HAIR PERMING
2) FASHION HAIR COLOUR
3) HAIR REBONDING STRAIGHTENING
4) GALVANIC FACIAL & HIGH FREQUENCY
I. முகப்பருவுக்கான சிகிச்சை
II. பொடுகுக்கான சிகிச்சை

முழுக்கட்டணம் ரூபா 1000/-மட்டும்

**02-06-2004 (புதன்)** காலை 11.00 முதல் மாலை 5.00 வரை
1) UPLIFTING முகச்சுருக்கத்தை நீக்கும் FACIAL
2) AROMA MAGIRAL
I. SILVER FACIAL
II. PERL FACIAL
3) AROMA THERAPY
4) GLABRA FACIAL

முழுக்கட்டணம் ரூபா 1000/- மட்டும்

*மேலும் விவரங்களுக்குத் தொடர்புகொள்ளவும்.*
*தொலைபேசி இல. 0777 - 439263*

தொடர்ச்சியாக 3 வகுப்புகளுக்கும் சமுகமளிப்போருக்கு கட்டணத்தில் விசேட கழிவு உண்டு. (C/35203) (26-13-19-34)

# ஜெயலலிதாவின் படுதோல்விக்கு காரணம் என்ன?

## தமிழகத் தேர்தல் வெற்றி: உள்ளிருந்து வரும் ஓர் அலசல்

**1** நடந்துமுடிந்த இந்திய நாடாளுமன்றத் தேர்தலில் தமிழகம் மற்றும் பாண்டிச்சேரியில் கலைஞர் கருணாநிதி தலைமையிலான கூட்டணி வரலாறு காணாத விதத்தில் அனைத்துத் தொகுதிகளிலும் வெற்றிவாகைசூடிச் சரித்திரம் படைத்துள்ளது. இந்த வெற்றிக்கான காரணங்களையும் முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு ஏற்பட்ட பரிதாபத் தோல்விக்கான காரணங்களையும் தேர்தல் நடைபெற்றவேளையில் தமிழகத்திற்கு விஜயம் செய்திருந்த 'உதயன்' சிறப்புப்பிரதிநிதி "கஜனி" அலசி ஆராய்கிறார்.

இந்தியாவின் மத்திய பிரதேசம் ராஜஸ்தான், ஜடீஸ்கர் ஆகிய மாநிலங்களுக்கும் புதுடில்லி யூனியன் பிரதேசத்துக்கும் சட்டசபைத் தேர்தல்கள் இவ்வாண்டு ஜனவரி முதலாம் திகதி நடைபெற்றன. இந்த நான்கு சட்டசபைகளிலும் காங்கிரஸ் கட்சியே ஆட்சி செலுத்தியது. ஆனால், நடைபெற்ற சட்டசபைகளுக்கான தேர்தலில் மத்திய பிரதேசம், ராஜஸ்தான் மற்றும் ஜடீஸ்கர் ஆகிய மாநிலங்களில் பாரதீய ஜனதாக் கட்சி அமோக வெற்றிபெற்று காங்கிரஸிடமிருந்து அந்த 3 மாநிலங்களின் ஆட்சியைக் கைப்பற்றியது. காங்கிரஸால் புதுடில்லியை மாத்திரம் தக்கவைக்க முடிந்தது.

இந்தத் தேர்தல்கள் பா.ஜ. கட்சிக்கும் புதிய உற்சாகத்தை ஊட்டியது. இந்த மாநிலங்களில் கிடைத்த வெற்றியைக் கருத்திற்கொண்டு தேர்தல் களநிலை தங்களுக்கு வாய்ப்பாக இருக்கும் என பா.ஜ.கட்சியினர் கருதினர். முடிவில் நாடாளுமன்றத்தின் ஆட்சிக்காலம் முடிவடைய 6 மாதங்கள் இருந்தநிலையில், நாடாளுமன்றத்தைக் கலைத்துப் பொதுத்தேர்தலை நடத்துவது என அப்போதைய பிரதமர் வாஜ்பாய் தீர்மானித்தார்.

இந்திய நாடாளுமன்றம் உத்தியோகபூர்வமாக 6.2.2004 அன்று ஜனாதிபதியால் கலைக்கப்பட்டபோதிலும், கடந்த டிசெம்பர் மாதத்திலேயே அரசியல் கட்சிகள் தேர்தல் பிரசார வேலைகளில் தீவிரமாக இறங்க ஆரம்பித்தன; கூட்டணிகள் அமைக்கப்பட்டன. மதவாதக் கொள்கை மற்றும் மதச்சார்பற்ற கொள்கை என்ற அடிப்படையில் கூட்டணிகள் அமைக்கப்பட்டன. தேசியக் கட்சிகளான பா.ஜ.கட்சியும் காங்கிரஸ் கட்சியும் மாநிலக் கட்சிகளுடன் கூட்டணி அமைத்தன.

### தமிழகத்தில்

தமிழ் நாட்டில் கடந்த சட்டசபைத் தேர்தலின்போது ஜெயலலிதாவின் அ.தி.மு.கட்சி, காங்கிரஸ், தமிழ்மாநிலக் காங்கிரஸ், பாட்டாளி மக்கள் கட்சி மற்றும் கம்யூனிஸ்ட் கட்சிகள் ஆகியனவற்றுடன் கூட்டணி அமைத்து சட்டசபைத் தேர்தலில் வென்று ஆட்சியைக் கைப்பற்றியது. கூட்டணிக் கட்சிகளின் ஆதரவால் ஆட்சிப் பீடமேறிய ஜெயலலிதா ஆட் சியைக் கைப்பற்றிய மூன்று மாதங்களுக்குள்ளேயே அக்கட்சிகளை எட்டி உதைத்தார்.

காலம் கனியும்வரை காத்திருந்த அக்கட்சிகள் நாடாளுமன்றப் பொதுத்தேர்தலுக்காகக் கூட்டணி அமைக்கப்பட்டபோது கருணாநிதியின் தலைமையிலான ஜனநாயக முற்போக்குக் கூட்டணியில் இணைந்துகொண்டன. பிரிந்திருந்த காங்கிரஸ் மற்றும் தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சிகள் ஒன்றிணைந்தன. மத்திய அரசிலிருந்து தி.மு.க., ம.தி.மு.க. மற்றும் பாட்டாளி மக்கள் கட்சி ஆகியன வெளியேறியதைத் தொடர்ந்து தமிழ் நாட்டில் பாரதீய ஜனதாக்கட்சி தனிமைப்படுத்தப்பட்டது.



கலைஞர் கருணாநிதி கூட்டணிக் கட்சிகளுடன் பல சுற்றுக்கள் பேச்சுக்களை மேற்கொண்டு கூட்டணிக் கட்சிகளுக்குத் திருப்தியேற்படும் விதத்தில் தொகுதிகளை ஒதுக்கினார். கூட்டணி சார்பில் போட்டியிடும் வேட்பாளர்கள் - அவர் எந்தக் கட்சியைச் சார்ந்தவராக இருப்பினும் - அனைத்துக் கட்சிகளும் களத்தில் இணைந்து செயற்படுவது எனத் தீர்மானித்தன.

அதேநேரம், சட்டசபைத் தேர்தலின்போது ஜெயலலிதாவுடன் கூட்டணி அமைத்திருந்த கட்சிகள் அவரைக் கைவிடவே 40 தொகுதிகளிலும் (பாண்டிச்சேரி உட்பட) அ.தி.மு.க. போட்டியிடும் என ஜெயலலிதா அறிவித்தார். அதேநேரம், தமிழ் நாட்டில் பா.ஜ.கட்சி தனித்துப் போட்டியிடவேண்டும். அன்றேல் அ.தி.மு.கவுடன் இணையவேண்டும் என்ற சிக்கலான நிலைக்குத் தள்ளப்பட்டது. அப்படி பா.ஜ.கட்சி தனித்துப் போட்டியிடுவதாயின் மும்முனைப் போட்டி நிலை உருவாகக்கூடும். அந்தநிலை உருவானால் பல தொகுதிகளில் அக்கட்சி கட்டுப்பணத்தை இழக்கும் நிலையும் ஏற்படக்கூடும். அதேநேரம், கருணாநிதி தலைமையிலான அணி மிகவும் சுலபமாக வெற்றிவாகை சூடக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கும். அந்த நிலையைத் தடுப்பதாயின் ஏதோ ஒரு விதத்தில் பா.ஜ.கட்சி, அ.தி.மு.கவுடன் இணைந்தேயாக வேண்டும். அதேநேரம் பா.ஜ.கட்சியின் பொதுச் செயலாளர் இல. கணேசன் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர். தமிழ் நாட்டில் பா.ஜ.கட்சி தனித்துப் போட்டியிட்டுக் கட்டுப்பணத்தை இழப்பது அவருக்கு மானப் பிரச்சினை. எனவே, அந்த வகையில் மானத்தை இழக்கவிரும்பவில்லை. அதாவது, அவர் வேறு விதத்தில் மானத்தை இழக்கத் தயாரானார்.

### அ.தி.மு.க - பா.ஜ.க. கூட்டணி

தமிழகத்தில் அ.தி.மு.கவுடன் கூட்டணி அமைப்பது என பா.ஜ.கட்சி முடிவுசெய்தது. அந்தக் கட்சி தேசியக் கட்சி மாத்திரமல்ல மத்தியில் ஆளும்கட்சியுமாகும். தொகுதி பேரம் ஆரம்பித்தது. தமிழ்நாட்டில் 6 தொகுதிகளையும் பாண்டிச்சேரியில் ஒரு தொகுதியையுமே பா.ஜ.கட்சிக்கு ஒதுக்க ஜெயலலிதா சம்மதித்தார். கலைஞரின் கூட்டணியில் 7 கட்சிகள் இணைந்துள்ள போதிலும், தேசியக் கட்சியான காங்கிரஸுக்கு 10 தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளனவே; அதேபோல் தேசியக் கட்சியான தமக்கும் 10 தொகுதிகளை ஒதுக்குமாறு பா.ஜ. கட்சியினர் காலில் விழாத குறையாகக் கெஞ்சினர். இருப்பினும், ஜெயலலிதா இம்மியும் அசையவில்லை. அது போதாதா? மேலும் நிபந்தனை விதித்தார். பா.ஜ.கட்சி கோரிய தொகுதிகளைக் கொடுக்க அவர் சம்மதிக்கவில்லை. 'நான் ஒதுக்கும் தொகுதிகளை விரும்பினால் ஏற்றுக்கொள்ளுங்கள்' என்றார். அதையும்விட மேலும் ஒரு நிபந்தனை விதித்தார். அவரது எதிரியான மத்திய அமைச்சர் திருநாவுக்கரசு பா.ஜ.கட்சி சார்பில் போட்டியிட அனுமதிக்கக்கூடாது என நிபந்தனை விதித்தார். இவ்வாறு மானத்தை இழந்தபோதிலும், இல. கணேசனும் அவரது கட்சியினரும் இந்த நிபந்தனைகளுக்குச் சம்மதித்தனர். தொகுதிப் பங்கீடு தொடர்பான பத்திரிகையாளர் மாநாட்டில் இல. கணேசன் இவ்வாறு தெரிவித்தார். "கேட்டது கிடைக்கவில்லை; கிடைத்தவற்றுடன் திருப்திப்படுகிறோம்" - என்றார்.

அதி.மு.க - பா.ஜ. கூட்டணி ஆரம்பத்திலேயே ஆண்டான் - அடிமை அடிப்படையுடன் உருவானது. ஆனால், அதேநேரம் ஜனநாயக முற்போக்குக் கூட்டணியில் சமத்துவம் நிலவியது. கூட்டணியின் தலைவர் கருணாநிதியே என அனைத்துக் கட்சிகளும் ஒப்புக்கொண்டு செயற்பட்டன. (பின்னர் தேர்தல் பிரசாரத்தின் போது கருணாநிதி அனைத்துத் தொகுதிகளுக்கும் சென்று கட்சிபேதமின்றிப் பிரசாரம் செய்தார்.

### ஜெயலலிதாவின் கெட்டகாலம்

முதல்வர் ஜெயலலிதாவின் கெட்டகாலமோ என்னவோ பொதுத்தேர்தலை ஏப்ரல் மாதத்தில நடத்துவது எனத் தீர்மானிக்கப்பட்டது. கடந்த இரண்டு மூன்று வருடங்களாகப் பருவகால மழை தமிழகத்தில் சீராகப்பெய்யவில்லை. கோடை வரட்சி காரணமாக நீர் நிலைகளில் தண்ணீர் இல்லை. கர்நாடகத்துடன் சுமுகநிலை இல்லாததால் காவேரியில் ஒரு சொட்டுத்தண்ணீர் இல்லை. மக்கள் குடிதண்ணீருக்கு ஆவலாய்ப் பறந்தனர். திரும்பிய திசையெல்லாம் வர்ணவர்ணப் பிளாஸ்டிக் குடங்கள் தெருவெங்கும் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. தண்ணீர் லொறிகள் மூலம் எடுத்துவரப்பட்டு ஒரு குடம் தண்ணீர் ரூபா 3.50 இற்கு விற்கப்பட்டது. எப்போது லொறி வரும் எனத் தெரியாது. குடும்பப்பெண்கள் தண்ணீர் லொறிகளை எதிர்பார்த்து இரவு பகலாகக் காத்திருக்கவேண்டிய நிலை எம்.ஜி.ஆர் முதலமைச்சராக இருந்தபோது சென்னைக்குத் தண்ணீர் கொண்டுவருவதற்காக 72 கோடி ரூபா செலவில் வீராணம் திட்டத்தை ஆரம்பித்தார். ஆனால், அது சாத்தியமற்றது என்பதை அறிந்த பின்னர் அந்தத் திட்டம் கைவிடப்பட்டது. முதலமைச்சர் ஜெயலலிதா அந்தத் திட்டத்தை மீண்டும் புதுப்பிக்க 720 கோடி ரூபாவை ஒதுக்கினார். 45 ஆழ்துழைக் கிணறுகளை அமைத்து அங்கிருந்து பாரிய குழாய்கள் மூலம் மே மாதம் முதல்வாரத்தில் (தேர்தலுக்கு சில நாள்களுக்கு முன்னர்) சென்னைக்கு தண்ணீரைக் கொண்டுவரத் திட்டமிடப்பட்டிருந்தார். போதிய நீரும் கிடைக்கவில்லை. போதாக்குறைக்கு ஓரிருநாள் பெய்த கோடை மழைக்குப் போடப்பட்ட குழாய்கள் பல இடங்களில் அடித்துச் செல்லப்பட்டன. தமிழ் நாட்டின் தென் மாநிலங்களில் நதிகள் வரண்டபடியால் விவசாயம் கைவிடப்பட்டது. வயல்களில் சாகுபடி செய்யவேண்டிய விவசாயிகள் வயல்களில் எலிகளைப் பிடித்துத் தின்னும் பரிதாப நிலை. மொத்தத்தில் தேர்தல் நேரத்தில் குடிதண்ணீர்ப் பிரச்சினை மிகமுக்கிய பிரச்சினையாக உருவெடுத்திருந்தது. இது ஆளும் கட்சியான அ.தி.மு. கட்சிக்கு மிகவும் ஒரு பாதகமான விடயமாகவும் எதிரணிக்கு மிகவும் சாதகமான விடயமாகவும் அமைந்தது. பெரிய தொழிற்சாலைகளுக்கெனக் கொண்டுவரப்பட்ட "சென்வாட்" என்னும் வரியை சிறுகைத் தொழிலாளர்களிடமும் அறவிடுவது என்ற தமிழக அரசின் தீர்மானத்தால் சிறுகைத்தொழில்களில் ஈடுபட்ட ஆயிரக்கணக்கானோர் பாதிக்கப்பட்டனர்; வேலைகளை இழந்தனர்.



விவசாயிகளுக்கு நீர் இறைக்கும் இயந்திரங்களுக்குப் பயன்படுத்த முன்னர் இலவச மின்சாரம் வழங்கப்பட்டது. ஆனால், ஜெயலலிதா முதல்வரானதும் அந்த மின்சாரத்திற்கு கட்டணம் செலுத்தவேண்டும் என ஆணையிட்டார். குறித்த திகதிக்குள் மின்கட்டணம் செலுத்தாத விவசாயிகளின் மின் விநியோகம் துண்டிக்கப்பட்டது.

கர்நாடகத்திலிருந்து தர்மபுரித் தொகுதியூடாக (ஒகேனகல்) காவிரி ஆறு தமிழ் நாட்டிற்கு வருகிறது. அப்பகுதி மக்களின் பரிதாப நிலையைக் கண்ட யப்பான் அரசு ஒகேனகல் குடி தண்ணீத் திட்டத்தை ஆரம்பித்தது. போக்ரானில் இந்தியா அணுகுண்டைப் பரீட்சித்ததையடுத்து ஜப்பான் அரசு அந்தத் திட்டத்தைக் கைவிட்டது. இந்தத்திட்டம் நிறைவேற்றப்பட்டிருந்தால் தர்மபுரி, கிருஷ்ணகிரி மற்றும் திருப்பத்தூர் தொகுதிகளைச் சேர்ந்த மக்களின் குடிதண்ணீர்ப் பிரச்சினை தீர்ந்திருக்கும். இதனால் இந்த மூன்று தொகுதிகளையும் சேர்ந்த மக்கள் பாரதீய ஜனதா மீதும் அதன் கூட்டணிக் கட்சியான அ.தி.மு.க.மீதும் ஆத்திரமுற்று இருந்தனர்.

### பொடா விவகாரம்

தடைசெய்யப்பட்ட விடுதலைப் புலிகள் அமைப்பை ஆதரித்துப் பேசுவது குற்றமல்ல என மத்திய அரசு தெரிவித்தது. அதை உச்ச நீதிமன்றமும் ஏற்றுக்கொண்டது. பொடா மனு ஆய்வுக்குழுவும் அதே முடிவையே வெளியிட்டுள்ளது. இவற்றின்படி வைகோ, நக்கீரன் கோபால் மற்றும் 8 பேர் மீது எதுவித குற்றச்சாட்டும் இல்லை. இந்நிலையில், முறைப்படி இந்த வழக்குகளை வாபஸ் பெறுவதற்கான நடவடிக்கைகளைத் தமிழக அரசின் தலைமைச் செயலாளரும் அரச வழக்கறிஞரும் நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்க வேண்டும். ஆனால், அவ்வாறு நடவடிக்கை எடுப்பதற்குப் பதிலாக தொடரப்பட்ட வழக்குகளை பூந்தமல்லி நீதிமன்றத்தில் தொடர்ந்து நடத்த முயன்றது. ஆனால், பூந்தமல்லி நீதிமன்றம் இந்த வழக்கை விசாரிக்க உயர்நீதிமன்றம் இடைக்காலத் தடையுத்தரவு பிறப்பித்துள்ளது.

பொடா சட்டத்தைத் தவறாகப் பயன்படுத்தி வைகோ, பழ.நெடுமாறன், நக்கீரன் கோபால் மற்றும் எண்மரைத் தமிழக அரசு கைதுசெய்து சிறையிலடைத்தது. ஒன்றுக்குப் பின் ஒன்றாக அவர்கள் தாக்கல் செய்த மேன் முறையீடுகளை அடுத்து நிபந்தனையின் பேரில் அவர்கள் விடுதலை செய்யப்பட்டனர். விடுதலையான வைகோவுக்குத் தனது முன்னைய தொகுதியான சிவகாசியில் போட்டியிட வாய்ப்பிருந்தும் அந்தத் தொகுதி மதிமுகவுக்கு ஒதுக்கப்பட்டிருந்தும் அவர் தேர்தலில் போட்டியிடவில்லை. தனக்குப் பதிலாக சிம்பிப்பாறை ரவிச்சந்திரனைச் சிவகாசியில் வைகோ களமிறக்கினார்.

சிறைமீண்ட செம்மல்களுக்குத் தமிழகமெங்கும் பெரிய அளவில் வரவேற்புகள் இடம்பெற்றன. நீதிமன்றங்களின் கருத்துப்படி அவர்கள் நிரபராதிகள். அவர்கள் மீதான வழக்குகள் சோடிக்கப்பட்டவை எனத் தெரியவந்தபோது மக்களிடையே அவர்களது மதிப்பு உயர்ந்தது. அவர்கள் தேர்தல் பிரசாரங்களில் இறங்கி தங்கள் துன்பியல் அனுபவங்களை எடுத்துக் கூறியபோது பல இடங்களில் மக்கள் கண்ணீர் விட்டனர்.

### அரச ஊழியரின் ஆத்திரம்

அரச ஊழியர்கள் மீது எஸ்மா, டெஸ்மா சட்டங்களைப் பயன்படுத்தி முதலமைச்சர் ஜெயலலிதா 2 லட்சத்துக்கும் அதிகமான அரச ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களை வேலை நீக்கம் செய்தார். அவர்கள் செய்த குற்றம் என்ன? தொழிற்சங்க உரிமையான வேலைநிறுத்தத்தை மேற்கொண்டது மட்டுமே. அரச ஊழியர்கள் சார்பாகத் தொழிற்சங்கங்களும் தி.மு.கவும் உச்ச நீதிமன்றம் வரை சென்றதால் 'அந்த அக்கிரமத்துக்கு ஓரளவு முடிவு கிடைத்தது. ஐந்து ஆண்டுக் காலம் பதவியை வகிக்கும் அதாவது ஒரு குறுகிய காலத்துக்கு மட்டுமே பதவி வகிக்கும் முதல்வர் நிரந்தரப் பதவி வகித்த அரச ஊழியர்களையும் ஆசிரியர்களையும் அடிமைபோல், எதிரிகள்போல் நடத்தினார். அந்த 'அடிமைகள்' ஒன்றிணைந்து என்றோ ஒரு நாள் தனது காலை வாருவார்கள் என்பதை ஜெயலலிதா மறந்தது துர்ப்பாக்கியமே.

இன்றைய உலகின் அச்சு ஊடகங்களாயினும் சரி இலத்திரனியல் ஊடகங்களாயினும் சரி மிகவும் ஆற்றல்மிக்கவை என்பதை ஆட்சியிலிருக்கும் பல தலைவர்கள் ஏனோ மறந்துவிடுகிறார்கள். ஒரு கட்சியை ஆட்சி பீடம் ஏற்றவும் ஆட்சி பீடத்திலிருக்கும் கட்சியை ஆட்சியிலிருந்து இறக்கவும் ஊடகவியலாளர்களுக்கு ஆற்றலுண்டு. ஊடகவியலாளர்கள் மீதான விஷப பரீட்சைகள் தக்க நேரத்தில் ஜெயலலிதாவின் காலைவாரத் தவறவில்லை.

(வளரும்)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 06 - 05 - 1934



மறைவு 29 - 04 - 2004

### திருமதி கந்தசாமி இராசம்மா

(திதி:பூர்வபக்க தசமி)

29.04.2004 இல் இறைவனடி சேர்ந்த எமது அன்புத் தெய்வத்தின் 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்தியமும் இன்று(29.05.2004) சனிக்கிழமை காலை 6 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அன்றையதினம் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் எம்முடன் இணைந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், அன்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றாம்.

நாளை (30.05.2004) ஞாயிற்றுக்கிழமை அவர் நினைவாக நெல்லியடி, நெல்லை முருகன் திருமண மண்டபத்திலும், நவிண்டில் குலனையம்பதி விநாயகர் ஆலயமண்டபத்திலும் நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

*க.நாகராசா,*
*ஜனனி பல்பொருள் வாணிபம்,*
*நெல்லியடி.*

- குடும்பத்தினர்.
கரணைவாய் மத்தி,
நவிண்டில், கரவெட்டி.

(சி-35265)(37-13-17-21)



## 7 ஆம் வருட நினைவஞ்சலி

தோற்றம் 01 - 08 - 1938



மறைவு 29 - 05 - 1997

### துரைச்சாமி சச்சிதானந்தன்

திதி: 6.6.2004

எமது குடும்பத்தின் ஒளிவிளக்காய்
பாசத்தின் இருப்பிடமாய்
வாழ்ந்த எம் தெய்வமே!
ஆண்டுகள் ஏழு ஓடி
மறைந்தாலும் உங்களின்
நினைவுகள் மட்டும் எங்களை வீட்டகலாது

27/1, புங்கன்குளம் வீதி,
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.

- குடும்பத்தினர்.

(32367)(38-21-13-17)



## STUDY IN INDIA

**Engineering, Medicine & Pharamedical**
**ADMISSIONS 2004-05**
**VINAYAKA MISSIONS' GROUP OF COLLEGES**
www.vinayakamissions.com

Vinayaka Missions' is the leader in the field of education for more than two decades running totally 25 Educational Institutions imparting Medical, Engineering, Management and Computer education, in addition to various other courses.

**A.V. INSTITUTE OF TECHNOLOGY (A.V.I.T)**
(Approved by AICTE, New Delhi, Affiliated to Anna University)
Paiyanoor, Chennai, TAMIL NADU

**B.Eng** - 4 Years
* Electronics & Communication Engineering (ECE)
* Electrical & Electronics Engineering (EEE)
* Computer Science & Engineering (CSE)
* Mechanical Engineering (Mech)

Req. Pass in Maths, Physics & Chemistry at GCE A'Level.

**V.M College of Pharmacy, Salem, TAMIL NADU**
(Affiliated to Tamilnadu Dr.MGR Medical University)

**B.Pharm** - Bachelor of Pharmacy - 4 Years

Req. Pass in Biology, Physics & Chemistry at GCE A'Level.

Other under graduate courses available in
* Homeopathy & Surgery (BHMS)
* Physiotherapy (BPT)
* Optometry (B.Opto)
* B.Sc Nursing

*Contact for more details:-*
**NN EDUCONSULT**
181/1W.A.Silva Mawatha, Colombo-06.
Tel: 011-555 88 33 Fax: 011-555 88 44
E-mail: nnconsult@sltnet.lk


## ஒருங்கிணைப்புக் கூட்டம்

காரைநகர்,மே.29

காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பிரிவின் மாதாந்த ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் எதிர்வரும் முதலாம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு உதவி அரச அதிபர் பணிமனையின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

உதவி அரச அதிபர் செல்வி பிரபா கந்தசாமி ஐயர் தலைமையில நடைபெறும் இந்தக் கூட்டத்தில் திணைக்களத் தலைவர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், கூட்டுறவுச் சங்கத் தலைவர், பொது முகாமையாளர் ஆகியோர் கலந்து கொள்வர். (10-73)

## விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம்,மே29

நூலகமும் தகவல் விஞ்ஞானமும் - தரம்1 டிப்ளோமா கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப பட்டுள்ளன.

இதில் இணைந்து கொள்ள விரும்பு பவர்கள். விண்ணப்பப்படிவங்களை யாழ் பல்கலைக்கழக நூலகத்தில். அடுத்தமாதம் முதலாம் திகதியிலிருந்து 4 ஆம் திகதி வரை பெற்றுக் கொள்ளலாம் என்று அறிவிக்கப் பட்டுள்ளது.

(10-ரி)


### இசைக் குறிப்புகள்

Organ, Guitar, வீணை, வயலின், புல்லாங்குழல், மெலோடிக்கா போன்ற இசைக்கருவிகளுக்கான சினிமாப் பாடல்கள், பக்திப் பாடல்களின் இசைக் குறிப்புகள் பாகம் 10வரை வெளிவந்துள்ளன.

தொடர்பு: **S.S.Rajeendran,**
Karaweena Iasi Manram,
75,Temple Road, Nallur,Jaffna.
T.P 0777031293
(நல்லூர் ஆலயத்தில் இருந்து 500m தெற்கே)

(32135)



### நாவல்கள்

செங்கை ஆழியானின் புதிய நாவல்கள்- போரே நீ போ, வானும் கனல் சொரியும், சாம்பவி, ஈழராஜா எல்லாளன், கூடில்லா நத்தைகளும் ஓடில்லா ஆமைகளும், மற்றும்.. கிடுகுவேலி, யானை, குவேனி, காவோலை, ஆச்சீ பயணம் போகிறாள்.. பிரபல புத்தகசாலைகளில் விற்பனையாகின்றன.

**கமலம் பதிப்பகம்**
75/10A, பிறவுண் வீதி, நீராவியடி,
யாழ்ப்பாணம்.

(32286)



## NEW SCIENCE HALL

கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

**2005 A/L**

**DAY CLASS**

(2004 A/L பரீட்சைக்கு தோற்றியவர்களுக்கு)

எமது வழமையான ஆசிரியர் குழு

**ஆரம்பம் : 01.06.2004 8.00 a.m.**

(32395)(40-21-13-17)



## 31ஆம் நாள் நினைவு

பிறப்பு 05 . 06 . 1937



இறப்பு 01 . 05 . 2004

அமரர்

### ம.பெர்ணாண்டோ (இரத்தினம்)

அன்புடனும் பண்புடனும் ஆதரவாய் இருந்தீர்
இன்றோடு முப்பத்தொருநாள் முடிந்தே போனாலும்
என்றும் உமது திருமுகம் எம் கண்முன்னே வந்து
தென்றலாய் வீதியெங்கும் மணம் பரப்பி நிற்கிறதே!

9ஆம் வட்டாரம்,
புதுக்குடியிருப்பு.

அன்பு மனைவி
பிள்ளைகள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்.

குறிப்பு:
*எதிர்வரும் 31.05.2004 திங்கட்கிழமை காலை 7.00 மணிக்கு புதுக்குடியிருப்பு சூசையப்பர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். திருப்பலியின் பின்னர் எமது இல்லத்தில் நடைபெறும் உபசரணையிலும் கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம்.*

(சி-35268)(21-38-13-17)



## ஹற்றன் நஷனல் வங்கி

யாழ்ப்பாணம்

### அடகுப் பொருள்களை மீட்டல்/ விற்பனைக்கான அறிவித்தல்

**எமது கிளையில் அடகுச் சேவை வசதிபெற்ற வாடிக்கையாளர் கவனத்திற்கு!**

நீங்கள் பெற்றுள்ள அடகுக் கடனுக்குரிய சீட்டின் மறுபக்கத்தில் குறிக்கப்பட்ட விதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைய அடகு வைக்கப்பட்டுள்ள பொருள்களை ஒரு வருட காலத்துக்குள் கடன் செலுத்தப்பட்டு மீட்கப்பட வேண்டும் என்பதை மீண்டும் அறியத்தருகிறோம்.

உங்களால் பெறப்பட்ட கடனின் முழுப் பகுதியையும் உடனே செலுத்த முடியாவிட்டால் கடனுக்குரிய வட்டியையும் கடனின் ஒரு பகுதியையும் செலுத்தி கடனின் காலாவதித் திகதியினை நீடித்துக் கொள்ளலாம்.

ஒரு வருட காலத்துக்கு மேற்பட்ட அடகுப் பொருள்களை மீட்க/ காலாவதித் திகதியை நீடிக்க ஆவன செய்யாத வாடிக்கையாளரின் அடகுப்பொருள்கள் ஆனி 26.2004 அன்று ஏலத்தில் விற்பனைக்கு விடப்படும் என்பதை இத்தால் அறியத்தருகின்றோம்.

(C/35259)(40-21-13-17)

-முகாமையாளர்.



## வலயக்கல்வி அலுவலகம், தீவகம்

## கேள்வி அறிவித்தல்

கீழே குறிப்பிட்ட வேலைக்கான கேள்விகள் கேள்விச்சபை தலைவரும் தீவக வலயக்கல்விப் பணிப்பாளருமாகிய என்னால் 2004-06-14 ஆம் திகதி முற்பகல் 10.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்பட்டு அன்றைய தினமே முற்பகல் 11.00 மணிக்குத் திறக்கப்படும். அச்சமயம் விரும்பும் கேள்விதாரர் அல்லது அவரால் எழுத்து மூலம் அங்கீகரிக் கப்பட்ட பிரதிநிதி சமுகமளிக்கலாம்.

| பாடசாலையின் பெயரும் வேலை விவரமும் | மீளளிக்கப்படாத கட்டணம் | மீளளிக்கப்படும் வைப்புப் பணம் |
|---|---|---|
| யா/யாழ்ற்றன் கல்லூரி<br>35′ X 25′ வகுப்பறை அமைத்தல்<br>30′ X 25′ இருமாடிக் கட்டடம்<br>மிகுதி வேலை | ரூ. 500/- | ரூ. 5000/- |

1. மேற்படி வேலைகளுக்கு இக்ராட் (ICTAD) நிறுவனத்தில் தரம் 9 உம் அதற்கு மேற்பட்ட தரத்திற்கும்.
2. கேள்விப் பத்திரங்களில் பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (VAT), சேர்க்கப்பட்ட கேள்வித்தொகை, பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (VAT), சேர்க்கப்படாத கேள்வித்தொகை என்பன தனித்தனியாக குறிப்பிடப்பட வேண்டும்.
3. மேற்படி கேள்விப் பத்திரம் சம்பந்தமான ஆவணங்கள், விவரங்கள், ஒப்பந்த நடைமுறைகள் என்பவற்றை மீளளிக்கப்படாத கட்டணம் 500/- உம் மீளளிக்கப்படும் வைப்புப் பணமாக 5000/- உம் சேர்த்து வலயக் கல்விப் பணிப்பாளர் [illegible] என்ற பெயருக்குக் காசுக்கட்டளை மூலம் செலுத்தி 2004.05.27 இருந்து 2004.06.07ஆம் திக[illegible] பெற்றுக்கொள்ளலாம்.

பாடசாலை வேலைக[illegible]
வலயக்கல்வி அலுவலக[illegible],
தீவகம், வேலணை.

[illegible]-3525[illegible]-21-32)

திரு.பொ.வேணுகோபால்
கேள்விச் சபைத் தலைவர்
வலயக் கல்விப் பணிப்பாளர் தீவகம், வேலணை.

# வன்னியில் பிறந்த போர் இலக்கியங்கள் பல்கலை ஆய்வுகளுக்கு பயன்படுகின்றன

## இது வரவேற்கத்தக்கது என்கிறார் புதுவை இரத்தினதுரை

யாழ்ப்பாணம்,மே29

வன்னி மண்ணில் படைக்கப்பட்ட போர் இலக்கியங்கள் இன்று யாழ். பல்கலைக்கழக பட்டப்படிப்பிற்கான ஆய்வுகளுக்குப் பயன்படுத்தப்படுகின்றமை வரவேற்கத்தக்கதாகும்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை இவ்வாறு குறிப்பிட்டார்.

மாலதி படையணிப் போராளி மலைமகள் எழுதிய 'புதிய கதைகள்' என்ற நூல்வெளியீட்டு விழா ஆசிரியை திருமதி ஜெயச்சந்திரன் பத்மா தலைமையில் கடந்த புதன்கிழமை பிற்பகல் நல்லூர் நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் அறிமுகவுரை நிகழ்த்திய புதுவை இரத்தினதுரை உரையாற்றும்போது தெரிவித்ததாவது:-

அரச சார்பற்ற நிறுவனங்களின் பணத்தில் உலகமயமாக்கலுக்கான வேடம் போட்டவர்கள் அல்ல நாங்கள. பெண் போராளிகளுடைய படைப்புகள வீச்சுப் பெற்றவையாகக் காணப்படுகின்றன. இதற்குக் காரணமாக அவர்களுடைய போர்க்கள அனுபவங்கள் உள்ளன.

மலைமகளின் "புதிய கதைகள்" பல புதிய அனுபவங்களை வெளிக்கொண்டு வருகின்றன. 1990 ஆம் ஆண்டளவில் இவர் எழுத்துத் துறைக்கு வந்தார். அக்காலத்தில் "சரிநிகர்" பத்திரிகையில் 'மோகனா' என்ற பெயரில் தனது ஆக்கங்களை வெளிக்கொண்டு வந்துள்ளார்.

வன்னியைப் பொறுத்தவரை 1997-98 ஆம் ஆண்டுக் காலப்பகுதி மிகவும் நெருக்கடியான காலகட்டமாகும். போரை நடத்த ஆள்களை இணைக்கவும் நாம் நேரடியாக ஈடுபட்டுவந்த நேரம் அது.

போர்க்களத்தைப் படைப்பது வேறு; போரைப் படைப்பது வேறு. போர்க்களத்தில் எனக்கும் மட்டுப்படுத்திய அளவிலேயே அனுபவம் உண்டு. ஆனால், மலைமகள் போர்க்களத்தில் நின்று விழுப்புண் அடைந்த ஒரு போராளி. அந்த வகையில் இவரின் படைப்புக்கள் மிகவும் புதிய பரிணாமத்தைக் கொண்டுள்ளன.

இவர் ஓர் எழுத்தாளர் மட்டும் அல்ல. நாடக ஆசிரியராகவும், கவிதை நிகழ்வுகள் மற்றும் நாட்டிய நிகழ்வுகளையும் கூடப் பல சந்தர்ப்பங்களில் தோளில் சுமந்து சென்று வெற்றியீட்டியவர்.

நாம் இன்று பத்திரிகைக்குப் புகைப்படங்கள் கொடுப்பதிலும் அவை பிரசுரமாகிவிட்டனவா என்பதைப் பார்ப்பதிலும் கவனஞ்செலுத்துகின்றோம். ஆனால், இப்போராளி தனது முகத்தைக் காட்டவே தயக்கம் காட்டுபவர் ஆவார்.

ஸ்கண்டினேவிய நாடுகள், ஐரோப்பிய நாடுகள் மற்றும் அண்மையில் சில நாள்களுக்கு முன்னர் தென்னாபிரிக்காவிற்கும் இவர் சென்று திரும்பியுள்ளார். உலகநாடுகள் சென்று திரும்பிய இவரது அனுபவங்களை நூலாக வெளிக்கொண்டு வரவேண்டும் - என்றார் அவர்.

வெளியீட்டுரையை நிகழ்த்திய திருமதி தமிழவள் உரையாற்றும் போது தெரிவித்ததாவது:-

1991 ஆம் ஆண்டு ஆனையிறவில இடம்பெற்ற ஆகாயக் கடல் வெளிச் சமரின்போது வீரமரணத்தைத் தழுவிக்கொண்ட கப்டன் வாணி இறுதியாகத் தனது குறிப்பேட்டில் "நான் எழுதாதவற்றை நீங்கள் எழுதுங்கள" என்று எழுதியிருந்தார்.

அந்தவகையில் எமது பெண் போராளிகள் பல படைப்புக்களை இன்று வெளிக்கொண்டு வருகின்றார்கள். நாம் யார்? ஏன் ஆயுதம் ஏந்தினோம்? இன்றும் ஏன் எதற்காகப் போராடுகின்றோம்? என்பவற்றை எல்லாம் இந்நூல் தெளிவுபடுத்திச்செல்கின்றது - என்றார்.

(ஒ-86,ரி)



கடந்த திங்கள் அன்று மட்டக்களப்பில் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்ட கிழக்குப் பல்கலைக்கழக பொருளியல்துறைத் தலைவர் பேராசிரியர் குமாரவேல் தம்பையாவின் இறுதிக்கிரியைகள் நேற்றுமுன்தினம் வவுனியா ஆசிக்குளத்தில் நடைபெற்றது. பேராசிரியரின் பூதவுடலை கிழக்குப் பல்கலைக்கழகச் சமூகத்தினர் தாங்கிச்சென்றபோது எடுக்கப்பட்ட படம்.

# தென்மராட்சியில் இம்முறை பதநீர் உற்பத்தி இல்லை

தென்மராட்சி,மே29

தென்மராட்சிப் பிரதேசத்தில் இவ்வருடம் பதநீர் உற்பத்தி செய்யப்படவில்லை எனத் தெரியவருகிறது.

பனங்கள்ளு உற்பத்தி சீசனில் பல இடங்களில் பதநீர் உற்பத்தி செய்யப்படுவதாகவும் -

குடாநாட்டில் சுண்ணாம்புப் பவுடர் பெறுவதில் கஷ்டம் நிலவுவதால், இவ்வருடம் பதநீர் உற்பத்தியில் தொழிலாளர்கள் ஈடுபடவில்லை எனவும் தெரியவந்தது.

வெல்ல உற்பத்திக்கும், வேறு தேவைகளுக்காகவும் பதநீர் வாங்குவதற்கு பொதுமக்கள் அலைந்து திரிவதையும் காணமுடிகிறது.

பதநீர் உற்பத்தி அதிகளவு இடம்பெறும் வரணிப் பகுதியில் இவ்வருடம் எவரும் அதன் உற்பத்தி நடவடிக்கையில் ஈடுபடவில்லை எனவும் - கூறப்பட்டது. (எ-117)

# தமிழகத்திலிருந்து தலைமன்னாருக்கு கஞ்சா கடத்தி வந்த ஐவர் சிக்கினர்

## மற்றொருவர் கடலில் மூழ்கி உயிரிழப்பு

தலைமன்னார்,மே29

இந்தியாவில் இருந்து தலைமன்னாருக்குப் போதைப் பொருள்களை கடத்தி வந்தார்கள் எனக் கூறப்படும் கோஷ்டி ஒன்று தலைமன்னார் கடற்படையிடம் சிக்கியது. ஆறுபேர் கொண்ட இக்கோஷ்டியில் ஒருவர் தலைமன்னார் கரையோரக்கடலில் மூழ்கி உயிரிழந்து விட்டார் எனவும் ஏனைய ஐவரையும் கடற்படையினர் பொலீஸாரிடம் ஒப்படைத்து விட்டனர் எனவும் கூறப்பட்டது.

1999ஆம் ஆண்டு திருகோணமலை திரியாய்ப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து இந்தியாவில் அகதியாகத் தஞ்சமடைந்திருந்த கணேஷ் என்பவரே உயிரிழந்தார் என்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

தமிழகம் இராமேஸ்வரம் பகுதியில இருந்து படகு ஒன்றில் தலைமன்னார் பகுதியிலுள்ள தலைசிகரம் என்ற இடத்திற்கு கடந்த 26 ஆம் திகதி புதன்கிழமை மாலை 5 மணியளவில் இவர்கள் ஆறுபேரும் 10 கிலோ நிறையுடைய கஞ்சாவை கடத்திவந்தனர் என்று கூறப்பட்டது.

இவர்களில் ஒருவரை படகில் இருக்குமாறு கூறிவிட்டு ஏனைய ஐந்து பேரும் கஞ்சாவுடன் கரைக்கு வந்தனர் எனவும், அப்போது அங்கு காவல் கடமையில் ஈடுபட்டிருந்த கடற்படையினரிடம் அவர்கள் சிக்கிக்கொண்டனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. இந்த ஆறுபேர்களில் மூவர் தமிழகத்தைச் சேர்ந்தவர்கள். ஏனைய மூவரும் இலங்கைத் தமிழ் அகதிகள என்று பொலீஸார் தெரிவிக்கின்றனர்.

படகில் தனியாக இருந்தவரான கணேஷ் என்பவர் நேற்றுமுன்தினம் வீசிய கடும்காற்றினால் படகு கவிழ்ந்து கடலில் மூழ்கி உயிரிழந்தார் என்று கூறப்படுகின்றது.

உயிரிழந்தவரின் சடலம் சுழியோடிகள் மூலம் கடலில் இருந்து நேற்றுமுன்தினம் காலை மீட்கப்பட்டது.

சம்பவ இடத்திற்குச் சென்று விசாரணைகளை நடத்திய மன்னார் மாவட்ட நீதிபதி சடலத்தை பிரேத பரிசோதனைக்காக மன்னார் வைத்தியசாலையில் ஒப்படைக்கும்படி பொலீஸாருக்கு உத்தரவிட்டார்.

(எ-4-164)

# திருமண வீட்டில் வீடியோ பிடித்த மூவர் மின் ஒழுக்கினால் தாக்குண்டனர்

## ஏழாலைப் பகுதியில் சம்பவம்

தெல்லிப்பழை,மே29

திருமண வீட்டில் வீடியோப்படம் எடுப்பதற்காக கமராவுடன் இணைக்கப்பட்டிருந்த மின்சார வயரில் ஒழுக்கு ஏற்பட்டதால் மின்சாரத் தாக்குதலுக்கு இலக்காகி மூவர் தெல்லிப்பழை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

கடந்த புதனன்று ஏழாலைப் பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றது.

வீடியோ கமராவுக்கு மின்சாரம் பெறுவதற்காக இணைக்கப்பட்டிருந்த வயரில் சேதமடைந்திருந்த பகுதியொன்று அங்கு போடப்பட்டிருந்த தகரப் பந்தலுடன் முட்டியதால் அந்த தகரப் பந்தலில் மின்சாரம் பாய்ந்தது எனவும் - அப்போது அதில் சாய்ந்திருந்த மூவர் கடுமையான மின் தாக்கத்துக்குள்ளாகினர் எனவும் கூறப்பட்டது.

தாலிகட்டும் நேரத்தில் நடந்த இச்சம்பவத்தால் திருமண வீடு அல்லோலகல்லோலப்பட்டது.

(எ-4-150)

### வாராந்தச் சொற்பொழிவு

வடமராட்சி,மே29

வடமராட்சி ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் கோவில் பெரியாழ்வார் மடத்தில் நடைபெற்று வரும் வாராந்த சமயச் சொற்பொழிவுத் தொடரில் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11மணிக்கு சைவசமயத்தின் விழுமியங்கள் என்னும் தலைப்பில் சைவசித்தாந்த பண்டிதர் சிவஸ்ரீ தியாக சோமஸ் கந்தராஜக் குருக்களின் சொற்பொழிவு இடம் பெறும். (எ-173)

### கண்ணாடித் தொழிற்சாலை ஊழியர் கூட்டம்

யாழ்ப்பாணம்,மே29

நீர்வேலி கண்ணாடித் தொழிற்சாலை ஊழியர் சங்கத்தின் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11மணிக்கு நீர்வேலி கந்தசுவாமி கோயில் வீதியில் அமைந்துள்ள சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் அனைத்து ஊழியர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு சங்கத்தின் தலைவர் கேட்டுள்ளார். (10-ரி)

# போரினால் மனவளர்ச்சி குன்றிய பிள்ளைகள் வாழ்வில் ஒளியேற்றுவோம்!

யாழ்.மாவட்டத்தில் கடந்த காலங்களில் நிலவிய போர்ச் சூழலில்- குறிப்பாக 1990 ஆம் ஆண்டுக்குப் பிற்பட்ட காலத்தில் - பல குழந்தைகள் மனவளர்ச்சி குறைந்த குழந்தைகளாக பிறந்துள்ளன என்பது தெரியவருகின்றது.

யுத்த காலத்தில் ஏற்பட்ட பதற்றம், பயப்பீதி, வெடியோசைகள் என்பவற்றின் காரணமாகவும், வீடுவாசல்கள், சொத்து இழப்புக்கள், குடும்ப அங்கத்தவர்கள், உறவினர்களை சாவு கொடுத்த கவலைகளாலும், வீடுகளை விட்டு வெளியேறி அகதிகளாகி இடத்துக்கிடம் அலைந்து திரிந்த மன உளைச்சல்களாலும் பாதிப்படைந்த கர்ப்பிணித் தாய்மார்களின் வயிற்றில இவ்வாறு மனவளர்ச்சி குறைந்த குழந்தைகள் உருவாகிப் பிறந்துள்ளன.

உலக நாடுகள் பலவற்றில் இவ்வாறு மூளை வளர்ச்சி குறைந்த குழந்தைகளுக்கு கருணையோடு செயற்படுகின்ற பல்வேறு வகையான உதவிகள், ஒத்தாசைகள் எமது ஈழ நாட்டில் குறிப்பாக யாழ்ப்பாண மாவட்டத்தில் மிகச்சொற்பமாகவே கிடைத்துள்ளன. ஓரிரு ஸ்தாபனங்கள் இவர்களுக்கு உதவ முன்வந்துள்ளன. எனினும் யாழ்ப்பாணக் குடாநாட்டில் மனவளர்ச்சி குன்றிய சிறுவர்களுக்கு உதவும் அமைப்புக்கள் போதியளவு வளர்ச்சிபெறவில்லை என்றே பலரும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

1990 ஆம் ஆண்டுக்குப் பின்னர் பிறந்த மனவளர்ச்சி குன்றிய சிறுவர்களின் எதிர்காலம் குறித்த கருத்துக்கள் பல ஆய்வாளர்கள் மத்தியில பேசப்பட்டுள்ளன.

குறிப்பாக சைவசமய நிறுவனங்கள் இச்சிறுவர்கள் தொடர்பான பணிகளில் போதிய அக்கறை கொள்ளவில்லை என்ற குற்றச்சாட்டு பலகாலமாக நம்மவர்கள் மத்தியில் நிலவி வந்துள்ளது.

இக்குறைபாட்டினை நீக்கும் வகையில் யாழ்ப்பாணத்தில் உள்ள புத்திஜீவிகள் சிலர் இணைந்து கோண்டாவில் சிவபூமி அறக்கொடை நிலையத்தின் அனுசரணையுடன் பிறப்பால் மனவளர்ச்சி குறைந்த சிறுவர்களுக்கான நவீன பாடசாலை ஒன்றை உருவாக்கி வருகின்றனர்.

### செய்திக் கட்டுரை

செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகன் தலைமையில் யாழ்ப்பாணம் போதனாவைத்தியசாலை கண்சிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி எஸ். குகதாசன், யாழ்ப்பாண மாவட்ட பதிவாளர் நாயகம் ந.சதாசிவ ஐயர், அதிபர் க.சிவாஜி, அதிபர் ஸ்ரீ விக்னேஸ்வரன், கணக்காளர் கு.விஜயகுருநாதன் போன்ற பிரமுகர்கள் ஒன்றுகூடி செயற்பட்டு சிவகாமி அறக்கொடை அமைப்பினூடாக கோண்டாவில் கிழக்கில் உள்ள அரசடிப் பிள்ளையார் ஆலயச் சந்தியில் இப்புதிய பாடசாலையை உருவாக்கி வருகின்றனர்.

செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன் ஆலயங்களில் நிகழ்த்தி வரும் சமயப் பணிகள், ஆன்மீகச் சொற்பொழிவுகள் ஆகியவற்றில் கிடைத்த அன்பளிப்புகளையும், இங்கிலாந்து, கனடா, ஆஸ்திரேலியா போன்ற பிற நாடுகளில் வாழும் சைவ அன்பர்கள் வழங்கிய உதவிகளையும் பெற்று இப்பாடசாலைக் கட்டடத்துக்கென வழங்கியுள்ளார்.

இப்பாடசாலைக் கட்டடம் எதிர்வரும் ஜூலை மாதம் இரண்டாம் திகதி சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியினால் திறந்து வைக்கப்படவுள்ளது. இப்பாடசாலையில கற்பிக்க என மனவளர்ச்சி துறைசார் பயிற்சிபெற்ற மூன்று ஆசிரியர்களும் நியமிக்கப்படவுள்ளனர். எந்த விதமான மத வேறுபாடுகளும் இன்றி அனைத்து மனவளர்ச்சி குறைந்த சிறுவர்களும் இப்பாடசாலையில் இணைந்து கற்பதற்கு உரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

15 வயதுக்குட்பட்ட மனவளர்ச்சி குன்றிய சிறுவர்கள் ஆரம்பத்தில் இங்கு கற்பதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ள போதிலும் காலப்போக்கில் இப்பாடசாலையை விடுதி அமைப்போடு கூடிய பாடசாலையாகத் தரம் உயர்த்துவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

80 அடி நீளமும் 20 அடி அகலமும் கொண்டதாக இப்போது இக்கட்டடம் அமைக்கப்பெற்று வருகின்றது. இதுவரை காலத்தில் யாழ்ப்பாணக் குடாநாட்டில் சைவசமய நிறுவனங்களால் இத்தகைய ஒரு பாடசாலை உருவாக்கப்படவில்லை என்ற குறைபாடு இதன்மூலம் நிவர்த்தியாக்கப்படுகின்றது.

### வி.பி.சர்மா

இப்பாடசாலை மாணவர்களது வளர்ச்சியில் யாழ்ப்பாண பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்களும் பங்குகொள்ளக்கூடிய வகையில் பல்கலைக்கழக மருத்துவ பீடத்துக்கு சமீபமாக இப்பாடசாலை அமைய வேண்டும் எனப் பலரும் கருதிய காரணத்தால் கொழும்பில் வாழும் ஓர் அன்பர் நன்கொடையாக வழங்கிய 8 பரப்பு நிலத்தில் இப்பாடசாலை நிறுவப்பட்டு வருகின்றது.

இப்பாடசாலையை தக்க விதத்தில் பயன்படுத்தக் கூடிய முறையில் மன வளர்ச்சிக் குறைபாடு உடைய சிறுவர்களை அனுப்பி உதவுமாறு இப்பாடசாலையின் அமைப்பாளர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். இதுவரை இப்பாடசாலையில் சேர்ந்துகொள்வதற்கென 26 சிறுவர்கள் தமது விண்ணப்பங்களை அனுப்பி வைத்துள்ளார்கள் எனவும் தெரியவருகின்றது.

### அழகுக்கலை வகுப்புகள்

யாழ்ப்பாணம்,மே29

பெண்களுக்கான அழகுக்கலை வகுப்புகள் நாளை ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் 3 நாள்களுககு யாழ். மததிய கல்லூரி கேட்போர் கூடத்தில் காலை 9.00மணி முதல் நடைபெறவுள்ளன.

அழகுக்கலை சம்பந்தமான வகுப்புக்களை அழகுக்கலை நிபுணர் திருமதி பிறேமா ஜெகன் நடத்த உள்ளார்.

அழகுக்கலை உட்பட முகப்பரு சிகிச்சை, பொடுகுக்கான சிகிச்சை என்பன தொடர்பாகவும் அங்கு கற்பிக்கப்படும். (ஐ-ரி)

### நீதி நூல்தொகுதி வெளியீடு

வலி.தெற்கு,மே29

இணுவில் பரராசசேகரப் பிள்ளையார் ஆலய மஹோற்சவத்தை முன்னிட்டு. இணுவில் அண்ணா நிறுவன அதிபர் பொ.நடராஜா, ஒளவையார் அருளிய நீதி நூல் தொகுதியினை இலவசமாக வெளியிட்டு வழங்கியுள்ளார்.

கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி உப அதிபர் ஆறு.திருமுருகன் இந்த நூலை வெளியிட்டு வைததார்.

இன்றைய அறிவுலகம் விஞ்ஞானத்தை வளர்த்ததே தவிர மெய்ஞ்ஞானத்தை வளர்க்கத் தவறிவிட்டது. அறத்தமிழ் நூலான இந்நூல் ஒவ்வொருவரையும் ஆத்மீக வழியில் நெறிப்படுத்தி மெய்ஞ்ஞானத்தை வளர்க்கும் என்று ஆறு. திருமுருகன் நூல் வெளியீட்டின்போது எடுத்துக் கூறினார்.

(எ-152)

## சின்னஞ்சிறு விளம்பரங்கள்

### விற்பனைக்கு

றேசிங் சைக்கிள் Ulgetra (Mountin) மற்றும் சிறிய Lumala (24") சைக்கிள் மற்றும் கட்டில்கள் (குறுக்குச் சட்டங்கள் இல்லாதவை) விற்பனைக்குண்டு. சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் மட்டும் பார்வையிடலாம். தொடர்பு:இல.41, றக்கா லேன், யாழ்ப்பாணம். (32183)

Toyota Hiace LH113, Super G.L. Auto Dual A'C விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு: 134, இராசாவின் தோட்டம் வீதி, யாழ்ப்பாணம். T.P.:021-222 5145. (32390)

கொக்குவிலில் கே.கே.எஸ். வீதியில் 6 பரப்புக் காணியில் 9 அறைகள் கொண்ட பெரிய மாடிவீடு உடன் விற்பனைக்கு உண்டு. பெரிய அளவிலான அலுவலகம், களஞ்சியம், வைத்தியநிலையம் போன்றவற்றுக்கு உகந்தது. தொடர்பு:விளம்பர இல:2276, மே/பா உதயன். (32306)

"லைன் கட்" பொமேரியன் நாய்க் குட்டிகள் (2½ மாதம்) விற்பனைக்கு உண்டு. தொடர்பு: S.கிருஷ்ண மோகன், மான்ஸ் வீதி, உடுவில் மேற்கு. (32426)

வெளிநாட்டில் இருந்து கொண்டு வரப்பட்ட Panasonic NV-MS4E மொடல் வீடியோ கமராவும், Canon 800X டிஜிற்றல் ZOOM காம்கோடர் LCD மொனிற்றருடனும் விற்பனைக் குண்டு. தொடர்பு:K.K.வாசவன், 186, K.K.S. வீதி (வேதக்கோயில் அருகில்), கொக்குவில்.T.P.:222-3912. (32418)

T.V.S. Champ பெண்களுக்கான சிறியரக மோட்டார் சைக்கிள் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: மா.குணசிங்கம், சங்கானை மேற்கு, பண்டத்தரிப்பு, வடலியடைப்பு. (32413)

நல்லின ஆண் அல்ஷேசன் நாய்க குட்டிகள் எம்மிடம் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:த.பாலசூரியன், இல.147, நாவலர் வீதி, மனோகராச் சந்தி, யாழ்ப்பாணம்.T.P.:3459. (32416)

உறுதியான முறையில், நீண்ட காலப் பாவனைக்குரிய 8' Digital dish antanna (LNBF மற்றும் Stand உடன்) விற்பனைக்குண்டு. தொடர்பு:J.J.மைக்கல், 66, சப்பலவீதி, யாழ்ப்பாணம். (32414)

தரமான Prima Broiler மற்றும் பேட்டுகக்குஞ்சுகள் 07.06.2004 பிற்பகல் விநியோகிக்கப்படும். பருத்தித்துறைக் கிளையிலும் Suddi Farm வட்டுக் கோட்டையிலும் பெற்றுக்கொள்ளலாம். முன்கூட்டி பதிவுசெய்யவும். தொடர்பு:க.தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு),19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (32515)

### மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம், வயது 37, 5'4" உயரம், பாவம் மிகக் குறைந்த திருவாதிரை நட்சத்திரமுடைய லண்டன் பிரஜாவுரிமையுடையவருக்கு பொருத்தமான மெல்லிய, அழகிய மணமகள் தேவை. (மணமகன் லண்டன் பலகலைக்கழகத்தில பொறியியல்துறையில் சித்திபெற்றவர்). தொடர்பு: வி.இல.2279,மே/பா உதயன். (32402)

---

## சுத்திகரிப்பு தொழிலாளர் தேவை

சுத்திகரிப்பு தொழிலாளர் உடனடியாக பெயர்களைப் பதிந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். வயதெல்லை 20-40 வரை.

**கிளீன்வெல்,**

866, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
(32427)(42-34-13-38)

---

## அறிவித்தல்

சிற்றூர்திகளுக்கான வாகன வரிப்பத்திரம் பெறுவதற்கும் எமக்கும் எதுவிதத் தொடர்பும் இல்லை. வரிப்பத்திரம் வழங்குவது உதவி அரசாங்க அதிபர் பணிமனையிலேயே ஆகும். அங்கு வழங்கத் தவறுமிடத்து யாழ். மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அறியத் தருகின்றேன்.

யாழ். மாவட்ட தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கங்களின் தலைமைச் செயலகம்.
27.05.2004

பொ.கெங்காதரன்
தலைவர்
(32435)(34-13-38)

---

வட்டுக்கோட்டை - கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம்

## பொதுக்கூட்ட அறிவித்தலும் 01.01.2001 தொடக்கம் 31.12.2001 வரையிலான கணக்காய்வு அறிவித்தலும்

மேற்படி சங்கத்தின் (லிப்கோ) பொதுக்கூட்டம் 26.06.2004 சனிக்கிழமை காலை 9 மணிக்கு வட்டு.மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இப்பொதுக்கூட்டத்திற்கு கொண்டுவர விரும்பும் பிரேரணைகளை இவ்அறிவித்தலிலிருந்து 14 நாள்களுக்குள் வட்டுக்கோட்டை கால்நடை வைத்தியஅதிகாரி பணிமனையில் இயங்கும் தற்காலிக சங்கப் பணிமனையில் கடமைநேரத்தில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

01.01.2001 தொடக்கம் 31.12.2001 வரையான கணக்காய்வு காலத்தில் சங்கத்தில் பேணப்பட்டு வந்த சில ஆவணங்கள் தற்பொழுது சங்கத்தில் இல்லாதமையினால் அங்கத்தவர் தமது அங்கத்துவத்தை உறுதிப்படுத்திக் கொள்வதோடு சங்கத்தோடு கொடுக்கல் வாங்கல்களை மேற்கொண்டவர்கள் அந்த நடவடிக்கை தொடர்பான விடயங்களை 12.06.2004இற்கு முன்னர் நேரில் சமுகமளித்தோ அல்லது கடிதமூலமாகவோ உறுதிப்படுத்திக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

நிர்வாகத்தினர்
வட்டுக்கோட்டை
கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம். வட்டுக்கோட்டை.
(C/35276)(40-34-13-38)

---

சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்
(வரையறுக்கப்பட்டது)

## பொதுமுகாமையாளர் பதவிக்கான வெற்றிடம்

1. சம்பளத் திட்டம்: 5250 - 7750
   120X10 - 130X10
   (கூ.வே.ஆ.சுற்று நிருபம் 31/99 இன் படி 101/8)
2. வயது: 25 வயது தொடக்கம் 50 வரை
   (சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை பொருந்தாது)
3. விண்ணப்ப முடிவு திகதி: 07.06.2004
4. பிணைப்பணம்: 15000/-
   ஆதனம்: 25000/-
5. 1. சங்க எல்லைப் பரப்பில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
   2. சங்கத்தில் ரூபா 10/- செலுத்திப் பெற்றுக்கொண்ட விண்ணப்பப் படிவத்தில் மாத்திரம் விண்ணப்பிக்கவேண்டும்.
   3. மேலதிக விவரங்களைச் சங்கப் பணிமனையில் அலுவலக நேரத்தில் அறிந்துகொள்ளலாம்.
6. வேறு சங்கங்களில் இருந்து விண்ணப்பிப்பவர்கள் தங்களுடைய விண்ணப்பங்களைத் தங்களுடைய சங்கத்தினூடாக விண்ணப்பிக்க வேண்டும்.
7. விண்ணப்பங்கள் *தலைவர், சாவகச்சேரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் - வரையறுக்கப்பட்டது, பிரதான வீதி, சாவகச்சேரி* என்ற முகவரிக்குப் பொதுமுகாமையாளர் பதவிக்கான விண்ணப்பம் எனக் கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் எழுதப்பட்டு பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைக்கப்படல்வேண்டும்.
8. அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்:

அ. முகாமை மேற்பார்வை மட்டத்திலான பதவி ஒன்றில் கூட்டுறவு ஊழியரின் 7ஆவது சம்பளத் திட்டத்தில் 3 வருடத்திற்குக் குறையாத அனுபவம் அல்லது அதே தகைமையான பதவியில் கூட்டுறவு ஊழியர் 8ஆவது சம்பளத் திட்டத்தில் 6 வருடத்திற்குக் குறையாத அனுபவம் இருத்தல்வேண்டும்.

அல்லது

ஆ. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டதாரியாக இருத்தல் வேண்டும் அல்லது அதற்குச் சமமான தரமான தகைமைகள் உடையவராக இருத்தல் வேண்டும். அத்துடன், அவர் அங்கீகரிக்கப்பட்ட ஒரு வர்த்தக / தொழில்துறை ஸ்தாபனத்தில் முகாமை மட்டப் பதவியில் 4 வருடத்திற்குக் குறையாத அனுபவம் உடையவராக இருத்தல்வேண்டும்.

அல்லது

இ. கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திரம் (உயர் தரம்) சான்றிதழ் / க.பொ.த. (உயர்தரம்) மூன்று பாடங்கள் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக தொழில் ஸ்தாபனம் ஒன்றில் முகாமை மட்டத்திலான பதவியில் 6 வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

கண்டி வீதி,
சாவகச்சேரி.

தலைவர்
சாவகச்சேரி ப.நோ.கூ. சங்கம்.
(சி-35274)(24-34-13-38)

---

### வாடகைக்குத் தேவை

நெல்லியடிப் பகுதியில் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள சிறிய உணவகத்திற்குக் கடை அல்லது இடவசதி வாடகைக்குத் தேவை.

தொடர்புகளுக்கு:
"விபுஷா பல்பொருள் வாணிபம்",
நாவலர் மடம், கரவெட்டி. Tel: 0776314193.
(32409)

---

## சட்டக்கல்லூரி அனுமதிப்பரீட்சை

பரீட்சை வழிகாட்டல் வகுப்புக்கள்
**29-05-2004, 30-05-2004**
ஆகிய திகதிகளில் இடம்பெறும்.

**யாழ்ப்பாணக் கல்லூரி,**
பட்டப்படிப்புகள் பிரிவு,
464.ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சி-35271)

---

### விற்பனைக்கு

45 நாள்கள் நிரம்பிய, பூச்சி நக்கப்பட்ட பொமனேரியன் (ஆண், பெண்) நாய்க்குட்டிகளும் ஒன்றரை வயது நிரம்பிய ஜப்பானிஸ்பிற்ஸ் ஆண்நாயும் விற்பனைக்குண்டு.
தொடர்பு:
**தரன் பற்றி சார்ஜ்,**
நவாலி வீதி, ஆனைக்கோட்டை.
(32410)

---

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

29-05-2004

முகுந்தன்-சோபனா தம்பதிகளின் செல்வப் புதல்வன்

## அபிசேக்



இன்று (29.05.2004) சனிக்கிழமை இல.118, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணத்தில் தனது முதலாவது பிறந்த தினத்தை வெகு சிறப்பாகக் கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா, பப்பா, மம்மா, பெரியமாமா, குட்டி மாமா அன்ரா, சித்தப்பா, தங்கா, சின்னம்மம்மா, சுலக்சன், சுஜீவன், கொழும்பில் வசிக்கும் அப்பம்மா, சித்தப்பாமார், பாட்டி, அத்தை, கிசோளா, லண்டனில் வசிக்கும் அப்பப்பா, பிரான்ஸில் வசிக்கும் சின்னமாமா ஆகியோர் பல்கலையும் பெற்று பல்லாண்டு வாழ வாழ்த்துகிறார்கள்.

118, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

தகவல்:
பப்பா (ஜெயம்).

---

## வாழ்த்துக்கள்

2004.05.24 ஆம் திகதி யாழ்.மாவட்ட நீதிபதி இ.த.விக்னராசா அவர்கள் முன்னிலையில் சமாதான நீதிவான்களாகச் சத்தியப் பிரமாணம் செய்துகொண்ட எமது அன்புக்குரிய சக சுகாதார முகாமைததுவ உதவியாளர்கள் (யாழ்.போதனா வைத்தியசாலை)



திரு.அ.எ.பீரிஸ்



திரு.ப.ஆனந்தகுமார்

ஆகியோரை மனதார வாழ்த்துகிறோம்.

போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

ப.மகேந்திரதாஸன், நா.மோகனதாஸ், செ.பிரசாத், அ.பி.குணசீலன், சீ.நா.சிவராசா.
(C-35255)(40-34-13-38)

---

## தென்னிந்தியத் திருத்தல யாத்திரை

### பகவான் ஸ்ரீ சத்யசாயி பாபாவின் தரிசனம்

**தரிசிக்கும் புனித ஸ்தலங்கள்**

※ புட்டபர்த்தி பகவான் ஸ்ரீ சத்யசாயி பாபா தரிசனம், திருப்பதி, சென்னை, மகாவலிபுரம், மெரீனாபீச், காஞ்சிபுரம் வரதராஜப் பெருமாள், சிதம்பரம் நடராஜர், தில்லை காளி அம்மன், திருவாரூர், மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி, பூம்புகார், குற்றாலம், நாமக்கல் ஆஞ்சநேயர், தஞ்சாவூர், தஞ்சைப் பெருங்கோயில், திருச்சி, உச்சிப்பிள்ளையார், ஸ்ரீரங்கம், பழனி, மதுரை மீனாட்சி ஆலயம், மதுரை சுந்தரேஸ்வரர் ஆலயம், திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், வள்ளி குகை, திருத்தணிகை, பழமுதிர்ச்சோலை, சுவாமி மலை, இராமேஸ்வரம், கன்னியாகுமரி, திருவேணி சங்கமம், குமரி அம்மன் ஆலயம், காந்தி மண்டபம், சுவாமி விவேகானந்தர் நினைவாலயம், திருவள்ளுவர் சிலை கடலில் யந்திர படகுமூலம் சென்று பார்த்தல், திருஅரங்கநாத சுவாமி, திருவரங்கம், திருவனைக்காவல், சிவன்கோயில், சமயபுர மாரியம்மன்.

※ யாத்திரிகர்களுக்கு சௌகரியமான விடுதிகளில் தங்குமிட வசதியும், முற்றிலும் குளிரூட்டப்பட்ட சொகுசு வாகனங்களில் வழிகாட்டி துணையுடனான பிரயாணமும், உயர்தர சைவஉணவுகளும் வழங்கப்படும்.

※ இத்திருத்தல யாத்திரை ஜூன் 5 ஆம் திகதி ஆரம்பமாகும். யாத்திரிகர்களின் எண்ணிக்கை வரையறுக்கப்பட்டிருப்பதால் மே மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுகளை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

※ நியாயமான கட்டணம்.

**Metro Travel & Tours (pvt) Ltd,**

No.403 1/2, Galle Road, Wellawatta, Col-06.
Tel:2362766, 4510562, 2361888 Fax:2361888.


*(இலங்கை உல்லாசப் பிரயாண சபையின் அங்கீகாரம்பெற்ற நிறுவனம்)*

(சி-35272)(34-38-13)

# சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து விடைபெற்றார் நாசர் ஹீசேன்

லண்டன்,மே29

இங்கிலாந்து அணியின் முன்னாள் கப்டன் நாசர் ஹுசேன் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளிலிருந்து ஓய்வுபெற்றுள்ளார்.





இவர் தனது ஓய்வு தொடர்பான அறிவிப்பை நேற்றுமுன்தினம் வெளியிட்டார். இதுவரை 96 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ள இவர், 14 சதங்களைப் பெற்றுள்ளார். அத்துடன் 88 ஒரு நாள் போட்டிகளிலும் விளையாடியுள்ளார்.

1999ஆம் ஆண்டு நடைபெற்ற உலகக் கிண்ணப் போட்டியில் இங்கிலாந்து அணி முதல்சுற்றில் வெளியேறியதை அடுத்து அணியின் கப்டன் அலெக்ஸ் ருவேட் தனது பதவியை இராஜினாமச் செய்திருந்தார். இதனை அடுத்தே நாசர் ஹீசேன் இங்கிலாந்து அணியின் கப்டனாக நியமிக்கப்பட்டார். கப்டன் பதவியை ஏற்றுக் கொண்ட இவர், கடந்த ஆண்டு வரைஅணியை முன்னேற்றப் பாதைக்கு இட்டுச் சென்ற போதிலும் கடந்த ஆண்டு தென்னாபிரிக்காவில் நடைபெற்ற உலகக் கிண்ணப் போட்டியின் பின்னர் ஒரு நாள் போட்டிகளுக்கான அணியின் கப்டன் பதவியிலிருந்தும் அணியிலிருந்தும் விலகிக் கொண்டார்.

ஆயினும், டெஸ்ட் அணியின் கப்டனாகத் தொடர்ந்தும் இருந்தார். சிறிது காலத்தின் பின்னர் டெஸ்ட் அணிக் கப்டன் பதவியிலிருந்தும் விலகிக் கொண்ட போதிலும், டெஸ்ட் போட்டிகளில் விளையாடி வந்தார். இவர் 45 டெஸ்ட் போட்டிகளுக்கு (1999- 2003) கப்டனாக இருந்துள்ளதுடன் அவற்றில் அதிக அளவிலான வெற்றிகளையும் பெற்றுக்கொடுத்துள்ளார்.

ஆயினும் அண்மைக்காலமாக நடைபெற்ற போட்டிகளில் இவர் அதிகம் சோபிக்காததை அடுத்துப் பலரின் விமர்சனத்திற்கும் ஆளானார். இவரை அணியில் தெரிவு செய்வது குறித்தும் பல சர்ச்சைகள் ஏற்பட்டதுடன் இவர் அணியிலிருந்து விலக வேண்டுமென்றும் இங்கிலாந்து அணியின் முன்னாள் வீரர்கள் சிலர் வெளிப படையாகவே கருத்துக்கள் தெரிவித்தனர்.

இவ்வாறான விமர்சனங்களால் மனமுடைந்திருந்த நாசர் ஹீசேன் ஓய்வு பெறுவது பற்றிச் சிந்தித்து வந்தவேளையில் நியூஸிலாந்து அணியுடனான 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடருக்குத் தெரிவு செய்யப் பட்டிருந்தார்.இத் தொடரின் முதல் போட்டியின் இரண்டாவது இனிங்ஸில் ஆட்டமிழக்காது 103 ஓட்டங்களை எடுத்த தன் மூலம் தனது திறமை இன்னும் குறைந்து விடவில்லை என்பதை நிரூபித்ததுடன் அணியில் தன்னைத் தெரிவு செய்ததும் சரியானதே என்பதை உணரவைத்தார்.

**- ஜெயஸ்ரீ -**

96 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ள இவர் இன்னும் நான்கு போட்டிகளில் விளையாடியிருந்தால் 100 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியவர்கள் பட்டியலில் இணைந்திருக்க முடியும். ஆயினும் இளம் வீரர்களுக்கு அணியில் விளையாடச் சந்தர்ப்பங்கள் கிடைக்கவேண்டும் என்ற நல்ல எண்ணத்தில்தான் சர்வதேச கிரிக்கெட்போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்றுள்ளார். கிரிக்கெட் விளையாட்டில் இருந்து ஓய்வு பெற்றாலும் கூட எதிர்காலத்தில் 'ஸ்கைஸ் போஸ்ட்' என்னும் நிறுவனத்தின் நேர் முகவர்ணணையாளராகப் பணியாற்றவுள்ளார்.

இந்தியாவின் தமிழ் நாட்டில் பிறந்த நாசர் ஹீசேன் கிரிக்கெட் விளையாட்டை இந்த உலகுக்கு அறிமுகப்படுத்திய இங்கிலாந்து அணிக்கு சுமார் 5 வருடங்கள் கப்டனாக இருந்தமை கூட ஒருசாதனைதானே.

## பிரெஞ்ச் டெனிஸ் போட்டியில்
# வில்லியம்ஸ் சகோதரிகள் அடுத்த சுற்றுக்குத் தெரிவு

பாரிஸ்,மே29

கிராண்ட்சலாம் போட்டிகளில் ஒனறான பிரெஞ்ச் ஓப்பன் ரெனிஸ் போட்டி பாரிஸ் நகரில் நடைபெற்றுவருகிறது.

இதன் பெண்கள்பிரிவில் அமெரிக்க வீராங்கனை வீனஸ் வில்லியம்ஸ், ஜெலீனாவை எதிர்கொண்டார். இதில வில்லியம்ஸ் 6-3, 6-3 என்ற நேர் செட்டில் வெற்றிபெற்றார்.

மற்றோர் ஆட்டத்தில் செரீனா வில்லியம்ஸ் ரஷ்ய வீராங்கனை மரியாவை எதிர்கொண்டார். இதில் செரீனா 4-6, 6-2, 6-4 என்ற செட்கணக்கில் மரியாவைத தோற்கடித்தார்.

மற்ற ஆட்டங்களில் கேப்ரியோட்டி, மேரி பியர்ஸ் ஆகியோர் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறி உள்ளனர். (10)



# விளையாட்டு

# முரளியைப் போன்ற பந்துவீச்சாளரையே எந்த அணியின் கப்டனும் விரும்புவார்
## அத்தப்பத்து தெரிவிப்பு

கொழும்பு,மே29

உலக சாதனைவீரர் முத்தையா முரளிதரனைப்போல ஒரு பந்து வீச்சாளர் தமது அணியில் இருக்கவேண்டும் என்றே எந்தவொரு கிரிக்கெட் அணியின் கப்டனும் விரும்புவார் என்று இலங்கை அணியின் கப்டன் மாவன் அத்தப்பத்து தெரிவித்துள்ளார்.

அடுத்த மாதம் ஆஸ்திரேலியாவில் நடைபெறவுள்ள இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் முரளிதரன் கலந்து கொள்ள மறுத்து வருகின்றமை தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

முரளிதரனின் 'தூஸ்ரா' பந்து வீச்சுத் தொடர்பாக ஆஸ்திரேலியப் பிரதமா ஜோன்ஹறவார்ட் அண்மையில் தெரிவித்திருந்த கருத்தினால் ஆஸ்திரேலியப்பணத்தைப் பகிஷ்கரிக்கப் போவதாக அவர் தெரிவித்திருந்தார்.

இவ்விடயத்தில் முரளி என்ன முடிவு எடுத்தாலும் அதனை நான் மட்டுமன்றி அணியின் ஏனையவீரர்களும் ஏற்றுக்கொள்வோம். ஆனால், ஒரு கப்டனாகக் கருத்துக் கூறினால் முரளிதரனும் சுற்றுப்பயணத்தில் கலந்து கொள்ள வேண்டும் என்றே விரும்புவேன் எனத்தெரிவித்துள்ளார்.

ஆஸ்திரேலியப் பிரதமரின் கருத்தினால் எமது அணியில் உள்ள வீரர்கள் அனைவரும் மிகவும் குழப்பமடைந்துள்ளோம் எனவும் அத்தப்பத்து மேலும் தெரிவித்துள்ளார். (ப-10)




# மூன்று நாடுகள் பங்குகொள்ளும் ஒருநாள் போட்டிகள் ஹொலண்டில்

புதுடில்லி,மே29

இந்தியக் கிரிக்கெட் அணி ஜூலை 16 ஆம் திகதி தொடக்கம் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதிவரை இலங்கையில் நடைபெறவுள்ள ஆசிய கோப்பை போட்டியில் பங்கேற்ற பின்பு ஹொலண்டில் நடைபெறவுள்ள இந்தியா, பாகிஸ்தான், ஆஸ்திரேலியா ஆகிய 3நாடுகள் பங்கேற்கும் ஒரு நாள் போட்டியில் கலந்துகொளள வுள்ளது.

3 நாடுகள் பங்குபற்றும் கிரிக்கெட ஓகஸ்ட் மாதம் 22 ஆம் திகதி முதல் 29 ஆம் திகதி வரை நடைபெறும். ஒவ்வொரு அணியும் மற்ற அணியுடன் ஒரு முறைதான் மோதும்.

இப்போட்டி இறுதி ஆட்டத்தையும் சேர்த்து 4 ஆட்டங்களைக் கொண்டது என்று இந்தியக் கிரிக்கெட் வாரியத்தின் இணைச்செயலாளர் தெரிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து இந்திய கிரிக்கெட் அணி செப்ரெம்பர் மாதம் இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் செய்து 3 ஒருநாள் போட்டியில் விளையாடவுள்ளது.

அதன் பின்பு சாம்பியன் டிராபி போட்டியிலும் இந்திய அணி விளையாடவுள்ளது. (10)

# ஒருநாள் போட்டித் தொடரை ஆஸ்திரேலிய அணி வென்றது

ஹராரே,மே29

ஆஸ்திரேலிய - சிம்பாப்வே அணிகளுக்கிடையில் சிம்பாப்வேயில் நடைபெற்றுவரும் ஒருநாள் போட்டித் தொடரை ஆஸ்திரேலிய அணிகைப் பற்றியது.

இரு அணிகளுக்கும் இடையிலான மூன்று போட்டிகள் கொண்ட தொடரில் இரண்டு போட்டிகளில் வெற்றியீட்டியதை அடுத்து ஆஸ்திரேலிய அணி தொடரைக்கைப்பற்றியது.

கடந்த 25ஆம் திகதி நடைபெற்ற முதலாவது போட்டியில் 7 விக்கெட்டுக்களால் வெற்றியீட்டிய ஆஸ்திரேலியா நேற்று முன்தினம் நடைபெற்ற இரண்டாவது போட்டியில் 139 ஓட்டங்களால் வெற்றியீட்டியது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலிய அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 323 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. அணியின் சார்பில் மத்தியு ஹைடன் 87 ஓட்டங்களையும் லீமன் 67 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய சிம்பாபவே அணி அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 184 ஓட்டங்களை மட்டும் பெற்றுக்கொண்டது. அந்த அணியின்சார்பில் பிரண்டன் ரெயிலர் 65 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார்.

மூன்றாவதும் இறுதியுமான போட்டி இன்று நடைபெறவுள்ளது. (10)

## கூடைப்பந்தாட்ட ச்சங்க நிர்வாகிகள் தெரிவு

யாழ்மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கத்தின் இந்த ஆண்டுக்கான புதிய நிர்வாகிகள் தெரிவு அண்மையில் இடம் பெற்றுள்ளது.

தலைவராக எஸ்.டிலான், செயலாளராக எஸ்.அகிலன், பொருளாளராக பி.அன்சலம் ஆகியோர் தெரிவுசெய்யப பட்டுள்ளனர்.

(10-ரி)

# விளையாட்டு நிகழ்வுகள்

மீசாலை நாவலர் முன்பள்ளியின் மெய்வன்மைப் போட்டி இன்று பிற்பகல் 2மணிக்கு மீசாலை வெள்ளை மாவடிப் பிள்ளையார் கோயில் வீதி மைதானத்தில் சி.ஜெயக்குமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

முதன்மை விருந்தினராக தென்மராட்சி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் சு.பாக்கியராசா கலந்து கொள்வார். (10-117)

★ ★ ★

தென்மராட்சி,மே29

மட்டுவில் தெற்கு தேனொளி முன்பள்ளியில் மெய்வன்மைப் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு முன்பள்ளி அபிவிருத்திச் சபைத் தலைவர் ப.சுதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

முதன்மை விருந்தினராக தென்மராட்சி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் சு.பாக்கியராசாவும் சிறப்பு விருந்தினராக தென்மராட்சி பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் ச.வீரசிங்கமும கலந்து கொள்வார். (10-117)

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீநாராயண சனசமூக நிலையமும் மறுமலர்ச்சி விளையாட்டுக் கழகமும் நடத்தும் பாலர் பாடசாலை விளையாட்டுக்களும் பரிசளிப்பு விழாவும் நாளை ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வின் முதன்மை விருந்தினர்களாக யாழ்.போதனா வைத்திய சாலையின் வைத்திய கலாநிதி சி.இராகவனும், யாழ்மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதியும் கலந்து கொள்வார்கள். (ஒ-ரி,15)

★ ★ ★

கல்வியங்காடு கஸ்யோ பாலர் பாடசாலையின் 4 ஆவது ஆண்டு விளையாட்டுவிழா நாளை பி.ப. 2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் அ.ராகவன் தலைமையில் இடம்பெறும்

இந்நிகழ்வில் கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் பிரதிப் பணிப்பாளாரி.பாலசுப்பிரமணியம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

(எ-180)

## கும்ளே, ஹர்பஜன் பந்து வீச்சுக் குறித்து பட்டேல் கருத்து

இந்திய அணியின் சூழல்பந்து வீச்சாளர்களான அனில்கும்ளே, ஹர்பஜன்சிங் ஆகிய இருவருக்கும் விக்கெட் காப்பாளராகப் பணியாற்றுவது மிகவும கடினம்என்று இந்திய டெஸ்ட் அணியின் விக்கெட்காப்பாளர் பார்த்திவ் பட்டேல் தெரிவித்துள்ளார்.

இருவரும் பல்வேறு விதமாகப் பந்துகளை வீசக்கூடியவர்கள் என்று குறிப்பிட்ட அவர், நடைபெற்று முடிந்த பாகிஸ்தான் அணியுடனான தொடரில் நான்நிறைய அனுபவங்களைப் பெற்றுக் கொண்டேன் என்றும் துடுப்பாட்டத்தில் நான் அனுபவம் பெற்றேன் என்றும் தெரிவித்துள்ளார்.

விக்கெட் காப்பாளர்களைப் பொறுத்த வரையில் ஆஸ்திரேலிய அணியின் கில்கிறிஸ்டையே முன்மாதிரியாக எடுத்து வருகிறேன் எனவும் பட்டேல் தெரிவித்துள்ளார்.

(10)

# கேள்வி அறிவித்தல்

## மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்,
## மேலதிக மாகாணக் கல்விப் பணிமனை, யாழ்ப்பாணம்.

1. இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் வட - கிழக்குக் கல்வி அமைச்சின் நிதி ஒதுக்கீட்டிலிருந்து கீழ்க் குறிப்பிட்ட கட்டட வேலையைப் பூர்த்திசெய்ய மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளரும் கேள்விச் சபைத் தலைவியுமாகிய என்னால் கேள்வி அறிவித்தல் செய்யப்படுகிறது.
2. கேள்விச் சபைக் கூடலும் ஒப்பந்தகாரரைத் தெரிவுசெய்தலும் 2004.06.16ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு நடைபெறும். கேள்விப் பத்திரங்கள் வழங்கல் 2004.05.28ஆம் திகதியிலிருந்து 2004.06.10ஆம் திகதி பி.ப. 3.00 மணிவரை வழங்கப்படும். கேள்வி ஆவணங்கள் 2004.06.16ஆம் திகதி மு.ப. 10 மணிவரை ஏற்றுக் கொள்ளப்பட்டு அன்றைய தினம் முற்பகல் 10.30 மணிக்கு கேள்விச் சபை கூடி கேள்விப்பத்திரப் பெட்டி திறக்கப்படும்.
3. ஒப்பந்தகாரர் இக்ராட் (ICTAD) பதிவுப் புத்தகம் உள்ளவராகவும் இலங்கைத் தேசியக் கட்டட ஒப்பந்தகாரர் சங்கத்தின் அங்கத்தவராகவும் இருக்கவேண்டும்.
4. கேள்விப் பத்திரங்களைப் பாடசாலை கட்டடப் பொறியியலாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளவும். மேலதிக தகவல் தேவைப்படின் இங்கு பெற்றுக்கொள்ளலாம்.
5. கேள்விப் பெட்டி திறக்கும் நேரத்தில் விரும்பும் கேள்வியாளர் அல்லது அவரால் எழுத்துமூலம் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி சமுக மளிக்கலாம்.

| 6. பாடசாலையின் பெயர் வேலை விவரம் | மீளளிக்க முடியாத வைப்புப் பணம் | மீளளிக்கக்கூடிய வைப்புப் பணம் | இக்ராட் இலக்கம் |
|---|---|---|---|
| யா/கரந்தன் இராமுப்பிள்ளை வித்தி. நீர்வேலி மிகுதி வேலை கீழ்த்தளமும் முதலாம் மாடியும் 90'x25' | 500.00 | 20,000.00 | M 8 |

7. இவ்வேலையின் மீளளிக்கக் கூடிய, மீளளிக்கமுடியாத பணத்தை யாழ். கல்வித் திணைக்களத்தில் பணிப்பாளர் பெயரில் வைப்புச் செய்து பற்றுச்சீட்டுச் சமர்ப்பித்து ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளவும்.
8. எம்மால் வழங்கப்படும் இரண்டு கட்டட மதிப்பீட்டு அறிக்கைப் பத்திரங்களின் ஒன்று மூலப்பிரதியாகவும், மற்றையது பிரதியாகவும் கொள்ளவேண்டும்.
9. பூர்த்திசெய்யப்பட்ட மூலப்பிரதியும், ஒப்பந்த ஆவணமும் ஒரு கடித உறையிலும், பிரதியை வேறு கடித உறையிலும் இடவும். இரு கடித உறையிலும் மேல் பாகத்தில் பாடசாலை, வேலையின் விவரமும், மூலப்பிரதி அல்லது பிரதி என உறையின் மேற்பாகத்தில் எழுதவேண்டும்.

   இரண்டு கடிதங்களையும் ஒரு பெரிய உறையில் இட்டு மேல்மூலைப் பகுதியில் வேலையின் விவரமும் ஒப்பந்தகாரரின் இறப்பர் முத்திரையும் பொறிக்கப்பட்டு *"தலைவி, கேள்விச் சபை மேலதிக மாகாணக் கல்விப் பணிமனை"* என விலாசமிட்டு யாழ். கல்விப் பணிப்பாளர் அலுவகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 2004.06.16ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு முன் இடப்படவேண்டும்.
10. குறித்த நேரத்துக்குப் பிந்திய கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா. ஆவணங்கள் பிழையாக நிரப்பப்பட்டு, தெளிவற்ற, முரண்பாடான கேள்விப் பத்திரம் நிராகரிக்கப்படும்.
11. தெரிவுசெய்யப்பட்ட கட்டட ஒப்பந்தகாரர் கொடுப்பனவுகளில் 15% வற் வரிமுறை கணிப்பீட்டில் சேர்த்துக்கொள்ளப்படும்.

ஒப்பம்: திருமதி செ.மகாலிங்கம்
மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

(சி-35277) (24-12-38)

## வெள்ளிவிழா நிகழ்வுகள்

சாவகச்சேரி,மே29

அறவழிப் போராட்டக் குழுவின் வெள்ளிவிழா நிறைவு நிகழ்வுகள் எதிர்வரும் 5ஆம் திகதி சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு கைதடி நுணாவிலில் அமைந்துள்ள அதன் தலைமை அலுவலக மாநாட்டு மண்டபத்தில் அறவழிப் போராட்டக் குழுவின் தலைவர் டாக்டர் சு.சி.அருளானந்தம் தலைமையில் நடைபெறவுள்ளன.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ் மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதனும், சிறப்பு விருந்தினர்களாகத் தென்மராட்சிப் பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன், கியூடெக் இயக்குநர் சி.ஜி.ஜெயக்குமார் அடிகளார், மக்கள் வங்கி உதவிப் பிராந்திய முகாமையாளர் து.ரகு, சிறுவர் பாதுகாப்பு அமைப்பைச் சேர்ந்த எஸ்.பேரின்பநாயகம், தென்மராட்சி வலயக் கல்வித் திணைக்கள உதவிக் கல்விப் பணிப்பாளர் கே.ஆர்.டேவிட், யாழ் மாவட்ட அரசசார்பற்ற நிறுவன இணையத் தலைவர் வி.ஸ்ரீசக்திவேல் ஆகியோரும் கலந்துகொள்வர்.

(எ-31)

## மீளக்குடியமர்ந்தோருக்கு கடனுதவிகள்

தென்மராட்சி,மே29

சாவகச்சேரி, டச்சு வீதி ஸ்ரீபழனி சிக்கன கடன்வழங்கு கூட்டுறவுச் சங்கத்தினர் கடந்த இரண்டு வருட காலப்பகுதியில் மீளக்குடியமர்ந்த சங்க அங்கத்தவர்களுக்கு ஒரு லட்சத்து 25 ஆயிரம் ரூபாவினைக் கடனாக வழங்கியுள்ளனர்.

வியாபாரம், வீடு புனரமைப்பு, சுயதொழில் முயற்சி போன்றவற்றுக்கு 5 ஆயிரம் ரூபா தொடக்கம் 20 ஆயிரம் ரூபா வரை கடன்கள் வழங்கியுள்ளதாகச் சங்கச் செயலாளர் திருமதி பரிமளம் வைத்திலிங்கம் தெரிவித்தார்.

இதேவேளை -

கடந்த ஜனவரி தொடக்கம் ஏப்ரல் வரை தொடர்ச்சியாகச் சங்கத்தின் பொதுக்கூட்டங்களுக்குச் சமுகமளித்த அங்கத்தவர்களுக்கு ஊக்குவிப்புப் பரிசுகள் அண்மையில் வழங்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

(எ-117)


## காணி விற்பனைக்கு

*யாழ்ப்பாணம், இலக்கம் 132, முதலாம் குறுக்கு வீதியில் (01 பரப்பு 6 குழியில்) காணி விற்பனைக்குண்டு. (வேம்படி, மகளிர் கல்லூரி, மத்திய கல்லூரிக்கு அருகில்) மேலே உள்ள முகவரியில், நாளை (30.05.2004) ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணி தொடக்கம் 3.30 மணிவரையும்* அல்லது

**பே.அருளானந்தம் (அருள்)**
27/5, புது வீதி,
கொய்யாத்தோட்டம் என்ற *முகவரியிலும் தொடர்புகொள்ளவும்.*

(32433)(37-24-12-38)


# தென்மராட்சி கிழக்குப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
## பருத்தித்துறை வீதி, கொடிகாமம்
# வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல்

தென்மராட்சி கிழக்குப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினால் கீழ்க் குறிப்பிடப்படும் வேலைகளுக்குத் தகுதியான பதிவுசெய்யப்பட்ட கட்டட ஒப்பந்தகாரரிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன. கீழ்க் குறித்த வேலைகளுக்கான கேள்வி வைப்புப் பணத்தையும் கேள்விப் பத்திரக் கட்டணத்தையும் தென்மராட்சி கிழக்குப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் அலுவலக நேரத்தில் செலுத்திப் படிவத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

1. கேள்விப் பத்திரம் வழங்கப்படும் திகதி: 01.06.2004 - 10.06.2004 வரை
2. கேள்வி ஏற்றுக்கொள்ளப்படும் திகதி: 15.06.2004 மதியம் 12.00 மணிவரை
3. கேள்வியை ஏற்கவோ, மறுக்கவோ இயக்குநர் சபைக்கு அதிகாரம் உண்டு.
4. கேள்விப் பத்திரங்கள் யாவும் உறையிடப்பட்டு *பொது முகாமையாளர், தென்மராட்சி கிழக்குப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், கொடிகாமம்* என்ற முகவரிக்குப் பதிவுத் தபாலில் 2ஆம் பந்தியில் குறிப்பிட்டதற்கமைவாகக் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படல்வேண்டும்.
5. மேலதிக விவரங்களை அலுவலக நேரத்தில் தென்மராட்சி கிழக்குப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| வேலை விவரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத வேலை வைப்புப் பணம் | கேள்விப் பத்திரக் கட்டணம் |
|---|---|---|---|
| 1. கண்டி வீதி, மேல்மாடிக் கட்டடக் குறைவேலை பூர்த்திசெய்தல் | 5000.00 | 1000.00 | 100.00 |
| 2. மதில் அமைத்தலும், மலசலகூடம் அமைத்தலும் | 2000.00 | 250.00 | 50.00 |

தென்மராட்சி கிழக்கு ப.நோ.கூ. சங்கம்,
கொடிகாமம்.
27.05.2004 (சி-35275) (24-12-38)

சி.யோகேந்திரா
பதில் பொது முகாமையாளர்.

# கண்ணீர் அஞ்சலி



## முருகப்பிள்ளை சிவகணேசன் (சிவா)

(முல்லைத்தீவு)

*யாரோடும் இதயம் உறவாடி*
*யாரோடும் இனிய சொல் பேசி*
*யாரோடும் இன்முகத்தோடு வாழ்ந்த நீ*
*யாரால் யாசித்து வெகுதூரம் போனாயோ?*
*உன்பிரிவால் துயர் கொள்ளும்*
*உன் குடும்பம் துயர் பகிர்ந்து*
*உன் ஆத்மசாந்திக்காய்*
*இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

தகவல்:
தமிழர் விளையாட்டுக்கழகம்
(T.S.C.) ஒஸ்லோ நோர்வே.

(32428)(37-24-12-38)

# மரண அறிவித்தல்கள்

முல்லைத்தீவு

## முருகப்பிள்ளை சிவகணேசன் (சிவா)



முல்லைதீவைப் பிறப்பிடமாகவும் நோர்வேயை வசிப்பிடமாகவும் கொண்ட சிவா என அழைக்கப்படும் முருகப்பிள்ளை சிவகணேசன் 13.05.2004 வியாழக்கிழமை நோர்வேயில் உள்ள ஒஸ்லோவில் அகாலமரணமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.05.2004) சனிக்கிழமை ஒஸ்லோவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உறவினர்களும், நண்பர்களும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கரந்தன் (நோர்வே).

(32429) (24-12-38)

## செல்லையா சாமுவல் பாலச்சந்திரன்

(ஸ்தாபகர், Auditing & Taxation Bureau, Nuwara Eliya)



ஈச்சமோட்டையைப் பிறப்பிடமாகவும் "வீனஸ்" நவாலி தெற்கு, மானிப்பாயை வசிப்பிடமாகவும் தற்போது கொழும்பு, வெள்ளைவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா சாமுவல் பாலச்சந்திரன் (ஸ்தாபகர், Auditing & Taxation Bureau, Nuwara Eliya) அவர்கள் 26.05.2004 அன்று இந்தியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி செல்லையா - கனகம்மா தம்பதிகளின் பாசமிகு மகனும் காலஞ்சென்ற திருமதி செல்லத்துரை - மனோன்மணி தம்பதிகளின் பாசமிகு மருமகனும் பத்மினியின் அன்புக் கணவரும் தர்ஷினி (U.K.), தனுஷன் (Germany), தனஞ்ஜன் (Canada), தனீஷன் (மாணவன், பரிதோமாவின் கல்லூரி, கல்கிசை) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் ஷிரான் குட்டியின் அன்புப் பேரனாரும் ரவிஷங்கரின் (U.K.) அன்பு மாமனாரும் காலஞ் சென்ற செல்வச்சந்திரன், செல்வரதி (Canada), செல்வநிதி (யாழ்ப்பாணம்), செல்வமதி (ஆசிரியை, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), இராமச்சந்திரன் (யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஜெயராஜா (பொறியியலாளர் Canada), தவேந்திரன்(இளைப்பாறிய பொலீஸ் உத்தியோகத்தர்), பேர்சி ஜெயக்குமார் (G.T.Z.), சியாமளா (ஆசிரியர், Don Bosco), காலஞ்சென்ற முருகானந்தன் மற்றும் நித்தியானந்தன் (இளைப்பாறிய உத்தியோகத்தர், நீர்ப்பாசனத் திணைக்களம், ஒட்டுசுட்டான்), சியாமளா (Denmark) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (30.05.2004) ஞாயிற்றுக்கிழமை காலை ஜெயரட்ண மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு திங்கள் (31.05.2004) பி.ப. 4 மணிக்கு தகனக்கிரியைகளுக்காகக் கனத்தை பொது மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

*2B, 46th lane,*
*Wellawatte,*
*Colombo - 06.*
*T.P.: - 0112 508000*

தகவல்:-
திருமதி பத்மினி பாலச்சந்திரன்
(மனைவி).

(32432) (24-12-38)

## ஆழ்வாப்பிள்ளை பிரான்சிஸ்

(ஓய்வுபெற்ற மக்கள் வங்கி உத்தியோகத்தர்)

மன்னார் சின்னக்கடையைப் பிறப்பிடமாகவும், கரணவாய் கிழக்கு, நுகவில் கரவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட ஆழ்வாப்பிள்ளை பிரான்சிஸ் 27.05.2004 அன்று இரவு காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆழ்வாப்பிள்ளை - கனகராணி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற இராசையா - பரிபூரணம் தம்பதிகளின் அன்பு மருமகனும் றெஜீனா யோகேஸ்வரியின் பாசமிகு கணவரும் அன்ரன், வரதராசன், வசந்தன், காலஞ்சென்ற மனோகரராசா (டீ லாசால் சகோதரர்), யூஸ்மினி, ராஜேந்திரம், தங்கேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்திற்காக இன்று (29.05.2004) சனிக்கிழமை மு.ப. 10.00மணிக்கு கரவெட்டி சென்மேரிஸ் சோமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நன்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

*'ஈஸ்வரி இல்லம்'*
*நுகவில்,*
*கரணவாய் கிழக்கு,*
*கரவெட்டி.*

தகவல்:
பி.லோகேஸ்வரி
(மனைவி).

(C-35278) (24-12-37)

## சடலம் இனம் காணப்பட்டது

கடந்த புதன்கிழமை நீர்வேலிச் சந்திப் பகுதியில் இடம்பெற்ற லொறி - சைக்கிள் விபத்தில் உயிரிழந்தவரின் சடலம் நேற்று அடையாளம் காணப்பட்டது.

சரசாலை தெற்கைச்சேர்ந்த விக்னேஸ்வரமூர்த்தி முகுந்தராசா (வயது -24) என்பவரின் சடலமே அதுவென சடலத்தைப் பார்வையிட்ட அவரது உறவினர்கள் அடயாளர் காட்டினார்கள். மரணவிசாரணையின் பின்னர் சடலம் அவரது உறவினர்களிடம்நேற்று ஒப்படைக்கப்பட்டது. (ஒ-ரி-15)

# மக்கள் வங்கிக்கிளையொன்றை பண்டத்தரிப்பில் திறக்கக்கோரிக்கை

வலி.தென்மேற்கு,மே29

பண்டத்தரிப்பு பட்டினப் பகுதியில் மக்கள் வங்கியின் கிளை ஒன்றை விரைவில் திறக்க நடவடிக்கை எடுக்குமாறு இப் பகுதியிலுள்ள பொதுநல அமைப்புக்களின் பிரதிநிதிகளும் வர்த்தக சங்கத்தினரும் மக்கள் வங்கியின் யாழ் பிரதேச முகாமையாளரிடம் கடித மூலம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இங்கு மக்கள் வங்கிக் கிளை திறக்கப்படும் பட்சத்தில் பண்டத்தரிப்பு, சில்லாலை, மாதகல், வடலியடைப்பு, பிரான்பற்று, பெரியவிளான், இளவாலை, மாரீசன்கூடல் ஆகிய பகுதிகளில் உள்ள மக்களும் வங்கிச் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு வசதி ஏற்படும். அவர்கள் அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பண்டத்தரிப்பு வர்த்தகர் சங்கம் சங்கானை மக்கள் வங்கிக்கிளை முகாமையாளர் ஊடாக மக்கள் வங்கியின் யாழ். பிரதேச முகாமையாளருக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில்:-

இப்பகுதி வர்த்தகர்களின் நலனை முன்னிட்டு மக்கள் வங்கிக் கிளை ஒன்றை பண்டத்தரிப்பு பட்டினத்தில் விரைவில் திறக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும் என்று வேண்டுகோள் விடுத்துள்ளது.

(எ-135)

காரைநகர் வடக்கு
### அருள் மிகு மருதடி வீரகத்தி விநாயகர் தேவஸ்தானம்
தாரண வருஷ
### மஹோற்சவ விஞ்ஞாபனம் -2004

**பிரதான உற்சவங்கள்**

வைகாசி மாதம் 18 ஆம் திகதி திங்கட்கிழமை (31.05.2004)
காலை 10 மணிக்கு கொடியேற்றம.

வைகாசி மாதம் 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை (06.06.2004)
காலை 7.00 மணிக்கு பெரிய சப்பற வெள்ளோட்டம்
இரவு 9.00 மணிக்கு வேட்டைத்திருவிழா

வைகாசி மாதம் 25 ஆம் திகதி திங்கட்கிழமை (07.06.2004)
இரவு 9.00 மணிக்கு பெரிய சப்பறம்

வைகாசி மாதம் 26 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை (08.06.2004)
ரதோற்சவம் காலை 8.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசை
காலை 10 மணிக்கு ரதாரோகணம்
பி.ப.1.00 மணிக்கு விநாயகப் பெருமானிற்கு பஞ்சமுகஅர்ச்சனை
பி.ப.2.00 மணிக்கு பிராயச்சித்த அபிஷேகம் முதலியன.

வைகாசி மாதம் 27 ஆம் திகதி புதன்கிழமை (09.06.2004)
பகல் 11.00 மணிக்கு தீர்த்தம்
இரவு 8.30 மணிக்கு கொடியிறக்கம் சண்டேசுவரர் உற்சவம்.
ஆசீர்வாதம் ஆசாரிய உற்சவம்

வைகாசி மாதம் 28 ஆம் திகதி வியாழக்கிழமை 10.06.2004
மாலை 5.00 மணிக்கு வைரவர் பொங்கல்

சமயச் சொற்பொழிவு "**விநாயகர் மகத்துவம்**" என்னும் பொருள்பற்றி
பிரம்மஸ்ரீ கலாநிதி கு.சிவராஜ சர்மா D.L.T
(உபமுகாமையாளர், இலங்கை வங்கி, காங்கேசன்துறை)
அவர்கள் 31.05.2004 தொடக்கம் 09.06.2004 வரை தினமும் மாலை 8.00 மணிக்கு சொற்பொழிவாற்றுவார்.

*மருதடி, காரைநகர்* (32456)(36-11-16) பொறுப்புரிமையாளர் சபை.


## ஒலிம்பியா ஜிம்
### உடல் வலுவூட்டல் பயிற்சி நிலையம்

உங்கள் உடலை ஆரோக்கியமாகவும் மெருகேற்றிடவும் சிறந்த பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

பெண்களுக்கான பயிற்சிகள் 01.06.2004 அன்று பி.ப 3.00 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

அலுவலக நேரம்: ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாட்கள்
காலை 5.30 - இரவு 10.00 வரை

T.P: 0777-238506, 0777-166894
பிரதான வீதி, மானிப்பாய். (இலங்கை வங்கி முன்பாக)




மாவை கொல்லங்கலட்டி
### அருள்மிகு ஸ்ரீ வீரகத்திப் பிள்ளையார் கோயில்
### 108 ஆம் வருட பூர்த்தி விழா விஞ்ஞாபனம்

1896 ஆம் ஆண்டு வைகாசி மாத அத்த நட்சத்திரத்தன்று உற்சவமூர்த்தி பிரதிஷ்டை செய்யப்பட்டு நாளை (30.05.2004) ஞாயிற்றுக்கிழமை 108 ஆம் வருட பூர்த்தி தினமாகும்.

எனவே, காலை 9.00 மணிக்கு எம்பெருமானுக்கு அஷ்டோத்திர சத சங்காபிஷேகம் நடைபெறும்.

02.06.2004 புதன்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் காலை 8.00 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

அன்பர்கள் வருக! திருவருள் பெறுக!

*மாவை கொல்லங்கலட்டி,*
*தெல்லிப்பழை.* (32446)(36-11-16) -அறங்காவலர்.


## COMPUTER COLLEGE
### கணனிக் கல்லூரி
E-Mail : krishrks2004@yahoo.co.in

**DIPLOMA COURSES**
- Ms - office.
- Desktop Publishing.
- Video Mixing.
- Web designing.
- Hardware Technology.

**CERTIFICATE COURSES**
- Ms Word.
- Ms Excel.
- Ms Access.
- Ms PowerPoint.
- Ms Frontpage.
- Adobe PageMaker.
- Adobe PhotoShop.
- CorelDRAW.
- Internet & E-Mail.
- HTML.
- Pascal.
- C/C++.
- Foxpro.
- Visual Basic.
- Java.

General Information Technology for A/L Students
GIT
Special offer to A/L Students

- Type Setting
- Scanning
- Printing
- Stencil Cutting
- CD Writing
- Graphics Designing

021-2223497
021-2222827
Director

337, Kasthuriyar Road, Jaffna. Computer College


## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியை திருமதி இ.உருத்திரன்
அவர்களது அன்புத் தந்தை
### இளையதம்பி இராஜதுரை
அவர்கள் இயற்கையடைந்த செய்தி கேட்டு துயரடைவதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

யா/வைத்தீஸ்வராக்கல்லூரி,
யாழ்ப்பாணம். -ஆசிரிய நலன்புரிக் கழகம.
(32450) (36-11-16)

## கூட்டம் ஒத்திவைப்பு

காரைநகர் உதவி அரச அதிபர் பிரிவில் எதிர்வரும் செவ்வாயக்கிழமை நடைபெறவிருந்த ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் தவிர்க்கமுடியாத காரணத்தினால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. அடுத்த ஒருங்கிணைப்புக் குழுக கூட்டத் திகதி பின்னர் அறிவிக்கப்படும் எனக் காரைநகர் உதவி அரசாங்க அதிபரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

## கொடிவாரம் அனுஷ்டிப்பு

சர்வதேச புகைத்தல் எதிர்ப்பு வாரத்தையொட்டி சமுர்த்தி அதிகார சபையினர் நாளை மறுதினம் திங்கட்கிழமை தொடக்கம் அடுத்த மாதம் 7ஆம் திகதி வரையும் கொடி வாரமாக அனுஷ்டிக்கவுள்ளனர்.

கொடி விற்பனை மூலம் கிடைக்கும் பணமானது சமுர்த்தி சமூக அபிவிருத்தி மன்ற நிதியத்தின் ஊடாக பொது சேவைகளுக்கு வழங்கப்படுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (10-117)


**நாகம்ஸ்** சுன்னாகம்



மாதவன், சதா, விவேக் நடித்த
எதிரி
(சி-34180)(32)
காட்சிகள 11.00, 3.00, 7.00
அருள் திரைப்பட காட்சியின்போது தேர்ந்தெடுக்கப்பட்ட அதிர்ஷ்டசாலிகள்
1ஆம் பரிசு 37097
2ஆம் பரிசு 39330
3ஆம் பரிசு 39312
பரிசுக்குரியவர்கள் 1-6-2004இற்கு முன் தொடர்பு கொள்ளவும்.
அடுத்த வெளியீடு
கில்லி

**நிறைஞ்சனாஸ்** சங்கானை
பிரபுதேவா, ஆஷியா, தாமு, ரகுவரன நடித்த
அலாவுதீன்
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (புநே)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45
AMPRICAN Pie
(சி34420)(12)

**லக்சுமி** இணுவில்
3 ஆவது வெற்றிவாரம்...
இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடு
சூரியா (2 வேடங்கள்).
ஜோதிகா நடித்த



பேரழகன்
தினசரி :11.00, 3.00, 7.00, 10.00 (பு.நே.)
(32338)(12)

**ராஜா** யாழ்ப்பாணம்
இலங்கையிலும் இந்தியாவிலும்
ஒரேதின வெளியீடாக
சூர்யா, ஈஷா, மாதவன்,
மீரா ஜஸ்மின், சித்தார்த், த்ரிஷா
மற்றும் பலர் நடித்த



ஆய்த எழுத்து
காட்சி நேரம்:
10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)
(C/34517) (22)


# மரண அறிவித்தல்கள்

## திருமதி சிவநேசன் சரோஜினிதேவி

கோண்டாவில், நெட்டிலிப்பாய் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவநேசன் சரோஜினிதேவி 26.05.2004 புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் வல்லிபுரம் - இரத்தினம்மாவின் அன்பு மகளும் ஐயாத்துரை - பொன்னம்மாவின் அன்பு மருமகளும் சிவநேசனின் அன்பு மனைவியும் பாஸ்கரன்(சுவிஸ்), பிரபாகரன்(சுவிஸ்), கோபிகரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் குணபாலசிங்கம், புண்ணியமூர்த்தி, சிவசக்தி ஆகியோரின் அன்புச் சகோதரியும் திருமதி நிரூபி(சுவிஸ்), திருமதி லோகிதகலா (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (29.05.2004) சனிக்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் காரைககால் இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஐ.சிவநேசன் (கணவர்), பிள்ளைகள்.
*நெட்டிலிப்பாய்,*
*கோண்டாவில்.* (32452))(36-11-16)

## கணபதிப்பிள்ளை தெய்வேந்திரம்பிள்ளை

(Postman, Sub Post Office,Varany)



கரம்பைக்குறிச்சி, வரணியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை தெய்வேந்திரம்பிள்ளை 27.05.2004 வியாழக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் சரஸ்வதிப்பிள்ளையின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை - தெய்வானைப்பிள்ளை அவர்களின் அன்பு மகனும் காலஞ்சென்ற சின்னப்பிள்ளை, வள்ளியம்மை, இராஜரட்ணம் (சைவப்பிரகாச வித்தியாசாலை - பகுதிநேர ஆங்கில ஆசிரியரும், இளைப்பாறிய தபாலதிபரும், வரணி), சின்னாச்சிப்பிள்ளை, தவமணி தேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான கந்தையா, சிதம்பரப்பிள்ளை மற்றும் கந்தசாமி, நல்லம்மா (இளைப்பாறிய ஆசிரியர், வரணி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஜெயகாந்தன் (ஜேர்மனி), ஜெயசீலன் (கனடா), ஜெயரஞ்சன் (லண்டன்), ஜெயச்சந்திரன்(லண்டன்), ஜெயசுதன் (லண்டன்), காலஞ்சென்ற ஜெயசுகி மற்றும் ஜெயதீபா (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தந்தையும் சுதாஷினி, பாலமுகுந்தினி ஆகியோரின் அன்பு மாமனாரும் தனுஷன், திலக்ஷன் ஆகியோரின் அப்பப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.05.2004) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
க.இராஜரட்ணம் (சகோதரர்),
இ.இராகவன் (பெறாமகன்).
*கரம்பைக்குறிச்சி,*
*வரணி.* (32441)(38-11-16-36)

## சிவப்பிரகாசம் ஜோண் இராஜரட்ணம்

(முன்னாள் ஊழியர், யாழ்ப்பாணம் பல நோ.கூ.சங்கம்)



யாழ்.ஈச்சமோட்டையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சிவப்பிரகாசம் ஜோண் இராஜரட்ணம் நேற்று (28.05.2004) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவப்பிரகாசம் மற்றும் சிசிலியா(நவம்) தம்பதியினரின் அன்பு மகனும் பாககியலீலா (லீலா, யா/ப.நோ.கூ.ச.), தேவி ஆகியோரின பாசமிகு சகோதரரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (29.05.2004) சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு புனித அன்னம்மாள் ஆலயத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு, திருப்பலியின் பின்னர் புனித கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*10/5, விதானையார் வீதி,*
*ஈச்சமோட்டை.* (32448)(36-11-16)
தகவல்: நீ.பிலிப்பானந்தம் (சகோதரர்).

## திருமதி வேலும்மயிலும் இலச்சுமியம்மா

(பாக்கியம், ஓய்வுபெற்ற ஆசிரியை)

துன்னாலை வடக்கு, காசிநாதர் வித்தியாலய ஸ்தாபகர் அமரர் மயில்வாகனம் காசிநாதர் - அமரர் நாகமுத்து தம்பதிகளின் மகளும் அமரர் சின்னப்பா வேலும்மயிலும் (ஓய்வுபெற்ற பிரதம எழுதுவினைஞர், இலங்கை மின்சாரசபை) அவர்களின் அன்பு மனைவியுமான திருமதி இலச்சுமியம்மா நேற்று (28.05.2004) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் இராசலட்சுமி, இராஜேஸ்வரி,காசிதாஸன் (டுபாய்), ஜெயலட்சுமி (லண்டன்), ஆனந்தன்(சிவசுப்பிரமணியம் - லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் க.கதிரமலை(விரிவுரையாளர், ATI), செ.கமலநாதன்( முகாமையாளர் வ.பி.போ.ச. பருத்தித்துறை சாலை), கா.சாந்தி (டுபாய்), ச.முருகநாதன் (லண்டன்), சிமதிவதனி (லண்டன்) ஆகியோரின் மாமியாரும் காலஞ்சென்றவர்களான கனகசபாபதி, நமசிவாயம் மற்றும் செ.செல்லம்மா ஆகியோரின அன்புச் சகோதரியும் கிரிஜா, கிரிதரன், கஜேந்திரன்,ஜெனனி, சிந்துஜன், சுஜேன், கிருஸ்ணி, அட்சுதன் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (29.05.2004) சனிக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் துன்னாலை தியான்கூடு மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுகொள்ளவும்.

*வல்லியானந்தம்,*
*துன்னாலை வடக்கு,*
*கரவெட்டி.* (32451)(16-11-36)
தகவல்:
செ.கமலநாதன் (மருமகன்).

## சிவயோகநாதன் பாக்கியலட்சுமி

நெல்லியடியைச் சேர்ந்த சிவயோகநாதன் பாக்கியலட்சுமி அவர்கள் காலமானார்

அன்னார் வைத்திலிங்கம் சிவயோகநாதனின் அன்பு மனைவியும் றேணுகா, விஜயலட்சுமி ஆகியோரின் அன்புத் தாயாரும் க.சிவகுமார் (சுங்கத்திணைக்களம்), S.ரவீந்திரன் (நிலஅளவைத் திணைக்களம்) ஆகியோரின் அன்பு மாமியாரும் வைதேகி, மிதிலா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.05.2004) காலை 10.00 மணியளவில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக ஆலங்கட்டை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
வை.சிவயோகநாதன். (கணவர்).
*ம.ம.வி.வீதி,*
*நெல்லியடி.* (c-35302)(36-11-16)

# மயிலியதனையில் சட்டவிரோதமாக மின்பெற்ற 9 பேருக்கு அபராதம்

வடமராட்சி,மே29

வடமராட்சி கெருடாவில், மயிலியதனைப் பகுதிகளில் சட்டவிரோதமாக மின்சாரம் பெற்ற 9 பேருக்கு பருத்தித்துறை நீதிமன்றம் ஒரு லட்சத்து 35 ஆயிரம் ரூபாவை அபராதமாக விதித்துள்ளது.

இலங்கை மின்சாரசபையின் பருத்தித்துறைப் பிரிவு மின் அத்தியட்சகர் எஸ்.செல்வச்சந்திரன் தலைமையிலான மின்சாரசபை உத்தியோகத்தர்களும், வல்வெட்டித்துறைப் பொலீஸாரும் இணைந்து மேற்கொண்ட திடீர்ச்சோதனையின் போது கெருடாவில், மயிலியதனைப் பகுதிகளில் சட்டவிரோதமாக மின்சாரம் பெற்ற 9 பேர் அகப்பட்டனர்.

பருத்தித்துறை நீதிவான் முன்னிலையில் மேற்படி 9 பேரும் ஆஜர் செய்யப்பட்டபோது அனைவரும் தமது குற்றத்தை ஒப்புக்கொண்டனர். இதனையடுத்து நீதிவான் 9 பேருக்கும் தலா 15 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார்.

சட்டவிரோதமாக மின்சாரம் பெறுவதற்குப் பயன்படுத்தப்பட்ட மின்சார உபகரணங்களும் பறிமுதல் செய்யப்பட்டன. (எ-173)

# வெலிஓயாப் பகுதியில் 2 சிப்பாய்களைக் காணோம்

திருகோணமலை,மே29

வெலிஓயா பகுதியில் கடமையில் இருந்த இரு இராணுவச் சிப்பாய்களைக் காணவில்லை என்று இலங்கை இராணுவ அதிகாரிகள் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுவிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

வடக்குத் திருகோணமலை மாவட்டத்தில் உள்ளது வெலிஓயா. கடந்த புதன்கிழமை மாலையிலிருந்து இந்த இரு சிப்பாய்களையும் காணவில்லை என்று முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. காமினி பண்டார, சரத்குணசேகர ஆகிய இரு சிப்பாய்களுமே காணாமற்போயுள்ளனர். அவர்கள் இருவரும் அருகில் உள்ள காட்டுக்குள் விறகு வெட்டச் சென்றனர் என்றும் அதன் பின்னர் அவர்கள் முகாம் திரும்பவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

# நூலக விஞ்ஞான டிப்ளோமா பயிற்சி நெறிக்கு விண்ணப்பம்

வலி.வடக்கு,மே29

நூலக தகவல் விஞ்ஞான டிப்ளோமா தராதரப்பத்திரப் பயிற்சி நெறிக்கான விண்ணப்பங்களை ஸ்ரீலங்கா நூலகச் சங்கம் கோரியுள்ளது.

கொழும்பு, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் ஆகிய நிலையங்களில் இப்பயிற்சிநெறி தமிழ்மொழி மூலம் நடத்தப்படும்.

விண்ணப்பதாரிகள் பல்கலைக்கழக பட்டச் சான்றிதழ் அல்லது ஜி.சீ.ஈ. உயர்தரத்தில் மூன்று பாடங்களில் சித்தியுடன் ஜி.சீ.ஈ. சாதாரணதரத்தில் ஆங்கிலத்தில் சித்தி அடைந்து இருக்க வேண்டும்.

ஜி.சீ.ஈ. சாதாரண தரத்தில் ஆங்கிலத்துடன் ஆறு பாடங்களில் சித்தி அடைந்திருத்தலுடன், அங்கீகரிக்கப்பட்ட நூலகம் ஒன்றில் மூன்று வருடங்கள் அனுபவத்தை கொண்டிருத்தல்வேண்டும்.

இத்தகையவர்கள் ஆங்கிலத்தில சித்தியடையாது விட்டால் ஆங்கிலத்தில் ஆற்றலை சோதிக்கும் பரீட்சைக்கு தோற்றிச் சித்தியடைய வேண்டும்.

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் தொடர்பு கொண்டு மேலதிக விவரங்களைப் பெறமுடியும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. (எ-86)

## ஏரே நாளில் வாக்களிப்பு

ஆறு மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் ஒரே தினத்தில் ஜுலை 10ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறும். இந்த மாகாண சபைகளுக்கான வேட்பு மனுக்கள் ஏற்றுக்கொள்ளும் நடவடிக்கை பூர்த்தியடைந்துவிட்டது. மத்திய மாகாண சபைக்கும், ஊவா மாகாண சபைக்குமான வேட்பு மனுத் தாக்கல்கள் கடந்த 21 ஆம் திகதி முடிவுற்றன.

மேல்மாகாணம், தென்மாகாணம், சப்ரகமுவ மாகாணம், வடமத்திய மாகாணம் ஆகிய நான்கு மாகாண சபைகளுக்குமான வேட்புமனுத் தாக்கல்கள் நேற்று நண்பகலுடன் நிறைவுற்றன. (க)

## இணக்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருந்து வருகின்றது.

"ஆனால், ஆரம்பத்தில் இடைக்கால நிர்வாக சபை பற்றி மட்டும் பேசலாம். ஆனால், இடையில் இறுதித்தீர்வு பற்றிய பேச்சையும் ஆரம்பிக்கவேண்டும்."- என்று ஜனாதிபதி குமாரதுங்கவும் அவரது அரசுத் தரப்பினரும் வலியுறுத்தி வருகின்றனர்.

இந்த விடயத்தில் முடிவு எட்டப்படாததால், அமைதிப் பேச்சுக்கான நிகழ்ச்சி நிரலைத் தயாரிக்க முடியாது திண்டாடுகின்றது நோர்வேத் தரப்பு.

மாகாணசபைகளுக்கான தேர்தல்களுக்கு முன்னர் இந்த விவாகரத்தில் இருதரப்புக்கும் இடையில் நிலவும் இடைவெளி நிரப்பப்படும் வகையிலான இணக்கத்துக்கு வாய்ப்பில்லை என்பதை சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் உறுதிப்படுத்தியுள்ளன.

கடந்த புதனன்று கிளிநொச்சியில் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனையும் அடுத்தநாள் வியாழக்கிழமை கொழும்பில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவையும் எரிக் சொல்ஹெய்ம் சந்தித்துப் பேசினார். எனினும், அவரது முயற்சியில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏதும் ஏற்படவில்லை.

இதனால், அவர் நேற்று பயன் பெறாத நிலையில் வெறுங்கையோடு அவர் இலங்கையிலிருந்து நோர்வே புறப்பட்டுச் சென்றார். (க)

# இலங்கை - இந்திய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.கே.சிவாஜிலிங்கம், சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோரும் அதில் பங்குபற்றினர்.

இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்பரப்புக்குள் ஊடுருவி மீன்பிடிப்பதால் தமது தொழில் பாதிக்கப்படுவதாக இலங்கை மீனவர்கள் பிரஸ்தாபித்தனர்.

கலந்துரையாடலின் பின்னர் அடுத்த மூன்று மாதங்களுக்கு நடைமுறையில் இருக்கத்தக்கதாக கீழ் காணும் இணக்கம் காணப்பட்டது.

✪ வங்காள விரிகுடாக் கடலில், இலங்கைக் கரையில் இருந்து 3 கடல் மைல்களுக்கு அப்பால் -

✪ பாக்குநீரிணைக் கடற்பரப்பில், இலங்கைக் கரையில் இருந்து ஐந்து கடல்மைல் அப்பால் -

இந்திய மீனவர்கள் மீன்பிடிக்க அனுமதிக்கப்படுவர்.

✪ குறிப்பிட்ட 3 மாதங்களுக்குப் பின் இப்பகுதியில் இழுவைப்படகு மூலம் மீன்பிடித்தலை இருநாட்டு மீனவர்களும் கைவிட்டு, மாற்றுத் தொழில் முறைகளை மேற்கொள்வது என்றும் முடிவு செய்யப்பட்டது.

இது தொடர்பாக ஆராய இந்தியாவில் இருந்து உயர் மட்டக் குழு ஒன்று இலங்கைக்கு விரைவில் விஜயம் மேற்கொள்ளும்.

இந்தச் சந்திப்பை 'கியூடெக்' நிறுவனம் ஏற்பாடு செய்திருந்தது. (கஒ-3)

## யாழ்.மாவட்ட..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கி.சிவநேசன் மற்றும் எஸ்.கஜேந்திரன் ஆகியோரும் யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதியும் கலந்துகொண்டனர்.

யாழ். மாவட்ட மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், அவற்றைத் தீர்ப்பதற்கான திட்டங்கள் மற்றும் எதிர்கால நடவடிக்கைகள் போன்றவை தொடர்பாக இச்சந்திப்பின்போது ஆராயப்பட்டதாக யாழ். மாவட்ட அரசியல்துறை விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-9)

## புலிகள்...

நாள்கள், மாதங்கள் செல்லச் செல்ல அணுகுமுறையிலே ஒரு புதிய - பாரிய மாற்றம் வரும் என்று நான் கருதுகிறேன். ம.தி.மு.கவைப் பொறுத்தவரையில் ஈழத்தமிழர்களின் பிரச்சினைகளுக்காக நாங்கள் என்றைக்கும் போல அதே கவலையோடும், அக்கறையோடும் குரல் கொடுத்து ஈழத்தமிழர்களின் ஏகப்பிரதிநிதிகளாக விடுதலைப் புலிகளைத்தான் நினைக்கின்றோம் - என்றார். (ஒ-4)

## இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

★ லாபத்தில் இயங்கும் அரசு நிறுவனங்கள் தனியார் மயமாக்கப்படமாட்டாது.

★ சீர்செய்ய முடியாத நிலையில் உள்ள நிறுவனங்களை மட்டும் விற்பனை செய்தல் அல்லது மூடல்.

★ ராமர் கோயில் பிரச்சினை நீதிமன்றத் தீர்ப்புக்குக் காத்திருப்பு.

★ பங்கு விற்பனை அமைச்சகம் ஒழிப்பு.

★ பெண்களுக்கு 33 சதவீத இட ஒதுக்கீடு.

★ தனியார்துறையில் தாழ்த்தப்பட்டோருக்கு இட ஒதுக்கீடு.

★ 2003 மின்சார சட்டம் மறு ஆய்வு.

★ தெலுங்கானா மாநிலம் கோரிக்கை பரிசீலனை.

★ மத்திய மாநில உறவுகளை ஆராய புதிய கமிஷன்.

★ பொது நிர்வாக சீர்திருத்தத்துக்கு கமிஷன்.

★ ஜம்மு - காஷ்மீர் மாநில சிறப்பு அந்தஸ்துக்கு உரிய மதிப்பு.


A/L 2005 கணக்கீடு
திரு. பாலவாசன் B.B.A. (F.M.Spl.)
PAPER CLASS
பிரிவு I
Mon., Tue., Thu. - 7-8 a.m.
ஆரம்பம்: 31.05.2004
பிரிவு II
Sat., Sun. - 1.30-3.00
ஆரம்பம்: 30.05.2004 (32391)
விக்னா கல்வி நிறுவனம்

அறிவித்தல்
எமது நிறுவனத்தில் தற்போது கற்கை நெறியினை மேற்கொண்டு வரும் மாணவர்களுக்கான பரீட்சைகள் எதிர்வரும் ஜூன் மாதம் 5ஆம் திகதி நடைபெறவுள்ளதால் அனைத்து மாணவர்களையும் 02.05.2004 இற்கு முன்னதாக அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.
இயக்குநர்: IBMS
இல. 410, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். (சி-35267)

கிறிஸ்ரல் சென்ரர்
நெல்லியடி
ENGLISH CLASS
பிரிவு I (41)
ஆரம்பம்: 30.05.2004
பிற்பகல் 2.30
ஆசிரியர்: S.சடகோபன்
A/L பரீட்சை எடுத்த மாணவர்களுக்கு. (சி-35285)

மெட்டி ஒலி திருமண சேவை
ஞாயிறு தொடர்பு கொள்ளலாம். புதியவர்கள் ஏமாற்றத்தைத் தவிர்க்க முன்பாகவே இலக்கத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
S.பிறேமன்
19, சோமசுந்தரம் அவென்யூ, யாழ்ப்பாணம். T.P.: 0777 283795 (சி-35299)

Jaffna College Institute of Technology
Vaddukoddai, Jaffna, Sri Lanka
The Following Courses Will Commence From 3rd June 2004
Get Open University exemption For our Diploma Courses.
1. Diploma Courses (1 Year full time)
❖ Diploma in Computer Programming & Data Processing
❖ Diploma in Civil Draughtsmanship
2. Certificate Course in Computer Hardware
Duration : 4 months, Fees : 1000/=
3. Computer Certificate Course in Business Applications
❖ MS Word ❖ MS Excel
❖ MS Access & ❖ Power Point
Duration : 4 months, Fees : 2500/=
4. Certificate Course in Printing Technology
❖ Adobe PageMaker ❖ Adobe PhotoShop
❖ Corel Draw
Duration : 4 months, Fees : 2500/=
★ Member of Association of Computer Training Organisations of Sri Lanka (ACTOS)
FOR APPLICATION FORMS AND DETAILS CONTACT:
Director
Jaffna College Institute of Technology
Vaddukoddai.
T.Phone: 060 2213139 Email: jcit@sltnet.lk (சி-35261)

NEW SCIENCE CENTRE
மலிக்கூட்டு வீதி, யாழ்.நகர்
A/L DAY CLASS
கணித, விஞ்ஞானப் பிரிவு
ஆரம்பம்: 31-05-2004
திங்கள் 9 a.m.
CHE.- அன்பழகன்
PHY. ஜெயசீலன், பிரபா
C.Maths-ஜெயந்தன்
Bio. தற்பரன், பொன் திவாகரன் (32319)(32)

BRIGHTMAN
பிறவுண் வீதி நிராவியடி, யாழ் நகர்.
புதிய பிரிவு
3 மாத காலத்தில் சரளமாக உரையாட சிங்களம்
By: லீலாக்கிருஷ்ணன்
இன்று ஆரம்பம்: 29.05.2004 SAT. 4.00 p.m. (32420)

SUBRA (14)
சித்தன்கேணி
SPOKEN ENGLISH and GRAMMAR
பிரிவு II
By: BRITTO
ஆரம்பம்: 02.06.2004
புதன் காலை 7.00 மணி. (சி-35019)

ஈசன் கல்வி நிலையம்
கே.கே.எஸ்.வீதி, கோண்டாவில்.
தனித்துவம் மிக்க எமது ஆசிரியர் குழுவுடன் ஆரம்பமாகின்றது.
A/L 2004 DAY CLASS
கணித, உயிரியல் பிரிவுகள்
பௌதிகவியல்:- திரு. R.தயாளன்
இரசாயனவியல்:- திரு. V.அன்பு
உயிரியல்:- திரு. A.ஞானேந்திரன், திரு. A.தயாபரன்
இ.கணிதம்:- திரு. T.ரஜனி
காலம்:- 01.06.2004 (TUE.) 8.00 மணி.
(32308) -நிர்வாகி.

புதிய பிரிவுகள் ஆரம்பம்
External Degree
2004, 2005 பிரிவுகளுக்கானது
(Jaffna University)
G.A.Q | 1st in Com. | B.A. | B.Com.
Minimum Requirement:- G.C.E. A/L 3 Passes
ஆரம்பம்:- 29.05.2004
CIMA
Foundation Level & Intermediate Level
Medium:- English Exam: May & November
Minimum Requirement: G.C.E. O/L 3 'C' Passes
ஆரம்பம்:- 05.06.2004
aat (Sri Lanka)
Stage I & Stage II
Medium:- Tamil & English Exam: June & December
Minimum Requirement: G.C.E. O/L 5 Passes or G.C.E. A/L 2 Passes
ஆரம்பம்:- 05.06.2004
Further Details
Director
Jaffna College Under graduate Dept.
464, Hospital Road, (Near Commercial Bank), Jaffna.
(C-35237)

MCS
324,பலாலிவீதி, யாழ்ப்பாணம் (பரமேஸ்வராச்சந்தி அருகே, மேல்மாடியில்)
இலவசக்கணனிப்பயிற்சி
ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அரச நிறுவனங்களை கணனி மயப்படுத்துவதில் பெரும்பங்காற்றிய எமது நிறுவனத்தினர் விசேட கணனிப்பயிற்சித்திட்டம் ஒன்றை முன்வைத்துள்ளார்கள்
பதிவுகள் 30.05.2004 இற்கு முன் நேரில்


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 29.05.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.